# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 312 புரட்டாதி 18ஆம் நாள் புதன்கிழமை 04 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 32+6


## ஒருமித்த நாட்டுக்குள் சகலருக்கும் சம உரிமை

மைத்திரி நேற்று நாடாளுமன்றில் உரை

கொழும்பு, ஒக்ரோபர் 4



"பிளவுபடாத ஒருமித்த நாட்டில் ஒற்றையாட்சிக்குள் (ஏக்கிய ராஜ்ஜிய) அனைத்து இனத்தவர்களுக்கும் சம உரிமை வழங்கும் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். புதிய அரசமைப்பின் ஊடாக நாடாளுமன்றத்தின் அதிகாரம் மேலும் பலப்படுத்தப்படும். புதிய அரசமைப்பை நிறைவேற்ற அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களது ஆதரவை வழங்கவேண்டும்"

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டு 70ஆண்டுகள் நிறைவு நிகழ்வை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு அமர்விலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

>> 29

## தீர்வு ஒன்றை வழங்கியே தீரவேண்டும்

நாடாளுமன்றில் ரணில் வலியுறுத்து

கொழும்பு, ஒக்ரோபர் 4



"இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கியே தீர வேண்டும். துரித அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியாமல் போனமைக்கும்முதன்மைக்கட்சிகளின் செயற்பாடும் ஆட்சிக் கட்டமைப்பின் குறைபாடுமே காரணமாகும். இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை பெற்றுக்கொள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்"

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சிறப்பு அமர்வின் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஐக்கிய மக்களாகவே 1948ஆம் ஆண்டு எமக்குச் சுதந் >> 29

## போலியான நாட்டுப்பற்றுடன் செயற்பட்டால் சோகமே முடிவு

நாடாளுமன்றில் சம்பந்தன் இடித்துரைப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 4



"ஆயுதப் போராட்டத்துக்கான காரணங்களாக அமைந்த விடயங்கள் இன்னமும் நீடிப்பதனால் அவற்றுக்கு விரைவாகத் தீர்வு காணப்பட வேண்டும். போலி நாட்டுப் பற்றின் அடிப்படையில் மோசமான நிலமைகளை மேலும் தொடர்வதற்கு யாராவது முயற்சிப்பார்களாயின், அது பெரும் சோகமாகவே முடியும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் எச்சரித்தார்.

நாடாளுமன்றத்தின் 70ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் சிறப்பு அமர்வு நாடாளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இதில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் எல்லா மக்களும் இன, மத வேறுபாடு >> 29

### யாழ். நல்லூர் வாள்வெட்டில் ஒருவர் காயம்

யாழ். ஒக். 4

யாழ்ப்பாணம் நல்லூர், செட்டித்தெருவில் நேற்றுப் பட்டப் பகலில் வாள்வெட்டுக் கும்பல் நடத்திய தாக்கு >> 29

### டெனீஸின் மனு ஒக். 16வரை ஒத்திவைப்பு

யாழ். ஒக். 4

அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கியமைக்கு எதிராக முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் >> 29

### வல்லிபுர ஆழ்வார் இன்று தேரில் பவனி

யாழ்ப்பாணம், ஒக். 4

வடமராட்சி துன்னாலை சிறி வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. காலை >> 29

### மத்திய வங்கி ஆளுநர் வடக்குக்கு வருகிறார்

கொழும்பு, ஒக். 4

மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி இரண்டு நாள்கள் பயணமாக வடக்குக்கு முதன் முறையாக வருகை தர >> 29

### தேசிய உடற்பயிற்சியில் வடக்கு பதக்க வேட்டை

>> 29



'அப்பாவிச் சிங்களவர்களைத் தவறாக வழிநடத்துகிறீர்கள்"

## புதிய அரசமைப்பு விடயத்தில் பீரிஸைக் கடிந்தார் சம்பந்தன்

கொழும்பு, ஒக். 4

புதிய அரசமைப்புத் தொடர்பில் அப்பாவிச் சிங்கள மக்களை நீங்கள் தவறாக வழிநடத்துகின்றீர்கள் என்று மகிந்த அணியைச் சேர்ந்த ஜி.எல்.பீரிஸிடம் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் நேருக்கு நேர் காட்டமாகத் தெரிவித்ததாக, பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இரவுநேர விருந்து >> 29

## இடைக்கால அறிக்கை தீயிட்டு எரிக்கப்பட்டது

விமலின் கட்சி மத்திய மாகாணசபையில் அட்டகாசம்

கொழும்பு, ஒக். 4

புதிய அரசமைப்புக்கான வழி நடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை மத்திய மாகாண சபையில் நேற்றுத் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் மாகாண சபை உறுப்பினர் நிமல் பிரேமவன்ஸவே இடைக்கால அறிக்கையை சபா மண்டபத்தில் >> 29

## 182 தொண்டராசிரியர்களுக்கு வடக்கில் நிரந்தர நியமனம்

கொழும்புக் கல்வி அமைச்சு அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 4

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களில் நிரந்தர நியமனம் வழங்க தெரிவாகிய 182 பேரின் பெயர்ப் பட்டியல் நேற்றைய தினம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு கிடைத்தது.

வடக்கு மாகாணத்தின் 12 கல்வி வலயங்களி >> 04

## தம்பதியைத் தாக்கிவிட்டு 17 பவுண் நகை கொள்ளை

வட்டுக்கோட்டையில் அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக்.4

வட்டுக்கோட்டை பிளவத்தையில் நேற்று அதிகாலை 1 மணிக்கு வீடு ஒன்றுக்குள் வாள்களுடன் புகுந்த கொள்ளைக் கும்பல் அங்கிருந்த தம்பதியைத் தாக்கிவிட்டு 17 பவுண் நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றது என்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொள்ளையர்களின் தாக்குதலில் படுகாயமடைந்த குடும்பத்தலைவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் . >> 04

## வித்தியா படுகொலை வழக்கின் நிரபராதி தொடர்ந்து மறியலில்

ஊர்காவற்றுறை, ஒக். 4

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் நிரபராதி என தீர்ப்பாயத்தால் விடுவிக்கப்பட்டவர், அந்த வழக்கின் சாட்சியத்தை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் தொடரப்பட்ட மற்றொரு வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மாணவி வித்தியா படுகொலை வழக்கின் முதலாவது சந்தேகநபராக பூபால சிங்கம் இந்திரகுமார் கைது செய்யப்பட்டார். மாணவி படுகொலை வழக் >> 29

## புதுக்குடியிருப்பு வீடொன்றில் துப்பாக்கிகள் நேற்றுச் சிக்கின

வீட்டின் உரிமையாளர் கைது

புதுக்குடியிருப்பு, ஒக்.4



புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் வீடொன்றில் இருந்து வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டன. அந்த வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் >> 29




## வாசிப்பு மாத இலச்சினை மைத்திரிக்கு

கொழும்பு, ஒக.4
இந்த மாதம் தேசிய வாசிப்பு மாதமாகக் கடைப்பிடிக்கப்படும் நிலையில் அதற்காக இலச்சினை நேற்று அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு அணிவிக்கப்பட்டது என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது.
இந்த நிகழ்வு அரச தலைவர் செயலகத்தில் தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.
தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் தலைவர் கலாநிதி டபிள்யு. ஏ.அபேசிங்க இலச்சினையை அரச தலைவருக்கு அணிவித்தார்.
தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் பணிப்பாளர் நாயகம் டபிள்யு.சுனில் மற்றும் அதிகாரிகளும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற-ரி4)



# சனநாயகத்தைப் புதைக்கும் கேந்திரமாக நாடாளுமன்று

## சாடுகின்றது மக்கள் விடுதலை முன்னணி

கொழும்பு, ஒக்.4
சனநாயகத்தை பலப்படுத்துவதாக நாடாளுமன்றம் கருதப்பட்டாலும் 70 ஆண்டு கால வரலாற்றை நோக்கும் போது சனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் வகையில் நாடாளுமன்று செயற்பட்டுள்ளது. இலங்கையில் இரத்த ஆறு ஓடுவதற்கு நாடாளுமன்றே பொறுப்புக் கூற வேண்டும்.
இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், எதிர்க்கட்சிப் பிரதான கொறடாவுமான அநுரகுமார திசாநாயக்க நாடாளுமன்றில் தெரிவித்தார்.
இலங்கை நாடாளுமன்றின் 70 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சிறப்பு அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
நாடாளுமன்றின் 70 ஆண்டுகள் நிறைவு தொடர்பாகப் பெருமையாகக் கூறப்பட்டாலும் நாடாளுமன்றின் வரலாறு கசப்பான அனுபவங்களையே கொண்டுள்ளது. ஆட்சியாளர்களின் அரசியல் இலாபங்களுக்காகவும், வழிவாங்கல் செயற்பாடுகளுக்காகவும், அரசியல் நிலைத்தன்மையை தக்க வைக்கும் பிரதான கேந்திர நிலையமாகவே நாடாளுமன்றைக் கருத வேண்டியுள்ளது.
ஆட்சியாளர்களுக்கும் தேவையான சட்டத்தை நிறைவேற்றும் மத்திய நிலையமாகவே நாடாளுமன்றம் உள்ளது. நான்காவது திருத்தச் சட்டம் இதற்கு சிறந்த முன்னுதாரணமாகும். நான்காவது திருத்தத்தின் ஊடாக பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டமையால் நாடாளுமன்ற சனநாயகம் குழித்தோண்டி புதைக்கப்பட்டது. நாடாளுமன்றத்தின் நீண்ட கால வரலாற்றின் உண்மை இதுவேயாகும்.
தேசிய ஐக்கியம் தொடர்பில் பேசுகின்றனர். ஆனால் இலங்கையில் இரத்த ஆறு ஓடுவதற்கான பொறுப்பை நாடாளுமன்றே ஏற்க வேண்டும். 30 வருட கால போரால் சனநாயகம் சீர்குலையவில்லை. சனநாயகம் சீர்குலைந்தமையாலேயே போர் ஏற்பட்டது.
தங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள் எனக் கருதி மலையக தமிழ் மக்களின் வாக்குரிமையை பறித் தெடுத்தனர்.
நாடாளுமன்ற சனநாயகம் தொடர்பில் மார்த்தட்டி கொண்டாலும சனநாயகத்தை குழித்தோண்டி புதைத்த மத்திய நிலையமாக நாடாளுமன்றமே உள்ளது. இனியாவது இந்த நிலைமை மாற வேண்டும். நாடாளுமன்ற சனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும். மூவின மக்களுக்கு சம உரிமை வழங்க வேண்டும் - என்றார். (ற-31)

## அதிபரின் இடமாற்றத்தை நிறுத்துமாறு ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஒக்.4
வவுனியா, இராசேந்திரகுளம் கிராமத்தில் உள்ள பாரதி வித்தியாலயத்தின் அதிபரை இடமாற்ற வேண்டாம் என்று தெரிவித்து மாணவர்களும், பெற்றோரும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இரு ஆண்டுகளுக்கு முன்னர் பாடசாலையின் அதிபராகப் பதவியேற்ற தற்போதுள்ள அதிபர் பாடசாலையைப் பல வழிகளிலும் கட்டியெழுப்பியுள்ளார். தற்போது பாடசாலை ஓரளவு முன்னேற்றம் அடைந்துள்ள நிலையில் அதிபரை இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிபர் இடமாற்றப்பட்டால் மாணவர் வரவில் குறைவு ஏற்படும். பாடசாலையை மூட வேண்டி ஏற்படும். அதனால் அதிபரை இடமாற்ற வேண்டாம் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
நெளுக்குளம் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று ஆர்ப்பாட்டம் செய்தோருடன் கலந்துரையாடினர்.
"அதிபரின் சம்மதத்துடனேயே அவருக்கு வவுனியா, காமினி வித்தியாலயத்துக்கு உப அதிபராக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. பாரதிபுரம் பாடசாலைக்கு பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரியின் அதிபர் இடமாற்றப்பட்டுள்ளார். பாரதிபுரம் பாடசாலை அதிபரின் சேவையை நீடிக்க முடியாது." என்று வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார். (ற-10.101)

## தேர்தலைப் பின்னகர்த்தாது உரிய நேரத்தில் நடத்துங்கள்

### நாடாளுமன்றில் ஹக்கீம் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.4
தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படுவதை உறுதிப்படும் பெரும் கடப்பாடு நாடாளுமன்றுக்கே உள்ளது. மாகாண சபைத் தேர்தல்களை பின்னகர்த்தாது உரியகாலத்தில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
இலங்கை நாடாளுமன்றின் 70 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் விசேட அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
ஜனநாயகம் தொடர்பான நாம் கண்டுள்ள நிலைகள் தொடர்பில் விவாதிக்க வேண்டியுள்ளது. நாடாளுமன்றில் நடக்கும் விவாதங்களின் தரம் படிப்படியாகக் குறைந்துள்ளமை ஏமாற்றம் தருகின்றது.
தங்களைப் பிரதிநிதித்துவம் செய்வோரை மக்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்கின்றனர். அவ்வாறு தெரிவானவர்கள் சரியான முறையில் செயற்படாமையே கடந்த மூன்று தசாப்த காலப் போருக்குக் காரணமானது.
போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் நாட்டின் பல்லின சமூகங்களுக்கிடையிலான உறவுகளைப் பலப்படுத்துவதும், நம்பிக்கையையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதும் தவறவிடப்பட்டுள்ளன. இந்த நிலைமைக்கு இந்த நாடாளுமன்றே வழிவகுத்தமை துரதிர்ஷ்டமானது.
நாடாளுமன்ற பெரும்பான்மை ஆட்சியமைப்பதற்கு முக்கியமானது. ஆனால் மாற்றுக் கருத்துக்களுக்கான அல்லது அதிருப்தியான கருத்துக்கள் தொடர்பான வெளிப்படுத்தல்களைச் செய்வதற்கு சந்தர்ப்பங்கள் குறைவாகவே இருக்கின்றன. இது கவலைதரும் நிலைமையாகும்.
தற்பொழுது புதிய அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதன் ஆரம்ப நிலையில் இருக்கின்றோம். கடந்தகால தவறுகளை தவிர்ப்பதற்காகவே இந்தச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அரச தலைவர் முறை மற்றும் நாடாளுமன்ற முறை தொடர்பில் விவாதிக்க வேண்டிய நிலைமை எமக்கு ஏற்பட்டுள்ளது. எந்தவொரு மறுசீரமைப்பு முன்வைக்கப்பட்டாலும் அது வெளிப்படையானதாக இருக்கவேண்டும். அதேபோன்று அது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். உயர்ந்த தரமுடையதாகவும் இருக்க வேண்டும். கட்சி சார்ந்த அரசியலுடன் இவை மட்டுப்படுத்தப்பட்டவையாக இருக்கக் கூடாது.என்றார். (ற-31)

## பிரிட்டன் அமைச்சர் இலங்கை வருகிறார்

கொழும்பு, ஒக்.4
பிரிட்டனின் ஆசிய, பசுபிக் விவகாரங்களுக்கான அமைச்சர் மார்க் பீல்ட் இந்த வாரம் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.
எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் இலங்கையில் தங்கியிருக்கவுள்ள அவர் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் பல சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார்.
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
மறுசீரமைப்பு, நிலக்கண்ணி வெடி அகற்றல், சட்டவிரோ வனவள வர்த்தகம் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் அவர் பேச்சு நடத்தவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-33)



கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள கட்டடத் தொகுதி ஒன்றில் நேற்று மாலை தீ விபத்து ஏற்பட்டது. தீ அணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## பசுமைப் பூங்கா திட்டம் கைதடியில் ஆரம்பம்

தென்மராட்சி, ஒக்.4
தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவின் பசுமைப் பூங்கா செயற்றிட்டத்தின் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்று கைதடி மேற்கில் நடைபெற்றது.



பிரதேச தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் ஆர்.அன்ரனி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலர் திருமதி தே.பாபு பசுமைப் பூங்காவுக்கென ஒதுக்கப்பட்ட காணியில் மரக்கன்றுகளை நட்டு திட்டத்தை ஆரம்பித்தார். (ற-ரி2, 9)



# குடிதண்ணீர் வழங்குமாறு வீதி மறித்து ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஒக்.4
சுத்தமான குடி தண்ணீர் வழங்கக் கோரி நேற்று வவுனியாவில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பன்றிகெய்த குளம், மரையடித்தகுளம் என்பவற்றில் இந்திய வீட்டுத் திட்டத்தில் குடியிருக்கும் மக்களே ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்கள் 7 ஆண்டுகளுக்கு முன்னர் மரையடித்தகுளம் பகுதியில் தங்க வைக்கப்பட்டனர். தற்போது வறட்சியான காலநிலை நிலவும் நிலையில் அவர்கள் குடி தண்ணீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் அமைக்கப்பட்ட பொதுக் கிணறு, குழாய்க் கிணறு என்பவற்றில் தண்ணீர் வற்றியுள்ள நிலையில் அங்குள்ள ஒரு கிணற்றில் இருந்தே குடி தண்ணீரை அவர்கள் பெறுகின்றனர்.

தமது அடிப்படைத் தேவையான குடி தண்ணீரை வழங்க வேண்டும் என்றும், போக்குவரத்து, காட்டு யானை அச்சுறுத்தல் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தால் ஏ9 வீதியூடான போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரம் தடைப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற ஓமந்தை பொலிஸ் நிலைய உதவிப் பொறுப்பதிகாரி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுடன் கலந்துரையாடினார். மக்களின் உடனடித் தேவையான குடி தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பிரதேச செயலர், மாவட்டச் செயலர் ஆகியோருடன் பேசி இது தொடர்பில் நிரந்தரத் தீர்வு எட்டப்படும் என்றும் அவர் மக்களுக்கு வாக்குறுதியளித்தார். அதையடுத்து மக்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர். வீதிப் போக்குவரத்து பி.ப. 4 மணியளவில் சீரானது. ஆர்ப்பாட்டம் நடத்திய தம்மை அரச அதிகாரிகளோ, மக்கள் பிரதிநிதிகளோ சந்திக்கவில்லை என்று ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் விசனம் தெரிவித்தனர். (ற-10)

# நவம்பர் மாதம் 100 பேருக்கு பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை

## தெல்லிப்பழை மருத்துவமனையில் பதிவுகளை மேற்கொள்ளலாம்

யாழ்ப்பாணம், ஒக்.4
வடக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. அடுத்த மாதம் 100 பேருக்கு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவ்வாறு கலாநிதி அமுதா கோபாலன் தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனை 306 பி1 மாவட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இந்த சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அது தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;
வடக்கு மாகாணத்தில் போராலும், விபத்துக்கள், தீக்காயங்கள் என்பவற்றாலும் பாதிக்கப்பட்டவர்களின் அடையாளங்களைப் போக்கும் வகையில் பிளாஸ்ரிக் சந்திரசிகிச்சைகள் கடந்த ஆண்டு நடத்தப்பட்டது. 40 பேருக்கு சந்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் தற்போது அதன் நன்மையை அனுபவிக்கின்றனர்.

அதன் தொடர்ச்சியாக எதிர்வரும் நவம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் 6 தினங்களுக்கு பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை தெல்லிப்பழை மருத்துவமனையில் நடத்தப்படவுள்ளது. சுமார் 100 பேருக்கு சிகிச்சைகள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்காக அமெரிக்காவில் இருந்து 6 மருத்துவ நிபுணர்களும், 18 உதவியாளர்களும் கொண்ட அணி இங்கு வருகின்றது.

பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்கள் தெல்லிப்பழை மருத்துவமனையுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்வதன் ஊடாக இந்தச் சேவையை இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும் -என்றார். (ற-10,101)

# சிறுவர் தின நிகழ்வு நேற்று வவுனியாவில்

வவுனியா, ஒக.4
பனனாட்டு சிறுவர், முதியோர் தின விழா வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் பல போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளர் பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மனநல மருத்துவர் எஸ். சுதாகரனும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்டச் செயலக சமுர்த்திப் பணிப்பாளர் திருமதி பத்மரஞ்சனும் வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணனும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், முதியோர்கள், மாணவர்கள் , பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி4)





# நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம் ஒக் 4
பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கஜன் மற்றும் சுலக்சனின் நினைவுதினமும் நினைவு பேருரையும் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தில் இடம்பெறுகிறது. இந்த நிகழ்வில் நினைவு பேருரையை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆற்றவுள்ளார். (வ-8)

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

வவுனியா, ஒக்.4
வவுனியாவில் போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நேற்று வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்மடு, பொன்னாவரசங்குளம் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கே உதவிகள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசாவின் 2017ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ற-ரி4)

# அரச சாராயத்தை கறுப்புச் சந்தையில் விற்றவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக்.4
அரச முத்திரை பதிக்கப்பட்ட சாராயத்தை சட்டவிரோதமாக விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் சாவகச்சேரிப் பகுதியில் நேற்று இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 20 போத்தல்களில் அடைக்கப்பட்ட சாராயமும், 45 கால் போத்தல்களில் அடைக்கப்பட்ட சாராயமும் மீட்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

மது ஒழிப்பு தினமான நேற்று நாடு முழுவதும் மது விற்பனை நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. இந்த நிலையில் சாவகச்சேரி நகரப் பகுதியில் சாராயம் விற்கப்படுவததாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அதன் படி தேடுதல்கள் இடம்பெற்றன. இதன் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து சாரயமும் மீட்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (வ-21,26,9)

# மன்னார் மருத்துவமனை சென்று அமைச்சர் குணசீலன் ஆராய்வு



மன்னார், ஒக்.4
வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் நேற்று மன்னார் பொது மருத்து வமனைக்கு திடீர்ப் பயணம் மேற்கொண்டார். மருத்துவமனையில் காணப்படும் தேவைகள் தொடர்பாகவே அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் திருமதி யூட் ரதனி, மருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி அன்ரன் சிசில் உட்பட அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

மருத்துவமனையின் தரத்தையும், வசதிகளையும் உயர்த்துவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

உருவாக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கும் நாடுகளுடனும், கொழும்பு சுகாதார அமைச்சுடனும் தொடர்புகொண்டு திட்டங்களை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4,56)

# எந்த மாவட்டத்தில் பிறந்தோருக்கும் யாழ்ப்பாணத்தில் பிறப்புச் சான்றிதழ்

*ஆரம்ப நிகழ்வு நல்லூரில் இன்று*

யாழ்ப்பாணம், ஒக். 4
இலங்கையில் எந்த மாவட்டத்தில் பிறந்தவர்களும் யாழ்ப்பாணத்தில் பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வு இன்று புதன்கிழமை காலை நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெறுகின்றது.

இலங்கையின் எந்த மாவட்டத்தில் பிறந்தவர்களும் தாம் வசிக்கும் இடத்துக்குரிய பிரதேச செயலகத்திலேயே தமது பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் வசதி பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் ஏற்படுத்தப்பட்டது.

பிறப்புச் சான்றிதழ்களை கடந்த காலங்களில் பிறப்பு நிகழ்ந்த வைத்தியசாலைக்குரிய மாவட்டச் செயலகத்திலும் பின்னர் மாவட்டத்தின் குறித்த பிரதேச செயலகங்களிலும் பெற்றுக் கொள்ளும் வசதி இருந்தது. தற்போது பிறப்பு நிகழ்ந்த மாகாணத்தின் எந்தப் பிரதேச செயலகத்திலும் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையே உள்ளது.

இந்த நிலையில் தற்போது நாட்டின் எந்த மாவட்டத்தில் பிறந்தவர்களும் நாடு முழுவதுமுள்ள எந்தப் பிரதேச செயலகத்திலும் தமது பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தத் திட்டத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வே இன்று காலை நல்லூர் பிரதேச செயலகத்தில் யாழ். மாவட்டச் செயலாளர் நா.வேத நாயகன் தலைமையில் இடம்பெறுகிறது. (வ-101)



*அமெரிக்காவுக்குச் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஐ.நாவின் அமைதியைக் கட்டியெழுப்பும் உதவிப் பொதுச் செயலாளர் ஆஸ்கார் பெர்னாண்டஸ் டரன்ஸ்கோவை நேற்று அவரது அலுவலகத்தில் சந்தித்தார். இதன்போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சுமந்திரன் எம்.பி. எடுத்துரைத்தார். (வ)*



## நல்லிணக்கத்துக்காக இன்று பாத யாத்திரை

நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பாதயாத்திரை ஆரம்பமானது. நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமான பாதயாத்திரை இன்று வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தைச் சென்றடையவுள்ளது.

இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை மற்றும் சின்மயா மிசன் இணைந்து பாத யாத்திரை நிகழ்வை முன்னெடுத்தனர். (ற-ரி2)

## 182...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் தற்போது தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களை இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கும் நோக்கில் கொழும்பு கல்வி அமைச்சால் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. நேர்முகத் தேர்வில் ஆயிரத்து 44பேர் பங்கு கொண்டிருந்தனர்.

அவர்களில் பலர் நேர்முகத் தேர்வில் கோரப்பட்ட தகைமைகளை நிறைவு செய்யவில்லை. சிலர் கோரிய சேவைக் காலப்பகுதியை நிறைவு செய்யவில்லை. மேலும் பலர் கோரப்பட்ட தகைமைகள் மற்றும் சேவைக் காலம் இருந்த போதும் சம்பவத் திரட்டுப் புத்தகப் பிரதியை முன்வைக்கவில்லை. இவ்வாறான பிரச்சினைகளால் அவர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்க முடியாத நிலமையே காணப்படுவதாக கொழும்பு கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் இவை அனைத்தையும் நிறைவு செய்த 182 தொண்டர் ஆசிரியர்களுக்கு மட்டும் ஆசிரியர் நியமனத்துக்கான அனுமதி தற்போது வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கக்பட்டுள்ளது. (வ-101)

## தம்பதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையர்கள் வாள்கள், பொல்லுகளுடன் வீட்டுக்குள் புகுந்துள்ளனர். தம்பதியினர் சத்தமிட்டுள்ளனர். குடும்பத்தலைவர் மீது கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். பெண் கூச்சலிட்டுள்ளார். அவரின் கழுத்தில் வாள் வைத்து சத்தமிட்டால் தகாதமுறையில் வதை புரிவோம் என கொள்ளையர்கள் மிரட்டியுள்ளனர். அந்தப் பெண் அமைதியாகிவிட்டார். அந்தப் பெண்ணின் காதிலிருந்த தோடுகள் கழற்றி எடுக்கப்பட்டுள்ளன.

வீட்டைச் சல்லடையிட்டுத் தேடி 17 பவுண் நகைகளைக் கொள்ளையிட்டு அந்தக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது" என்று விசாரணைகளின் பின் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு நேற்றுக் காலை வந்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

"வட்டுக்கோட்டை பிளவத்தைப் பகுதியில் அடிக்கடி இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அண்மையில் அந்தப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையத்தில் கொள்ளையிடப்பட்டது. கோடரியுடன் சென்ற கொள்ளைக்கும்பல் வர்த்தகரை மிரட்டிப் பணத்தைக் கொள்ளையடித்தனர். இதே போன்று வயோதிபத் தம்பதிகள் இருவர் தனிமையில் இருந்த போதும் அவர்கள் வீட்டுக்குச் சென்ற கொள்ளையர்கள் அவர்களை கடுமையாகத்தாக்கி நகைகளை கொள்ளையடித்தனர்" என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (வ-21)



## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 12.06.1928
ஆண்டவன் அடியில் 02.10.2017

**தேவசகாயம் மைக்கல் இராசையா**

*(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/நாவற்குழி மகா வித்தியாலயம், ஆங்கில ஆசிரியர்)*

பங்களா வீதி, மீசாலையை வசிப்பிடமாகக் கொண்ட தேவசகாயம் மைக்கல் இராசையா தனது 89ஆவது வயதில் (02.10.2017) திங்கட்கிழமை ஆண்டவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் கிறிஸ்ரினா தம்பதியரின் அன்பு மகனும் லூர்துமலரின் அன்புக்கணவரும் மேரி அமலதாஸ் (கொழும்பு), மேரி மெற்றில்டா (கனடா), அன்ரனி (கொழும்பு), மேரி ஜெசில்டா (பிரதேச செயலகம், சாவகச்சேரி), மேரி இமெல்டா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரன் குலாஸ், மேரி பெனடிக்றசன், பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமனும் பப்ரிஸ்கா, பற்றிசன், ஜேன் செடோனி, போல் ரிசாந், ஆஞ்சலோ டி.டயஸ், ஜெவ்னிக்காகாணல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.10.2017) வியாழக்கிழமை இறுதி நல்லடக்க ஆராதனைக்காக சாவகச்சேரி புனித விகோரியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு மு.ப. 11 மணிக்கு இரங்கல் திருப்பலியுடன் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பங்களா வீதி , மீசாலை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 275 8138**



## கடமைகளை பொறுப்பேற்றார் மருத்துவ சபையின் புதிய தலைவர்

கொழும்பு, ஒக்.4

இலங்கை மருத்துவ சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் கொல்வின் குணரத்ன நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு, பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் முன்னாள் பேராசிரியரான கொல்வின் குணரத்ன திறந்த பல்கலைக் கழக வேந்தராகவும் பணியாற்றினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

## திருத்தி வாசிக்கவும்

நேற்றைய உதயன் பத்திரிகையின் 4ஆம் பக்கத்தில் "குற்றங்களில் ஈடுபடுவோரை பொலிஸாருக்குத் தெரியும்" என்று வெளியான செய்தியில் "நல்லூர் பிரதேச சபைச் செயலர்" என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை "நல்லூர் பிரதேச செயலர்" என்று திருத்தி வாசிக்கவும். (ற)

# தமிழ் அரசியல் கைதிகளுக்காக யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், ஒக். 4

அநுராதபுரம் சிறையில் உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 3 அரசியல் கைதிகளின் உறவினர்களும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும இணைந்து நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைமையகம் முன்பாகக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

அரசியல் கைதிகள் விடயத்தில் உரிய தீர்வை உடன் பெற்றுத் தர வேண்டும் என்று அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு மனு ஒன்றையும் கையளித்தனர்.

அநுராதபுரம் சிறையில் நீண்ட காலமாக தடுப்பில் உள்ள 3 அரசியல்க்கைதிகளின் வழக்கு வவுனியா நீதிமன்றில் நடைபெறுகின்றது. அந்த வழக்குகளை அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்ற இடம்பெறும் முயற்சிகளைக் கண்டித்து அரசியல் கைதிகள் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை உடன் நிறைவேற்றவலியுறுத்தியே கவனவீர்ப்பு நடத்தப்பட்டது.

"உணவு ஒறுப்பில் ஈடுபடும் அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு உரிய அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும். அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபடும் எமது உறவுகளின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகம் முன்பான கவனவீர்ப்பு மேற்கொள்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உரிய கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும் என அரசியல் கைதிகளின் உறவினர்கள் ஆகிய நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

வவுனியா நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட தமது வழக்கை வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றக்கூடாது எனவும் தங்களைச் சாவுத் தண்டனைக் கைதிகளுடன் தடுத்து வைக்கக் கூடாது எனக் கோரியும் எமது உரித்துள்ள உறவினர் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர் உணவு ஒறுப்பால் அவர்களது நிலமை கவலைக்கிடமாகவுள்ளது.

வருடக்கணக்கில் எமது பிள்ளைகள் நீதிக்குப் புறம்பாகவே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆட்சி மாற்றத்தின் வாயிலாக எமது பிள்ளைகளுக்கு விடுதலை கிட்டும் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தேர்தலின்போது கூறினார். ஆட்சி மாற்றத்தில் பங்காளிக் கட்சியாகப் பணியாற்றத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எம்மிடம் மைத்திரியை வெல்ல வையுங்கள் அதன் வாயிலாக எமது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என உத்தரவாதம் அளித்தனர். இவை எல்லாவற்றையும் நம்பி வாக்களித்த நாம் எமது பிள்ளைகள் இன்று வரையில் விடுவிக்கப்படாமையால் ஏமாற்றப்பட்டுள்ளோம். என்று அவர்கள் கையளித்த மனுவில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவருக்கான மனுவை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ். குலநாயகம் பெற்றுக்கொண்டார். (ற-10,101)

## காரில் துப்பாக்கி மீட்பு; விசாரணைகள் மும்முரம்

கம்பகா மருத்துவமனைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹைபிரிட் ரக சொகுசு காரினுள் இருந்து நேற்று முன்தினம் மூன்று ரி 56 ரக துப்பாக்கிகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் விசாரணைகளில் கண்டறிந்துள்ளதாக, பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

குற்றச் செயலை மேற்கொள்வதற்காக துப்பாக்கிகள் கொண்டு செல்லப்படும் போது பொலிஸாரின் கண்ணில் பட்டதால் சந்தேகநபர்கள் தப்பிச்சென்றுள்ளனர். கறுப்பு நிற ஹைபிரிட் ரகத்தைச் சேர்ந்த காரானது மத்திய மாகாணத்தைச் சேர்ந்தது என்று அதிலிருந்த இலக்கத் தகடு ஊடாகத் தெரியவந்தது. அந்த இலக்கத்தகடு தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் அது போலியானது என்று தெரியவந்துள்ளது.

காரின் உண்மை இலக்கத் தகட்டை காரிலிருந்து மீட்டுள்ள பொலிஸார் அதன் ஊடாக காரின் உரிமையாளரை கண்டறிந்து விசாரணைகளை நடத்தினர். அவர் காரை பன்னிபிட்டிய பகுதியில் உள்ள வாகன வாடகை நிறுவனத்துக்கு ஒப்படைத்துள்ளமை தெரியவந்துள்ளது. வாகனத்தை வாடகைக்கு விடும் நிலையத்தி லிருந்து மட்டக்குளிப் பகுதியைச் சேர்ந்தவர் அந்தக் காரை கடந்த செப்ரெம்பர் 29ஆம் திகதி வாடகைக்குக் கொண்டு சென்றுள்ளார். பொலிஸார் அவரைத் தேடி வலைவிரித்துள்ளனர். (வ-5,31)

## ரோஹிங்யர்கள் 3ஆம் நாட்டுக்கு அனுப்பப்படுவராம்

கொழும்பு, ஒக். 4

ஐ.நாவின் ஏதிலிகளுக்கான தூதரகம் மற்றும் அரசுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் ரோஹிங்ய ஏதிலிகள் விரைவில் மூன்றாம் நாட்டுக்கு அனுப்பப்படவுள்ளதாக, துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2008ஆம், 2012ஆம், 2013ஆம் மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு வந்த ஏதிலிகள், அமெரிக்கா மற்றும் கனடாவுக்கு நிரந்தர குடியுரிமை அடிப்படையில் ஐ.நா. ஏதிலிகளுக்கான பேரவையின் தலையீட்டில் மூன்றாம் நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

மியன்மாரில் இருந்து இலங்கைக்கு வந்த ஏதிலிகள் நேரடியாக இலங்கைக்கு வரவில்லை. தென்னிந்தியாவில் இருந்து தப்பிச்செல்லும் வழியில் இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிக்கும்போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர் அவர்கள் ஐ.நாவிடம் கையளிக்கப்பட்ட பின்னர், இலங்கை ஐ.நாவுடன் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. ஏதிலிகளுக்கான முழு உதவிகளையும் ஐக்கிய நாடுகளின் ஏதிலிகளுக்கான தூதரகமே மேற்கொண்டு வருகின்றது.

ஓகஸ்ட் 31ஆம் திகதிவரை இலங்கைக்கு 728 ஏதிலிகள் வந்துள்ளனர். இவர்களை மூன்றாம் நாடு ஒன்றுக்கு அனுப்பும் பொறுப்பை ஐ.நா. ஏதிலிகளுக்கான தூதரகம் ஏற்றுள்ளது - என்றார். (வ-5,31)

## கீதாவின் மனு மீது விசாரணை நிறைவு

கொழும்பு, ஒக். 4

கீதா குமாரசிங்க நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மேன் முறையீட்டு மனு மீதான விசாரணைகள் நேற்று நிறைவு பெற்றது.

இலங்கை மற்றும் சுவிற்சலாந்து குடியுரிமை கொண்டிருந்த காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கீதாவின் மேன்முறையீடு தொடர்பில் ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழாம் விசாரணைகளை நிறைவு செய்துள்ள நிலையில், தீர்ப்பு வெளியிடுவதை ஒத்தி வைத்துள்ளது. (வ-5,31)

## காணி வீட்டுடன் விற்பனைக்கு

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் ஆறுகால்மடப்பகுதியில் ஒரு பரப்பு விஸ்தீரண முள்ள காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 076 980 3935

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகில் .வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு - 077 3895 328

## விசேட கருத்தரங்கு

**இலங்கை நிர்வாக சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கான நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்விற்கான விளக்கவுரை**

**திகதி** - 05.10.2017 வியாழக்கிழமை
**இடம்** - உயர்கலைக்கல்லூரி ஆரியகுளச்சந்தி யாழ்ப்பாணம்.
**நேரம்** - 8.30 - 1.00 மணிவரை
**கட்டணம்** - 500/=
**வளவாளர்** - திரு. ஆ.சத்தியமூர்த்தி

**பதிவுகளுக்கு - 077 16 76 457**


## St. Patrick's College, Jaffna

ஆசிரிய சேவை வெள்ளி விழா
வாழ்த்துக்கள்

கல்லூரியின் உயர்தர, சிரேஷ்டபிரிவுகளில் **கணித பாடத்தை** கற்பிப்பதுடன்,**விளையாட்டுத்துறை** வளர்ச்சியிலும் வருடாந்த **பரிசுத்தின** ஏற்பாட்டு ஒழுங்கமைப்பிலும், ஏனைய நிர்வாக அலுவல்களிலும் அரும்பணியாற்றி இன்று ஆசிரியத்துவ வெள்ளிவிழா காணும்

**திரு. பரராஜசிங்கம் ஜெயகுமார்** அவர்களை
நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.



Mr. P. Jeyakumar
(Sp.Trd (Maths), G.S.Q (Peradeniya)



Mr. M. Berty Bannister
(Sp.Trd. (Phy.Ed), B.A, Dip. in. Ed

கல்லூரியின் **உடற்கல்வி** ஆசிரியராக விளங்கி **விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக** இருந்து கல்லூரி தேசியமட்டத்தில் சாதனைகள் படைக்க வழிகாட்டுபவரும்,**மெய்வல்லுனர்** விளையாட்டுக்கான தேசிய தொழில்நுட்ப அலுவலரும், ஆசிய **உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் "C" தர பயிற்றுவிப்பாளருமான**, ஆசிரியப்பணியில்வெள்ளி விழாக்காணும்.

**திரு. மரியதாஸ் பேர்ட்டி பனிஸ்ரர்**
அவர்களை நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள்
புனித பத்திரிசியார் கல்லூரி, .யாழ்ப்பாணம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 05.09.2017 செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பகுலவிளக்கு

அமரர்
**சோமசுந்தரம் பத்மநேசன்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 03.10.2017 செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் நாளை (05.10.2017) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் மரணத்தைக் கேள் வியுற்று வருகை தந்து எமது குடும்பத்தின் துயரிலும் பங்கேற்றுக்கொண்ட அனைவருக்கும் மரணச்சடங்கன்று எம்முடன் ஒத்துழைத்த ஒத்தாசை செய்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'சோமதீபம்' கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.
077 9861 406, 075 041 7539

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### விஜயரட்ணம் அன்னபூரணம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20.05.1940 | 03.10.2017 |

இல.36, யாழ்.வீதி. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட விஜயரட்ணம் அன்னபூரணம் நேற்று (03.10.2017) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் பாமதி (இத்தாலி). ராஜினி (சுவிஸ்) ஆகியோரின் தாயாரும் விஜயானந்தன். விக்னேஸ்வரன். துஷாந்தன் . குருஷாந்தன். டிலுக் ஷாந்தன். செல்வி துர்க்கா ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் மனோரஞ்சிதம் ஆகியோரின் சகோதரியும் கனகம்மாவின் உடன் பிறவா சகோதரியும் நிஷாந்தன் (U.K). பிரசன்னா ஆகியோரின் சிறிய தாயாரும் செல்லா, ராஜேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் விதுஷா. வினோஜன். இலக்கியா. அஞ்சலி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2017) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.36, யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.**
**077 384 9598, 021 222 9179**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### அருணாசலம் சின்னப்பா



சரசாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் அச்செழு மத்தி நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சின்னப்பா நேற்று (03.10.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக்கணவரும் திருநாவுக்கரசு (ப.நோ.கூ.ச நீர்வேலி), நந்தகோபால் (சுவிஸ்) காலஞ்சென்றவர்களான நிர்மலா தேவி, தர்மராசா ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை(சுவாமியார்சிவதொண்டர்நிலையம்யாழ்.), சிவஞானம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் வைத்திலிங்கம் வைரமுத்து இராமநாதன் காலஞ்சென்றவர்களான அருந்தவராணி ,அன்னமம்மா ஆகியோரின் மைத்துனரும் அஜந்தன் (லண்டன்), திவ்வியன் (சுவிஸ்), தினேஷ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப்பேரனும் இராஜேஸ்வரி, அருணாசலம் (லண்டன்), மணிவாசகன் (பொறியியலாளர் கொழும்பு), செந்தில்வாசன் (கனடா), சிவகுமாரன் (சுவிஸ்), ஜெயக்குமார் ஆகியோரின் சிறய தந்தையும் சகுந்தலாதேவி, உஷா (சுவிஸ்), முருகையா, ஆனந்தி, தனுஷா, அன்னலட்சுமி, செல்வநாயகம், ஸ்ரீஸ்கந்தராசா, துஷ்யந்தி, கிருஷ்ணகுமார், செல்வகுமார், ரவிக்குமார், நந்தகுமார், நளினி ,நிமாலினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2017) புதன்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அச்செழு மத்தி, நீர்வேலி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (மான்குட்டிவீடு) 021 205 3308**

### திருமதி இரத்தினம்மா இரத்தினம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1930.11.13 | 2017.10.02 |

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா இரத்தினம் கடந்த (02.10.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா தம்ப்தியரின் அன்புமருமகளும் முன்னாள் காலி வர்த்தகர் (V.S.R) V.S. இரத்தினத்தின் அன்பு மனைவியும் ஜெயராஜா (கனடா), அனுசியா (லதா), சுகந்தி, சுகராஜா (கனடா), சாந்தராஜா (கனடா), சாந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குணபாலசிங்கம் (ஓய்வு பெற்ற நீர்ப்பாசனத்திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்), குமுதினி (கனடா), தர்ம குலேந்திரன், சசிகலா (கனடா), அனுசியா (கனடா), ஆறுமுகலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புமாமியும் வசந்தாதேவி, பிரேமா ஆகியோரின் பாசமிகு சின்னம்மாவும் மயூரன், மதன், மதிலன், நிரோஷ், ஜெனிஸ், கீர்த்திகா, தனுஜா, வினுஜா, சுபீஜா, ஜெனுஷா, ஜெசின், சங்கவி ஆரணி, அபிதா, அஜேஷன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் கோபிசனின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

**தகவல்:
குடும்பத்தினர்.**

## ஒரு எண்ணெய்! ஆரோக்கியமான பல நன்மைகள்!!!

- ✓ முடி உதிர்வு, பொடுகுத் தொல்லையா?
- ✓ கருமையான நீண்ட கூந்தல் வேண்டுமா?
- ✓ முகத்தில் கரும்புள்ளி, கருவளையமா?
- ✓ முகப்பருவா?
- ✓ தோல் சுருக்கமா?
- ✓ உதடு, குதிக்கால் வெடிப்பா?
- ✓ உடற்பருமன், Cholesterol Blood Sugar இதய நோய் பிரச்சினையா?

Royal

இன்றே பாவியுங்கள்!!!

"றோயல் ஓர்கானிக் வேர்ஜின் தேங்காய் எண்ணெய்"

- 100% Natural
- Cold Pressed
- No Refining
- No Bleaching

Re- Packed By:
Royal Industry
Colombo - 13

சந்தைப்படுத்துவோர்
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
021 222 2567

## மரண அறிவித்தல்கள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 | 02 |
| 07 | 10 |
| 1961 | 2017 |

### தங்கரத்தினம் பரமநாதன்

அல்வாய் அத்தாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கரத்தினம் பரமநாதன் கடந்த (02.10.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் கமலவதனாவின் அன்புக் கணவரும் நிதர்ஷன் (லண்டன்), சாதனா, ஹரிரிதர்ஷன், சாதுரியா, திலக்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சண்முகநாதன், சிவநாதன், பாலநாதன், நேரீஸ்வரி ஆகியோரின் சகோதரரும் மங்கையர்க்கரசி, விமலேஸ்வரி, ராஜினி, கணநாதன், காலஞ்சென்ற லோகநாதன், ரவீந்திரன், ஶ்ரீதரன் ஆகியோரின் மைத்துனரும் அனோஜ், டனுஷன், சஸ்வினி, கிரிசாந், பவித்திரன், லக் ஷிகா ஆகியோரின் பெரிய தந்தையும் கஜீவன், தர்ஜிகா, ஜெனிகா, ஹர்சன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2017) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அத்தாய், அல்வாய்.**
**077 828 7618, 076 540 4880**

**தகவல்: ப.கமலவதனா**
(மனைவி)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30 | 03 |
| 07 | 10 |
| 1966 | 2017 |

### ஞானமுத்து மரியசந்திரகுமார்

(Former Officer - Ceylinco Building Society)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் இல.60. ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமுத்து மரியசந்திரகுமார் 03.10.2017 அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானமுத்து மற்றும் மாகிறேன் தம்பதியரின் அன்பு மகனும் யேசுராஜன் - பிராகசம்மா (மலர்) தம்பதியரின் அன்புமருமகனும்ஜசியானா(ஆசிரியர்-புனிதஜோசப்வித்தியாலயம், கொழும்புத்துறை)வின் அன்புக் கணவரும் கிங்ஸ்ரன் (மாணவன் - பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஸ்ரெபனி (மாணவி - வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜேம்ஸ் பற்றிக் ஜெயக்குமார் காலஞ்சென்ற பத்திமா ஜீவமேரி மற்றும் பத்திமா அமலமேரி பத்திமா செல்வமேரி, காலஞ்சென்ற செல்வகுமார் மற்றும்பத்திமாவசந்தமேரி, பத்திமாரட்ணமேரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் யூலிஆன் (ஆசிரியை - யா/சன்மார்க்க வித்தியாலயம்), கிருபாகரன் (France),பிரபாகரன் (ஆசிரியர் - யா/பூம்புகார் அ.த.க. பாடசாலை), டெய்சியானா (France), ஜோதினி (வடமாகாண விவசாய திணைக்களம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (04.10.2017) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுபுனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில்நல்லடக்கம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**60, புனித ஆசீர்வாதப்பர் வீதி,**
**நல்லூர். 077 470 5540, 021 222 3267**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## CANADA , USA
## study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online form filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

### Royal Visa Consultants & Education Service

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 011 232 3975
Office : 077 721 6291

## காணி தேவை

தெல்லிப்பழை. மாவிட்டபுரம், வறுத்தலைவிளான், K.K.S., மயிலிட்டி போன்ற இடங்களில் 25 பரப்புக்கு மேற்பட்ட காணி தேவை.

**077 480 1734**

### தேவை

யாழ்ப்பாணத்தில் 2000 புறோயிலர் கோழிகள் வளர்க்க கூடிய பண்ணையொன்று வாடகைக்குத் தேவை.

077 633 1914

சீட்டிழுப்பு திகதி 03.10.2017

வெற்றி இலக்கங்கள்

10 21 32 47 T

ரூ. 11,382,460/-

சீட்டிழுப்பு வாரம் 197

சீட்டிழுப்பு திகதி 03.10.2017

ரூ. 104,041,628/-

E 35 41 59 61

சீட்டிழுப்பு வாரம் 34

இன்றைய ஜக்பொட் பரிசு

ரூ. 59,535,650/-

அத கோடிபதி

வெற்றி இலக்கங்கள்

15 22 24 51 D

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.09.1925 | 03.10.2017 |

### மௌனசாமி பரராஜசேகரம்

மாவிட்டபுரம் அரசடி மதவடியைப் பிறப்பிடமாகவும், 03 ஆம் வாய்க்கால் கிளிநொச்சி, நீர்கொழும்பை தற்காலிகமாக வசித்தவருமாகிய தற்பொழுது கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட மௌனசாமி பரராஜசேகரம் (03.10.2017) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மௌனசாமி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் மருமகனும் விமலேஸ்வரி (மணி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், நித்தியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிர்மலன், தயாபரன், சிறி தரன், தயாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதாம்பிகை, மதிவதனா, சுகந்தினி, சிவாகரன் ஆகியோரின் மாமனாரும் நிலானி, தர்சன், கோபிதா, ஜெயபிரணவி, மருட்சயன், பபிசன், ரபிசன், ஷாலினி, ஸ்ரிபன், ஷஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2017) புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - மனைவி - 077 752 6065 பிள்ளைகள்
நிர்மலன் - 0014 16321 3700
இராமகிருஸ்ண வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

## இரண்டாம் மொழி - சிங்களப் பேச்சு மொழி சான்றிதழ் பாடநெறி ஆரம்பம்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தில் கல்வி கற்க அரிய வாய்ப்பு

EEC இல்
07.10.2017
காலை 8.30

பயிற்சியின் வளவாளர்
**திரு.பி.ஜி.டி.சுனில் ஆரியரத்ன**

- இரண்டாம்மொழி சித்தியடைய வேண்டிய அரச ஊழியர்கள் Level III, IV
- பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்கள்
- சிங்கள மொழியைக் கற்க ஆர்வமுடைய அனைவரும் இணைந்து கொள்ளலாம்.

மூன்று மாதங்கள் (150 மணித்தியாலங்கள்)
வார இறுதி மற்றும் வார நாள்களில்

"பயிற்சி நெறியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பாடநெறியை மேற்கொள்பவர்களில் எவராவது இவ்வருட இறுதியில் நடை பெறவுள்ள க.பொ.த.(சா/த) - சிங்கள மொழிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்ப வர்களாயின் அவர்கள் அனைவருக்கும் இலவசமான வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

Empowering Expertise Centre(pvt)Ltd
47,Champion lane, Kokuvil East
WEB : www.eeclanka.com
Facebook : www.facebook.com/eeclanka
T.P: 021-2215210, 077-9773594, 077-3515558

## சாந்திகம் உளவளத்துணை நிலையம்
## உளவளத்துணையாளர் மற்றும் இணைப்பாளர் தேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றுவதற்கு ஆண் உளவளத்துணையாளர் தேவை. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பயிற்றுவிக்கப்பட்ட உளவளத்துணை சான்றிதழ் அத்தியாவசியம். முல்லைத்தீவு மாவட்டத்தில் உளசமூகப் பணியாற்றுவதற்கு இணைப்பாளர் தேவை. தங்கள் சுயவிவரக் கோவையினை 10.10.2017 அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும்படி கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சாந்திகம்**
**8, கற்பக விநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி.**
**யாழ்ப்பாணம். 021 222 3338**

## ராசி
அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 03.10.2017 | 2193 | நீலம் |

மிதுனம்

வெற்றி இலக்கங்கள்

05 23 29 50

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 4, 133, 536/=

06.10.2017ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

# இந்தியப் படகுகளை மீட்க பல குழுக்கள் விரைவு

யாழ்ப்பாணம், ஒக். 4

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிநுழைந்தஇந்திய மீனவர்களின் படகுகளை மீட்பதற்காக தமிழக மீனவர் குழுக்கள் வந்துள்ளன. இவை கட்டம் கட்டமாக படகுகளை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமான முறையில்நுழைந்துமீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த காலங்களில் பல இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களில் ஒரு தொகுதியினர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களின்படகுகள்நீண்டநாள்களாகத்தடுத்துவைக்கப்பட்டிருந்தன.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளில் 42 படகுகளை மட்டும் தற்போது விடுவிக்க அனுமதி கிடைத்துள்ளது.

அதனையடுத்து தமிழக மீனவர்கள்தங்களின்படகுகளை மீட்பதற்கு பல குழுக்களாக இலங்கைக்கு வருகைதந்துள்ளனர். கடந்த வாரம் இலங்கைவந்ததமிழக மீனவர்கள் குழு முதற்கட்டமாக 8 படகுகளை மீட்டுச்சென்றது.

இரண்டாம்கட்டமாகநேற்று முன்தினம் வந்த தமிழக மீனவர் குழு 17 படகுகளை மீட்டுசென்றுள்ளது. நேற்றையதினமும் தமிழக மீனவர் குழு இலங்கைக்குவருகை தந்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது. (ய-8)



## சிறப்புக் கலந்துரையாடல்

வவுனியா, ஒக்.4

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் வெண்கலச்செட்டிகுளம் பிரதேசக் கிளையின் செயற்குழு அங்கத்தவர்களுடனான சிறப்புக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வடக்குமாகாணமுன்னாள்சுகாதாரஅமைச்சர்ப. சத்தியலிங்கம் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில்கட்சியின்வவுனியாமாவட்டச்செயலாளர்சி. சிவசோதி, இளைஞர் அணி பிரதிநிதி பாலச்சந்திரன் சிந்துஜன், செட்டிகுளம்பிரதேசகிளையின்தலைவர்த. ராஜாமற்றும்பலசெயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போதுசமகாலஅரசியல்நிலைமை, கட்சியின்எதிர்காலச் செயற்பாடுகள், செட்டிகுளம்பிரதேசமக்கள்எதிர்நோக்கும்பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ய)

# தெங்குச் செய்கையாளருக்கு சிறப்புக் கடனுதவித் திட்டம்

## தென்னைச் செய்கை முகாமையாளர் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், ஒக். 4

"தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு சுய தொழில் கடன்வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்" என்று தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் தே. வைகுந்தன் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்னைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் இலகு கடன்வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தக்கடன்திட்டத்தின் ஊடாக ஒரு ஏக்கருக்கு ஆகக்கூடிய தொகையாக ஒரு இலட்சத்து 2ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

கடனைப் பெறவேண்டுமானால் தென்னைவளர்ப்புத் தொடர்பான ஆவணங்களைஎங்களிடம் அனுப்ப வேண்டும். அவற்றை நாங்கள் பரிசீலனை செய்வோம். காணிகளை ஆய்வு செய்வோம்.

அந்தக் காணியில் குழாய்க்கிணறு அகழ்வதற்கும், பசளைகள், தென்னம் பிள்ளைகள் வாங்குவதற்கும் உதவிகள் வழங்கப்படும். குறித்த தேவைகள் கடன்பெறுவதற்கு முன்னரே நிறைவேற்றப்பட்டிருப்பின் அதன் பெறுமதி கணிக்கப்பட்டு கடன் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலம் ஆகக்கூடியது 30 ஏக்கர் வரையான நிலப்பரப்புக்குக் கடனைப் பெறமுடியும்.

கடனைப் பெறுவதற்கு வழமையாக வங்கிகளில் பின்பற்றப்படும் பொதுவான நிபந்தனைகள் பின்பற்றப்படும். இரண்டு அரச உத்தியோகத்தர்களின் பிணை போன்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தென்னைப் பயிர்ச் செய்கை சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் மூன்றுபேர் இணைந்து கடன்களைப் பெறமுடியும். 9சத வீத வட்டி அறவிடப்படும். பயனாளி கடனைப் பெற்ற திகதியிலிருந்துஆறுமாதம் அல்லது ஒரு வருடத்துக்குப் பின்னர் மாதாந்தம் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். கடன் வழங்கப்பட்டதிலிருந்து ஒருவருட காலம் தொடர்ச்சியாக கடனுக்கான தவணைக் கட்டணத்தை செலுத்துபவராயின் அந்தப் பயனாளிக்கு 100வீத வட்டி மானியமாகவும் வழங்கப்படும். அத்துடன் அடுத்துவரும் ஆண்டுகளுக்கு 50 வீத மானியம் என தொடர்ச்சியாக வங்கிகளால் வட்டி மானியங்கள் வழங்கப்படும் - என்றார். (ய-8)

## அண்ணனும் தம்பியும் ஒரே நாளில் சாவு

உடன் பிறந்த சகோதரர்கள் இருவர்ஒரேநாளில்உயிரிழந்ததுயரச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

இதுதொடர்பில் தெரியவருவதாவது:

கடந்தவாரம்கிளிநொச்சியில்வாள் வெட்டுச்சம்பவம்ஒன்றுஇடம்பெற்றது. வாகனம் திருத்தும் நிலையம் நடத்தும் பா. யசோதரன் (வயது 34) என்பவர் வெட்டுக்காயங்களுக்கு இலக்கானார்.

இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார். இவரைமீசாலைமேற்கில்வதியும் இவரது சகோதரனான சுதர்கரன் (வயது 31) என்பவர் தினமும் சென்று பார்வையிட்டு வந்துள்ளார். வெட்டுக்காயங்களுக்கு இலக்கான அண்ணன் நேற்று முன்தினம் பிற்பகல் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

அண்ணன் இறந்த தகவல் கிடைக்க முன்னரே தம்பியார் குடும்பப் பிரச்சினை காரணமாக தூக்கில் தொங்கி உயிரிழந்தார்.

அண்ணனின் சடலம் யாழ்ப்பாணம்போதனாமருத்தவமனையிலும், தம்பியின்சடலம்சாவகச்சேரி மருத்துவமனையிலும் வைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன.

விசாரணைமற்றும்உடற்கூற்றுப் பரிசோதனையின்பின்னர் இருவரது சடலங்களும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. சடலங்கள் அவர்களின் பிறந்த இடமான அல்லைப்பிட்டிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (ய-9,8,ரி1)

## போதை தொடர்பில் 38 வழக்குகள் பதிவு

### யாழ்ப்பாண பொலிஸார் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கஞ்சா போதைப் பொருள் தொடர்பில் 38 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சிவில் நிலமை தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் செயலர் நா. வேதநாயகன் தலைமையில் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்ததாவது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெறும் குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸார் செயற்பட்ட வண்ணமே உள்ளனர். கடந்த மாதம் குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டோர் 302 பேர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பிரிவுக்குள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 26 பேர் வாள் வெட்டுக்களுடன் தொடர்புபட்டவர்கள்.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது என்பது பொலிஸாரால் மட்டும் முடியாத விடயம். இதனை முறியடிப்பதற்கு சகலரும் ஒருங்கிணைந்தே செயற்பட வேண்டும் - என்றார்.

(10-101)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்காக அடுத்த தலைமுறையும் போராடும்

## மாகாண அமைச்சர் அனந்தி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக்.4

"காணாமல் ஆக்கப்பட்டோருக்காக நீதிகேட்கும் போராட்டம் எமது காலத்துடன் முடிந்து போகாது. அடுத்த தலைமுறையும் நிச்சயம் போராடும்" என்று வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

மனிதஉரிமைகள்கண்காணிப்பகத்தின்பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார் என்று அவரது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்துள்ளனர். நடைமுறையிலுள்ள பிரச்சினைகள் குறித்து கேட்டறிவதற்காக அனந்தி சசிதரனைச்சந்தித்தனர். அவரதுஅலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சந்திப்பு இடம்பெற்றது.

'இராணுவத்திடம்கையளிக்கப்பட்டுகாணாமலாக்கப்பட்டவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? என்பது தெரியாது. இதனால் பெரும்மனஉளைச்சலுக்குஆளாகிக்கொண்டிருக்கிறோம்.

இது மிகவும் கொடுமையான விடயமாகும். இறந்தவர்கள் குறித்த கவலை சில காலங்களில் ஆறிவிடும். ஆனால் இருக்கிறார்களா? இல்லையா? என்றதவிப்புஉளவியல்ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

அமெரிக்கா, இந்தியாமற்றும்ஐரோப்பியநாடுகளை நம்பியே போரின் இறுதியில் எமது உறவுகளை இலங்கை இராணுவத்திடம் ஒப்படைந்திருந்தோம். ஐரோப்பிய ஒன்றியமும் இந்தியாவும்பின்னணியில்இருந்தன. இவை எமக்கு நீதியைப் பெற்றுத்தரவேண்டும்' என்று அனந்தி குறிப்பிட்டார்.

இவற்றை செவிமடுத்த பிரதிநிதிகள், "காணாமல்ஆக்கப்பட்டோர்விடயத்தில்பொறுப்புக்கூறப்பட்டால்போராட்டம்முடிவுக்குவந்துவிடும் தானே" என்று வினவினர். "உரியநீதிகிடைக்கவில்லையெனில் அடுத்த தலைமுறையினரும்போராடுவார்கள்" என்றுஅனந்திகுறிப்பிட்டார் - என்றுள்ளது. (ய)

### ரூபா 6 கோடியே 75 இலட்சத்தில்

# வடக்கில் ஆயிரத்து 58 குடும்பங்களுக்கு உதவிட அமைச்சரவை ஒப்புதல்

யாழ்ப்பாணம், ஒக். 4

வடக்கு மாகாணத்தில் உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் மானியமுறையில் பொருள்கள் வழங்கும் திட்டத்தில் விவசாயிகளிடம் மீள அறவிடப்பட்ட 50 வீதமான நிதியை ஆயிரத்து 58 பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு மாகாண அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மாகாண அமைச்சரவை சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் 2011ஆம், 2012ஆம் ஆண்டு சிறப்பான மானிய முறைத் திட்டம் நடைமுறைப்பட்டது.

இந்தத் திட்டத்தில் பொருள்கள், கடன்கள் வழங்கும்போது அதனைப் பெற்றுக் கொள்ளும் விவசாயிகள் முழுத்தொகையின் அரைப்பங்கை மட்டுமே மீளச் செலுத்தியிருந்தனர்.

இதன்மூலமாக 6 கோடியே 75 லட்சத்து 19 ஆயிரத்து 40 ரூபா கிடைத்திருந்தது.

இவ்வாறு விவசாயிகளிடமி ருந்து அறவிடப்பட்ட 50 வீதமான தொகையைப் பயன்படுத்தி விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 54ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி கிடைத்துள்ளது.

இவ்வாறு இந்த நிதியைப் பயன்படுத்துவது தொடர்பாக கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற மாகாணப் பொதுக்கணக்குக் குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், சிறப்புத் தேவையுடையோர் குடும்பங்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்காக விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவுக்கு இந்த நிதியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

பயனாளிகளின் தெரிவு மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் விவசாய அமைப்புகளின் பங்களிப்புடன் நடைபெற்று வருகின்றது. இதன்படி இந்த நிதியை ஆயிரத்து 58 பேருக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ய-ரி)

## தூரிகை உற்பத்தி தொடர்பில் 13 பேருக்கு சிறப்புப் பயிற்சி

### தொழிற்றுறைப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

வடக்கு மாகாணத்தில் தும்புசார் உற்பத்திகளை ஊக்குவிக்கும் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனொருகட்டமாக தூரிகை தயாரிப்புத் தொடர்பில் 13 பேருக்கு 3 மாத சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பயிற்சிகள் முடிந்த தும் உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என்று மாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுய தொழில் மற்றும் கைப்பணி உற்பத்திப் பொருள்களை அதிகரிப்பதற்கு நடப்பாண்டில் பல பயிற்சிகள் வழங்கப்பட்டன. எனினும் சில திட்டங்கள் நிதி போதாமை காரணமாக இடைநிறுத்தப்பட்டன. அவற்றை அடுத்த ஆண்டில் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயிற்சியாளர்கள் சிறந்த உற்பத்தி நிலையங்களைப் பார்வையிடுவதற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

எமது மாகாணத்தில் தும்பு சார்ந்த தூரிகை உற்பத்தி தொழிற்சாலைகள் குறைவு. அவற்றுக்கு அதிக சந்தை வாய்ப்பு உள்ளது. ஆகவே தூரிகை உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக முன்னர் கச்சாய்ப் பகுதியில் திறக்கப்பட்ட தொழிற்சாலை மீண்டும் இயக்கப்பட்டுள்ளது.

உரிய இயந்திரங்கள் மற்றும் பௌதீக வசதிகள் இன்றிக் காணப்பட்ட இந்தத் தொழிற்சாலையில் தற்போது அனைத்து இயந்திரங்களும் பொருத்தப்பட்டுள்ளன. நவீன உற்பத்திகள் தொடர்பில் 13 பேருக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. பயிற்சிகள் நிறைவடைந்தவுடன் உற்பத்திகள் நடைபெறும் என்றார்.

(ய-ரி)

## பேருந்து சேவையை நிறுத்த எரிபொருள் செலவே காரணம்

யாழ்ப்பாணம், ஒக்.4

வடக்கு மாகாண அரச அலுவலர்களுக்கான போக்குவரத்துச் சேவை கடந்த 29ஆம்திகதியுடன் முடிவுறுத்தப்பட்டுள்ளது. எரிபொருள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவீனங்கள் பாதீட்டில் ஒதுக்கப்படாமையே அந்தச் சேவையை நிறுத்துவதற்குக் காரணம் என்று முதலமைச்சர் அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபையால் அரச அலுவலர்களுக்காக நடத்தப்பட்டுவரும் போக்குவரத்துச் சேவைக்கான செலவீனங்கள் எவையும் பாதீட்டினூடாக ஒதுக்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் கடந்த 22 ஆம் திகதி முதலமைச்சர் தலைமையில் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இங்கு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய சேவை நிறுத்தப்பட்டது. அதற்குப் பதிலீடாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தால் சிறப்பு சேவைகள் நடத்தப்படவுள்ளன - என்றார்.

(ய-9)

### தடுப்புக் காவல் கொலை வழக்கு:

## ஐந்து பொலிஸாரின் விளக்கமறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஒக்.4

சுன்னாகம் பொலிஸ் தடுப்பில் இருந்த இளைஞர் கொல்லப்பட்ட வழக்கில், பொலிஸ் உத்தியோகத்தர்களான ஐந்து சந்தேகநபர்களுக்கும் எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கிளிநொச்சி நீதி மன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்குவந்தது. சந்தேகநபர்கள் 5 பேரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அதன்போதே மறியல் நீடிக்கப்பட்டது.

2011ஆம்ஆண்டுநவம்பர்மாதம்24 ஆம்திகதிசுன்னாகம்பொலிஸாரால் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்ட புன்னாலைக்கட்டுவனைச்சேர்ந்த 28வயதானசிறீஸ்கந்தராசா சுமணன் என்ற இளைஞன் மூன்று நாள்களின் பின்னர் இரணைமடுக்குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவர் சுன்னாகம் பொலிஸாரால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அதனால் அப்போதைய நிலையப் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார உட்பட்ட 8 பொலிஸார் கைது செய்யப்பட்டுவிளக்கமறியலில்வைக்கப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம்மேல்நீதிமன்றில்சித்திரவதைதொடர்பானவழக்கின்விசாரணை இடம்பெற்று 6 பொலிஸார் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர். அவர்களுக்குக் கடூழியச் சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டது. கொலைக் குற்றச்சாட்டுவழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் இடம்பெற்று அறிக்கைசட்டமாஅதிபர்திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(4-6)

## அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக கவனவீர்ப்பு

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடும் அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவாக இன்று கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகத்தினர் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளனர். தமது வழக்கு வவுனியா மேல் நீதிமன்றில் இருந்து அநுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அநுராதபுரம் சிறையில் உள்ள மூன்று அரசியல் கைதிகள் தொடர்ச்சியாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

(4-101)

## போதையில் வாகனம் செலுத்திய இருவரிடம் ரூ. 44,000 அறவீடு

சாவகச்சேரி, ஒக். 4

ஆவணங்களின்றி மதுபோதையில் வாகனங்கள் செலுத்திய இரண்டு சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்று 44 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

குறித்த குற்றச்சாட்டில் இருவரையும் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். நீதிமன்றில் இருவரும் தம்மீதான குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டனர். அதனையடுத்து ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் மற்றவருக்கு 19 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்தது நீதிமன்று.

(4-9)



வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒலுமடு அ.த.க பாடசாலையில் ஆசிரியர் விடுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஊடாக 80×24 அளவில் ஆசிரியர் விடுதிக்கான அடிக்கல் நடப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், அயற்பாடசாலை அதிபர்கள், பாடசாலை அதிபர் உள்ளிட்ட பலர் அடிக்கல் நட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(4-422)

## உறுப்பினர்களின் திட்டமுன்மொழிவை மாற்றியமைப்பதற்கான காலம் நிறைவு

யாழ்ப்பாணம், ஒக்.4

வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் நடப்பு வருடத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட முன்மொழிவு களில் மாற்றம் செய்யும் செயற்பாடுகள் கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவ டைந்துள்ளது என்று வடக்கு மாகாண சபை பேரவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது.

நடப்பு வருடத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி தலா 6 மில்லியன் ரூபா வீதம் மொத்தமாக 198 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் தேவைகளின் நிமித்தம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கான செயற்திட்ட அறிக்கையை அவர்கள் சமர்ப்பித்துள்ளனர். சில வேலைத் திட்டங்களில் அவர்கள் முன்வைத்த முன்மொழிவுகளில் திருத்தங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

அதன்போது அந்தத் திட்டங்களுக்குப் பயன்படும் நிதியை வேறு ஒரு திட்டத்துக்குப் பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும். அதன்போது முன்மொழிவுகளில் மாற்றம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும். இவ்வாறான மாற்றங்களை முன்மொழி வில் மேற்கொள்ள வேண்டுமானால் அதனை இந்த வருடம் செப்ரெம்பர் மாதத்துக்குள் மேற்கொள்ள வேண்டும் என்று செயலகம் பணித்திருந்தது. அதற்கு அமைய 14 உறுப்பினர்கள் இவ்வாறான மாற்றங்களை அமைச்சரவையில் முன்வைத்து அனுமதியைப் பெற்றுள்ளனர்.

அவர்களது செயற்திட்டங்களில் இனியும் மாற்றங்கள் இருப்பின் அது தொடர்பாகச் சிறப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு அனுமதிகள் வழங்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-ரி)

### மனுஸ் தீவு தடுப்புமுகாமில் உயிரிழந்த

# இளைஞனின் சடலத்தை கொழும்புக்கு அனுப்ப 9,000 டொலர் கேட்கிறது ஆஸி.

கொழும்பு, ஒக். 4
மனுஸ் தீவு தடுப்பு முகாமில் உயிரிழந்த தமிழ் இளைஞனின் உடலை ஒப்படைப்பதற்கு 9 ஆயிரம் டொலர்களைத் தர வேண்டும் என்று உறவினர்களிடம் ஆஸ்திரேலிய அரசு கோரியுள்ளது.

மனுஸ் தீவில் உள்ள ஆஸ்திரேலியாவின் இடைத்தங்கல் முகாமில், தடுத்து வைக்கப்பட்டிருந்த ரஜீவ் ராஜேந்திரன் (வயது -32) சடலமாக மீட்கப்பட்டார்.

2013ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தீவில் அடைக்கலம் புகுந்த இவரை ஆஸ்திரேலிய அரசு, மனுஸ் தீவு தடுப்புமுகாமுக்கு அனுப்பியிருந்தது. மனுஸ் தீவுத் தடுப்பு முகாமில் தனது உடலுக்குத் தானே தீங்கிழைக்க முற்பட்டதையடுத்து, ரஜீவ் ராஜேந்திரன் அங்குள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு அவருக்கு உரிய உளவளச் சிகிச்சைகள் அளிக்கப்படாத நிலையில், தனது உயிரை மாய்த்துக் கொண்டார் என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரஜீவ் ராஜேந்திரனின் உடலை, இலங்கைக்கு கொண்டு வருவது தொடர்பாக அவரது குடும்பத்தினர் கொழும்பில் உள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.


ரஜீவின் உடலைக் கொண்டு வந்து ஒப்படைப்பதற்கு 9 ஆயிரம்டொலரைச் செலுத்துமாறு ஆஸ்திரேலியத் தூதரக அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்தனர் என்று அவரது உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

'இந்தளவு பணத்தை எப்படிப் பெறுவது என்று எமக்குத் தெரியவில்லை. அவர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள், எமது அன்புக்குரிய ரஜீவை எம்மிடம் இருந்து எடுத்துக் கொண்டார்கள். அது போதாதா? இப்போது, பணமும் கேட்கிறார்கள்?' என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ரஜீவ் ராஜேந்திரனின் உடலை, எந்தப் பணத்தையும் பெற்றுக் கொள்ளாமல், கூடிய விரைவில் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைப்பதற்காக இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று தமிழ் அகதிகள் பேரவை ஆஸ்திரேலிய அரசிடம் கோரியுள்ளது.

அநீதியான முறையில் தடுத்து வைத்திருந்ததால் உயிரிழந்த ரஜீவ் ராஜேந்திரனின் இறுதிச் சடங்கிற்கான செலவுகளையும், இழப்பீட்டையும் வழங்குமாறும் ஆஸ்திரேலிய அரசிடம் தமிழ் அகதிகள் பேரவை கேட்டுள்ளது. மனுஸ் தீவு மற்றும் நௌரு தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளை விடுவித்து அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அந்த அமைப்புக் கோரியுள்ளது. (5)

### மன அழுத்தத்தைக் கையாளும் வழிகள்




– சாந்திகம்.

### இந்தியத்துறைமுகத்தால் கொழும்புத்துறைமுகத்துக்கு

# அச்சுறுத்தல்!

கொழும்பு, ஒக். 4
இந்தியாவில் அமைக்கப்பட்டு வரும் துறைமுகத்தினால் கொழும்பு துறைமுகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று துறைமுக அதிகார சபையின் தலைவர் பராக்கிரம திசநாயக்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நடந்த கருத்தரங்கில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்புத் துறைமுகத்தின் 75 வீதமான வணிகம், இந்தியாவில் இருந்தான பண்டப்பரிமாற்றப் போக்குவரத்து மூலமே இடம்பெறுகிறது. இந்தியாவில் 20.5 மீற்றர் ஆழம் கொண்ட, அதானி கொள்கலன் பரிமாற்ற துறைமுகம் இன்னும் இரண்டு ஆண்டுகளில் - 2019 டிசெம்பரில் செயற்படத் தொடங்கும். இது கொழும்புத் துறைமுகத்துக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக அமையும். 17 பூகோள கப்பல் சேவைகளில் மூன்று மட்டுமே, கொழும்புத் துறைமுகத்தைப் பயன்படுத்துகின்றன - என்றார். (5)



### களுத்துறை வான் பரப்பில் ஆச்சரியமூட்டிய உலங்குவானூர்தி

கொழும்பு, ஒக். 4
களுத்துறை, பாத்தகட பிரதேச வான் பரப்பில் விசித்திரமான முறையில் பறந்த உலங்குவானூர்தி தொடர்பில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. நிலத்தடி சுரங்கங்கள் இருப்பது கண்காணிக்கப்பட்டு நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அந்தச் சுரங்கங்களில் புதையல் தேடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியே இது என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தது.

'கிரபைட்டைக் கண்டுபிப்பதற்காக ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. உலங்குவானூர்தியுடன் மின்காந்த அலைகளைப் பயன்படுத்தி ஆராய்வதற்கான உபகரணமே உலங்குவானூர்தியுடன் பொருத்தப்பட்டது. இதில் அச்சமடைய எதுவும் இல்லை' என்று களுத்துறை மாவட்டச் செயலகத்தினால் விளக்கமளிக்கப் பட்டுள்ளது. (5)

# வடக்கு நலன்புரிச் செயற்பாடுகளில் இராணுவத்தைப் பயன்படுத்துங்கள்

### விக்கியிடம் கூறினேன் என்கிறார் இராணுவத் தளபதி மகேஸ்



கொழும்பு, ஒக். 4
வடபகுதி மக்களின் முன்னேற்றத்துக்கான செயற்பாடுகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கு இராணுவத்தைப் பயன்படுத்துமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம் அலைபேசி மூலம் கோரிக்கை விடுத்ததாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க தெரிவித்தார்.

இராணுவத்தின் 68ஆவது ஆண்டு நிறைவு எதிர்வரும் 10ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இராணுவத்தின் கொடிகளுக்கும் இராணுவத்தளபதி உள்பட அனைத்து இராணுவ வீரர்களுக்கும் ஆசீர்வாதம் பெறும் நிகழ்வு அநுராதபுரத்திலுள்ள ஜெயசிறி போதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வுகளின் முடிவில் பத்திரிகையாளர்களை மகேஸ் சேனாநாயக்க சந்தித்துப் பேசினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்கோ எனது படைத்தரப்பினருக்கோ எந்தவொரு அரசியல் நோக்கமும் கிடையாது. மக்களின்நலனைக்கருத்தில்கொண்டே அபிவிருத்திப் பணிகளுக்கு இராணுவத்தை பயன்படுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றேன். இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட 5 சுகாதாரத்துறைசார் கட்டடங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டன. இதுவும் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டுமுன்னெடுக்கப்பட்ட செயற்பாடு.

தேசியப் பாதுகாப்பையும் அத்தியாவசியத் தேவைகளையும் கருத்திற்கொண்டே நாட்டில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடக்கில் மாத்திரமின்றி தென் பகுதியின் பல பகுதிகளிலும் இவ்வாறு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் நோக்கம் மோதலில் ஈடுபடுவதல்ல. மாறாக நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதே சமயம் திடீரென ஏற்படும் இடர்கள் மற்றும் அத்தியாவசியத் தேவைகளின்போது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதேயாகும். இதேபோன்றே வடக்கிலும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

விக்கினேஸ்வரன் தமிழர் என்றாலும் தென்பகுதி மக்களோடு நெருங்கி வாழ்ந்த ஒருவர். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் எம்முடன் இணைந்து செயற்படுவார் என்று நம்புகிறேன் - என்றார். (5)

### அமைச்சர்கள் பதவிவிலகுவதால் அரசு ஆட்டம் காணப்போவதில்லை

#### அமைச்சர் மங்கள தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 4
ஊழல் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்ட அமைச்சர்கள் தாம் நிரபராதி என்று நிரூபிக்கப் பதவி விலகினாலும் அரசு வீழப்போவதில்லை என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

மாத்தறை சனத் ஜெயசூரிய விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மங்கள சமரவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் போது, ஊழல் குற்றஞ்சுமத்தப்பட்ட அமைச்சர் தான் நிரபராதி என்று நிரூபிக்கப் பதவி விலகினால் அரசு கவிழப் போவதாக சிலர் எண்ணுகின்றனர். அது அவர்களின் முட்டாள்த்தனம்.

சிங்கள பௌத்தர்கள் மட்டும் நல்லாயிருக்க வேண்டுமென்று நாம் சிறுவயதில் கற்கவில்லை. எனது சிறுவயதில் அனைத்து உயிரினங்களும் துன்பப்படக்கூடாது, நோய் நொடிகள் ஏற்படக் கூடாது என்றே கற்றிருக்கின்றேன்.

அனைத்து பௌத்தர்களும், சிங்களவர்களும்நோய்நொடியின்றித் துன்பமின்றி வாழ வேண்டுமென கற்கவில்லை. பௌத்தர்களைப் போன்று நல்லிணக்கத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய வெறும் சமூகம் கிடையாது - என்றார். (5)

# ரோஹிங்ய ஏதிலியை வன்கொடுமைக்கு உட்படுத்தியதை மூடிமறைக்கவே அவர்கள் மீது தாக்குதல் நாடகம்

### சாடுகிறார் கீர்த்தி தென்னக்கோன்

கொழும்பு, ஒக். 4
மிரிகான தடுப்பு முகாமில் இருந்த ரோஹிங்ய ஏதிலியை வன்கொடுமைக்குப் பொலிஸார் உட்படுத்தியதாகக் கூறப்படும் வழக்கின் பிரதான சாட்சியாளரை வெளிநாட்டுக்கு அனுப்பும் முயற்சிக்காகவே, கல்கிசை பகுதியில் ஏதிலிகள் துன்புறுத்தப்பட்டனர்.

இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் கேந்திர நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏதிலிகள் துன்புறுத்தப்பட்டமை இனவாத நடவடிக்கை என்பதை விட, மியான்மார் யுவதி வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டமையை மறைக்க, சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தரின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

சந்தேகநபரான பொலிஸ் அலுவலர், அடையாள அணிவகுப்பில் சாட்சியாளரால் அடையாளம் காட்டப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரைப் பணி நீக்கம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இந்த வழக்கின் பிரதான சாட்சியாளர்கள் பாதிக்கப்பட்ட பெண் மற்றும் அவரது உறவினர் ஒருவருமாவர். குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள், பொலிஸார், பாதுகாப்பு அமைச்சு மற்றும் புலனாய்வு அதிகாரிகள் ஆகியோர், ஏதிலிகளைப் பிறிதொரு இடத்துக்கு மாற்ற, ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து நடவடிக்கை எடுத்தனர். ஓகஸ்ட் 8ஆம் திகதி நீதிமன்றத்தின் அனுமதியும் கிட்டியது. இவ்வாறானதொரு நிலையிலேயே ஏதிலிகள் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (5)

## சமூகவலைத் தளங்கள் பற்றி 2,500 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 4

முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் தொடர்பில் ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 2 ஆயிரத்து 500 முறைப்பாடுகள் வரை கிடைக்கப் பெற்றுள்ளதாக, இலங்கை கணினி அவசர நடவடிக்கைப் பிரிவு தெரிவித்துள்ளது.

பல்வேறு நபர்களின் ஒளிப்படங்களைப் பயன்படுத்தி, போலி முகநூல் கணக்குகளை ஆரம்பித்தமை தொடர்பிலேயே முறையிடப்பட்டுள்ளதாக, அந்தப் பிரிவின் பிரதம தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் ரொசான் சந்திரகுப்த தெரிவித்தார்.

முன் அறிமுகம் இல்லாதவர்களைத் தமது முகநூல் கணக்குகளில் நண்பர்களாக இணைத்துக் கொள்வதே இதுபோன்ற குற்றங்களுக்குக் காரன ாமாகிறது.

சிலரின் அலைபேசி இலக்கங்களைப் பயன்படுத்திச் சமூக வலைத் தளங்கள் மூலம் பல்வேறு குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பிலும், அண்மைக் காலங்களில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன - என்றார். (5)

## உள்ளூராட்சித் தேர்தலில் சு.கவுடன் கூட்டில்லை

### ஐ.தே.க திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 4



கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் தனித் தனியாகவே போட்டியிடும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு விரைவில் ஆட்சி கவிழ்ந்து விடும் என்று சிலர் எண்ணினர். இரு பெரும் கட்சிகள் உள்பட சிறு கட்சிகள் சிலவும் இணைந்து அமைத்துள்ள கூட்டு அரசு இரு வருடங்களை நிறைவுசெய்துள்ளது. நாம் அனைவரும் இணைந்து இன்னும் மூன்று ஆண்டுகள் கூட்டு அரசை முன்னெடுக்கவுள்ளோம்.

கூட்டு அரசில் பல கட்சிகள் இணைந்துள்ள போதிலும், ஐந்து ஆண்டுகளுக்கு தேசிய அரசியலிலேயே இணைந்து செயற்படுவதாக ஏற்கனவே நாம் தீர்மானித்திருந்தோம். பிரதேச மற்றும் மாகாண சபைகளில் நாம் தனித் தனியாகப் போட்டியிடுவோம்.

கூட்டு அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் மேல் மாகாணத்தில் பெரியளவில் அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகிறோம். அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அதிகளவான அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகிறோம். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைத் தேர்தலில் தோற்கடித்து வெற்றி பெற முடியாதென 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிட்டனர். 2015ஆம் ஆண்டில் அவரைத் தோற்கடித்து அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற்றோம். நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றியீட்டிக்காட்டினோம்.

கூட்டு அரசால் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை உள்பட ஏனைய பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முடியாது. அரசு ஒரு வருட காலத்தில் ஆட்சி கவிழ்ந்து விடும் எனத் தெரிவித்தனர். தற்போது இரு வெசாக் போயா தினங்கள் கடந்துள்ளன.

ஜனவரி மாதம் அரசைக் கவிழ்ப்பதாகவும் தெரிவித்தனர். நான் வெளிநாடு செல்கின்றேன். முடியுமாயின் அரசைக் கவிழ்க்குமாறு கேட்டுக்கொண்டேன். அதுவும் முடியவில்லை. அந்தத் தரப்பினர் அவ்வாறு சவால் விட்டுக்கொண்டே இருக்கின்றனர். நாம் மக்களுக்கான சேவைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம் - என்றார். (5)

## கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் 60பேர் கைது

கொழும்பு, ஒக். 4



கட்டுநாயக்க வானூர்தி நிலைய வளாகத்தில் இலவசமாகத் தங்கியிருந்த 60பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வானூர்தி நிலையப் பொலிஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சந்தேகத்துக்கிடமாக, வானூர்தி நிலையத்தில் இலவசமாக தங்கியிருந்த 60பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 60பேரையும் மினுவாங்கொட நீதிவான் மன்றில் முன்னிலைப்படுத்திய போது அவர்களுக்கு தலா ஆயிரத்து 500 வீதம் மொத்தம் 90 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (5)

# சிங்களப் பாடசாலைகளில் தமிழ் வகுப்புக்கள்

### தனித் தமிழ் பாடசாலை நிறுவக் கோரிய வழக்கில் சட்டமா அதிபரின் முடிவு இது

கொழும்பு, ஒக். 4

சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மாத்தறைப் பச்கொட பகுதியில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் பயன்பெறுவதற்குச் சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மொழி வகுப்புக்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகச் சட்ட மா அதிபர் உயர் நீதிமன்றத்திடம் தெரிவித்தார்.

தங்களுடைய பிள்ளைகளுக்காகத் தமிழ்ப் பாடசாலையை நிறுவுவதற்கு அரசுக்கு உத்தரவிடக் கோரி அந்தப் பகுதித் தோட்டத் தொழிலாளர்கள் சிலர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பச்கொட பகுதியில் தமிழ்ப் பாடசாலை எதுவும் இல்லாததால் தங்களுடைய பிள்ளைகளுக்குச் சிங்கள மொழியில் கல்வி கற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக மனுவைத் தாக்கல் செய்த தோட்டத் தொழிலாளர்கள் நீதிமன்றத்தில் கூறியுள்ளனர்.

தங்கள் வசிக்கும் இடத்தில் இருந்து 40 கிலோ மீற்றர் தொலைவிலேயே தமிழ்ப் பாடசாலை அமைந்துள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். தங்களுடைய பிள்ளைகளை அங்குபடிக்க அனுப்பவது மிகக் கடினமானது என்றும் மனுவில் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசமைப்பின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள மொழிகள் தொடர்பான அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் தாங்கள் வசிக்கும் பகுதியில் தமிழ் மொழிப் பாடசாலையை நிறுவும் படியும் அரசுக்கு உத்தரவிடக் கோரி அவர்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

முறைப்பாடு மன்றில் விசாரணைக்கு வந்தபோது கருத்துத் தெரிவித்த அரச சட்டத்தரணி, இந்தப் பகுதியில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தமிழ்ப் பாடசாலை எதுவும் இல்லாததால், அவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் திடீரென பாடசாலை தொடங்குவது நடைமுறைச் சாத்தியமற்றது. அங்குள்ள சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மொழி வகுப்புகளை ஆரம்பிக்கலாம். தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளும் தமிழில் கல்வி கற்க முடியும் என்று குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தை வரவேற்பதாக மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரச தரப்புக்கு உத்தரவு பிறப்பித்த நீதிபதிகள் அதன் முன்னேற்றங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 17ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிவிக்க வேண்டுமென்று உத்தரவிட்டனர். (5)

## தேர்தலா? பொது வாக்கெடுப்பா? திரிசங்கு நிலையில் கூட்டரசு

கொழும்பு, ஒக். 4

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் புதிய அரசமைப்பு மீதான பொது வாக்கெடுப்பு ஆகிய இரண்டில் எதை முதலில் நடத்துவது என்பது தொடர்பில் கூட்டு அரசுக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தி முடித்துவிட்டே பொது வாக்கெடுப்புக்குச் செல்லவேண்டும் என்று ஒருதரப்பினரும், தேர்தலை நடத்துவதற்கு முன்னர் பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று மற்றுமொரு தரப்பும் வலியுறுத்தி வருவதாலேயே இந்த விடயத்தில் கூட்டு அரசு திரிசங்கு நிலையை எதிர்கொண்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த அறிக்கைமீது இந்த மாதம் மூன்று நாள்கள் விவாதம் நடத்தப் பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் அனுமதியோடு புதிய அரசமைப்பின் இறுதி வடிவத்தைத் தயாரித்து, அது தொடர்பில் மக்களின் கருத்தை அறியும் பொருட்டு பொது வாக்கெடுப்பை நடத்துவதே அரசின் உத்தேசத் திட்டமாக இருக்கின்றது.

இந்த விவகாரம் தொடர்பில் அரச உயர்மட்டப் பிரமுகர்களு டன் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் பேச்சு நடத்தியிருந்தனர். இதன்போதே இருவேறு கோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

புதிய அரசமைப்பு மீது பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கு முன்னர் தேர்தலொன்று நடத்தப்படுமானால், புதிய அரசமைப்பை மையப்படுத்தி மகிந்த அணி பரப்புரை முன்னெடுக்கும். இது அரசுக்குப் பாதகமாக அமைந்துவிடும், என்பதே தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு எதிர்ப்பை வெளியிட்டுவரும் தரப்பின் கருத்தாக இருக்கின்றது.

பொது வாக்கெடுப்பை முதலில் நடத்தினால் தேர்தல் முடிவு எப்படி அமையுமென்ற தகவலையும் திரட்டி விடக்கூடியதாக இருக்கும். மகாநாயக்க தேரர்களின் நிலைப்பாடும் இதுவாக அமைவதால் முதலில் பொது வாக்கெடுப்பை நடத்துவதே சிறப்பு என்பதே மற்றைய தரப்பின் கருத்தாகும்.

எனவேதான், தேர்தலா? பொது வாக்கெடுப்பா? இரண்டில் எதை முதலில் நடத்துவது என்பதில் அரசு திணறலை எதிர்கொண்டுள்ளது. (5)

## தங்கக் கட்டிகளைக் கடத்திய இலங்கையர் இந்தியாவில் கைது

கொழும்பு, ஒக். 4

இலங்கையிலிருந்து தங்கக் கட்டிகளைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில், இலங்கையர் ஒருவர் இந்தியாவின் விசாகப்பட்டினம் வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் கொக்கேய்ன் வில்லைகளைக் கடத்திச் செல்வதாகவே ஆயப்பகுதியினர் சந்தேகித்துள்ளனர். பின்னர் மேற்கொண்ட விசாரணைகளில் அவர் தங்கக் கட்டிகளைக் கொண்டு சென்றமை உறுதியாகியுள்ளது. 800 கிராம் அளவில் தங்கக் கட்டிகள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## உள்ளூராட்சி போல் மாகாணங்களுக்கும் தேர்தலை இழுத்தடிப்பதற்கு அரசு சூழ்ச்சி

### முன்னாள் தலைமை நீதியரசர் சொல்கிறார்

கொழும்பு, ஒக். 4

உள்ளூராட்சிமன்றத் தேர்தலைப் போன்று மாகாண சபைத் தேர்தலையும் காலம் கடத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது. அரசமைப்பில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஒரு வாரத்துக்குள் மாகாண சபைத் தேர்தல் குறித்து அறிவிக்காவிடின் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்தார்.

தேசிய ஒற்றுமைக்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் ஊடகச் சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தேசிய நூலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சரத் என். சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பைச் சவாலுக்கு உட்படுத்தும் வகையிலான அதிகாரங்கள் இலங்கையில் யாருக்கும் இல்லை. மக்கள் குடியரசு என்பதன் பொருள் மக்களை மிஞ்சிய அதிகாரம் யாருக்கும் கிடையாது என்பதே ஆகும்.

1988ஆம் ஆண்டில் பிரேமதாசவினால் அரசமைப்பின் 25ஆவது பிரிவு முன்மொழியப் பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக் காலம் முடிவடைவதற்கு ஆறு மாத காலத்திற்கு முன்பு தேர்தலுக்கான நடவடிக்கைகள் நிறைவடைந்திருக்க வேண்டும். உள்ளூராட்சிமன்ற ஆயுள் காலம் நிறைவடைந்து 2 வருடமாகியும் தேர்தல் குறித்து எவ்விதமான அறிவிப்புகளும் இல்லை. இது அரசமைப்புக்கு எதிரான செயற்பாடாகும்.

மாகாண சபைத் தேர்தல் குறித்தும் இழுபறி நிலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் தெளிவாகவே 5 வருடங்களுக்கு ஒரு முறை தேர்தல் நடத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய ஆகிய மாகாணங்களின் ஆயுள் காலம் முடிவடைந்துள்ள நிலையில் ஒரு வார காலத்துக்குள் தேர்தல் திகதியைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும். இதற்கான அதிகாரம் அரசமைப்பின் 78 ஆவது பிரிவில் வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் சட்டத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பின் 104 ஆவது பிரிவில் சுயாதீனத் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவருக்கு இதற்கான வலுவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போதைய சூழலைப் பார்க்கும் போது அவ்வாறானதொரு அறிவிப்பு வருமா என்று தென்படவில்லை. காலம் கடத்தும் செயற்பாடுகளையே அரசு முன்னெடுக் கின்றது. அதற்கு ஒத்திசைவது போல் சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழுவும் செயற்படுகின்றது - என்றார். (5,31)



## 928கிலோ கொக்கெய்னை பகிரங்க இடத்தில் அழிக்க அரச தலைவர் உத்தரவு

கொழும்பு, ஒக். 4
இலங்கையில் கடந்த ஆண்டு பிடிபட்ட 928 கிலோ கொக்கெய்ன் போதைப்பொருளை பகிரங்கமாக அழித்துவிடுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.
'கைப்பற்றப்பட்ட போதைப் பொருளை நீதிமன்ற நடவடிக்கை முடிவடையும் வரை பாதுகாத்து வைப்பது வழக்கமான நடைமுறையாகும். இவ்வாறு அதிக அளவிலான போதைப் பொருள்களை சேமித்து வைப்பதில் ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வு காணவே அவற்றை அழித்துவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது' என்று சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியான மூத்த துணைப் பொலிஸ்மா அதிபதி எம்.ஆர்.லத்தீப் தெரிவித்தார்.
பகிரங்கமாக அழிக்கப்படவுள்ள 928கிலோ எடையுடைய கொக்கெய்ன் போதைப் பொருளின் பெறுமதி 38 பில்லியன் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
கைப்பற்றப்படும் போதைப் பொருள்களுக்கு என்ன நடக்கின்றது என்று அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால கேள்வி எழுப்பியிருந்தார். அது அழிக்கப்படுகின்றது என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் பதில் வழங்கியிருந்தார். அதைப் பகிரங்க இடத்தில் வைத்து அழிக்குமாறு அரச தலைவர் ஆலோசனை வழங்கியிருந்தார். அதற்கு அமைவாகவே தற்போது பகிரங்க இடத்தில் வைத்து இவை அழிக்கப்படவுள்ளன. (5)

# நாடு இனரீதியாகப் பிளவுபட்டிருப்பதை பன்னாட்டுச் சமூகத்துக்குக் காண்பிக்கவே பொதுவாக்கெடுப்பு கோருகிறார் சம்பந்தன்

## சட்டத்தரணி மனோகரத சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 4
புதிய அரசமைப்புக்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு, பொதுவாக்கெடுப்புக்குச் செல்லவேண்டும் என்று இரா.சம்பந்தன் தெரிவிப்பது சிங்கள் மக்கள் மீது இருக்கும் பரிவில் அல்ல. மாறாக நாட்டைப் பிரிப்பதற்கும் மக்கள் இனரீதியில் பிளவுபட்டு இருப்பதை பன்னாட்டுச் சமூகத்துக்குக் காட்டுவதற்குமாகும்.
புதிய அரசமைப்பின் இடைக்கால அறிக்கை தொடர்பில் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தின் நிலைப்பாட்டை தெரிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசமைப்புக்கு மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ள பொதுவாக்கெடுப்புக்குச் செல்லவேண்டும். அதன் மூலம் தெரிவிக்கப்படும் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்வதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். அவர் இவ்வாறு தெரிவிப்பது, சிங்கள மக்கள் மீது காட்டும் அக்கறையில் அல்ல. தேர்தலை நடத்துவதன் மூலம் வடக்கு -கிழக்கு மக்களை கூட்டாட்சிக்கு ஆதரவாக வாக்களிக்க வைத்து, இங்கிருக்கும் பிரச்சினையை பன்னாட்டுச் சமூகத்துக்கு கொண்டுசென்றுநாட்டைஇரண்டாகப் பிரிக்கும் சதித்திட்டத்தை ஆரம்பிப்பதற்காகும்.
இந்தியப் புலனாய்வுத்துறையினர் இங்கு செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் எப்படியாவது வடக்கு-கிழக்கு மக்களை சுயாட்சி அல்லது கூட்டாட்சிக்காகத் தூண்டி வருகின்றனர். அரசு பொது வாக்கெடுப்புக்குச் சென்றால் அதுவே சிங்கள, தமிழ் மக்கள் மற்றும் வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்கு காரணமாகிவிடும்.
அரசு தேர்தலுக்கு சென்று தேர்தலில் மக்கள் எதிராக வாக்களித்தால் அரசமைப்பு அத்துடன் நின்று விடும். ஆனால் தேர்தலில் நிச்சயமாக வடக்கு -கிழக்கு மக்கள் கூட்டாட்சிக்கு ஆதரவாகத்தான் வாக்களிப்பார்கள். அதன் பெறுபேறுகள் மூலம் வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்கு பன்னாட்டுச் சமூகம் ஊடாக அழுத்தம் கொடுக்க பிரிவினைவாதிகள் முயற்சிப்பார்கள். இந்த தேர்தல் பெறுபேறுகள் இலங்கை மக்கள் இன ரீதியில் பிளவுபட்டிருக்கும் செய்தியை பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்க வழிவகுக்கும். அரசு புதிய அரசமைப்புக்கு பொது வாக்கெடுப்புக்குச் செல்வதன் மூலம் வடக்கு -கிழக்கு பிளவுபட்டுச் செல்லும் அபாயம் இருக்கின்றது. இது அரசமைப்பு ஏற்றுக் கொள்ளப்படுவதைவிடப் பயங்கரமானதாகும்.
நாடாளுமன்றத்தில் இருக்கும் சகல உறுப்பினர்களும் கட்சி வேறுபாடுகளை மறந்து நாட்டின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு புதிய அரசமைப்பைத் தோற்கடிக்கவேண்டும் - என்றார். (5,31)

# விக்கியின் கருத்துக்களுடன் மக்களுக்கு உடன்பாடில்லை

## இப்படிக் கூறுகிறார் வடக்கு ஆளுநர் குரே

கொழும்பு, ஒக். 4
வடக்கு முதலமைச்சரின் கருத்துடன் வடக்கு மக்கள் உடன்படமாட்டார்கள் என்று வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு கிழக்கை இணைக்குமாறும் கூட்டாட்சித் தீர்வை வழங்குமாறும் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றார். மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர் என்ற அடிப்படையில் அவர் இவ்வாறு கூறுகின்றார். ஆனால், வடக்கு மக்களோ, தெற்கு மக்களோ அல்லது அரசியல்வாதிகளோ அவரின் கூற்றை ஏற்கமாட்டார்கள்.
வடக்குத் தமிழர்களின் நிலைப்பாடு வேறுபட்டது. அவர்கள் நாட்டை பிளவுபடுத்தவோ மீண்டும் போருக்குச் செல்லவோ தயாரில்லை. தமிழ் அரசியல்வாதிகளின் தாளத்துக்கு ஆடுவதற்கு தமிழர்கள் ஒருபோதும் தயாரில்லை. ஒரு சிலர் மாத்திரமே நாட்டுக்கு விரோதமான சிந்தனையில் மூழ்கியுள்ளனர்.
விக்னேஸ்வரன் போன்றவர்களின் கருத்துக்கள் பன்னாட்டுச் சமூகத்துக்குச் செல்வதால் அவை முக்கியத்துவம் பெறுகின்றன என்று பரவலாக நம்பப்படுகின்றது. ஆனால், இந்தக் கருத்தை முறியடிப்பதில் நாம் பலவீனமாக இருக்கின்றோம்.
வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வடக்குக்கு வந்து என்னைச் சந்திக்கும் போதெல்லாம் நான் உண்மையான நிலைப்பாட்டைத் தெளிபடுத்தியே வருகின்றேன். கூட்டாட்சி, தனிநாடு என்ற கோட்பாட்டை முறியடித்து வருகின்றேன்.
நாங்கள் தமிழர்களின் உள்ளங்களை வெற்றிகொள்வதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அவர்களின் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்க வேண்டும். அப்போது தான் நாட்டுக்கு விரோதமான கோட்பாடுகளை தோற்கடிக்க முடியும். இதைவிட்டுவிட்டு அப்பாவி தமிழர்களைக் குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை - என்றார். (5,3)

# அரசமைப்பு உருவாக்கத்துக்கு முன்னர் மூன்றாம்தரப்பு நடுநிலையுடன் பேச்சு

## இடைக்கால அறிக்கையை நிராகரித்து தமிழ் மக்கள் பேரவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4
வெளியாகியுள்ள இடைக்கால அறிக்கையை முற்றாக நிராகரித்துள்ள தமிழ் மக்கள் பேரவை, புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்கு முன்னதாக தமிழர்கள் ஒரு தனித் தரப்பாகவும் இலங்கை அரசு ஒரு தனித் தரப்பாகவும் கொள்ளப்பட்டு, மூன்றாம் தரப்பு நடுநிலமையின் ஊடாக, சமூக ஒப்பந்தம் எட்டப்படுவதன் மூலமாக மட்டுமே தமிழ்த் தேசியத்தின் அடிப்படைப் பிறப்புரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் என்று தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தமிழ்த் தேசத்தின் அடிப்படை அரசியற் பிறப்புரிமைகளான, பிரிபடாத தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசத்திற்கான அங்கீகாரம் என்பவற்றை இடைக்கால அறிக்கை முற்றாக நிராகரித்துள்ளது.
அரசமைப்பு உருவாக்க சபையில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூட, தமிழ் மக்களின் அடிப்படை அரசியற் பிறப்புரிமைகளை வழிப்படுத்தல் குழுக் கூட்டங்களில் வலியுறுத்தவில்லை. அடிப்படைப் பிறப்புரிமைகளை மறுதலிக்கும் நிலைப்பாட்டுக்கு ஒப்புதலும் அளித்துள்ளனர்.
இடைக்கால அறிக்கைக்கு வழங்கியுள்ள பின்னிணைப்பில், தமிழ் மக்களின் அடிப்படைப் பிறப்புரிமைகள் மறுதலிக்கப்படுகின்ற இடைக்கால அறிக்கையை பிரதான இரண்டு கட்சிகளும் ஏற்றுக் கொள்ளுமாக இருந்தால் தாமும் அதனை ஏற்றுக் கொள்ளத் தாயாராக இருப்பதாக அவர்கள் எழுத்து மூலம் வாக்குறுதி அளித்துள்ளமை மிகுந்த ஏமாற்றமளிக்கின்றது.
புதிய அரசமைப்பு உருவாக்கம் ஒன்றின் ஊடாகத் தமிழ்த் தேசிய இறையாண்மைப் பிரச்சினைக்கான தீர்வு காணப்படுதல் என்பதை விடுத்து, 'தீர்வு' இன்னதுதான் என்ற விடயத்தில் அரசுடன் முதலில் ஓர் இணக்கப்பாடு காணப்படவேண்டும். அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படல் வேண்டும் என்பதுவே தமிழ் மக்கள் பேரவையின் நிலைப்பாடாகும்.

**சிறீலங்கர்களாக அடையாளப்படுத்துகிறது**

இடைக்கால அறிக்கையின் உள்ளடக்கமானது இலங்கைத் தீவில் வாழுகின்ற மக்கள் குழுமங்கள் ஒவ்வொன்றையும் இன ரீதியான தனித்துவத்தின் அடிப்படையில் அங்கீகரிக்காமல், இலங்கை மக்கள் அனைவரையும் 'சிறீலங்கர்கள்' என்கின்ற ஒரே அடையாளத்தின் கீழேயே கொண்டு வருகின்றது. ஒட்டுமொத்தமான இலங்கை மக்களையும் 'சிறீலங்கர்கள்' என்று அடையாளப்படுத்துவதானது சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை மேலும் பலப்படுத்துவதாக மட்டுமே அமையும் என்பதையே வரலாறு எமக்கு உணர்த்தி நிற்கின்றது. அறுதிப் பெரும்பான்மையாக சிங்கள பௌத்தர்களே வாழும் ஒருநாட்டில் வரலாற்று ரீதியான இன முரண்பாடும் இருக்கின்ற ஒரு பின்னணியில் ஜனநாயக விழுமியங்கள் இங்கு பாதுகாக்கப்படமாட்டாது என்பதனால், இடைக்கால அறிக்கையைத் தமிழ் மக்கள் பேரவை முற்றாக நிராகரிக்கின்றது.
இலங்கை மக்கள் என்ற அடிப்படையில் அல்லாமல் தமிழ்த் தேசத்திற்கான அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே புதிய அரசமைப்பு அமைய வேண்டும் என்பதுவே எமது நிலைப்பாடாகும். அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்கு முன்னதாக தமிழர்கள் ஒருதனித் தரப்பாகவும் இலங்கை அரசு ஒருதனித் தரப்பாகவும் கொள்ளப்பட்டு, ஒரு மூன்றாம் தரப்பு நடு நிலமையின் ஊடாக, சமூகஒப்பந்தம் ஒன்று எட்டப்படுவதன் மூலமாக மட்டுமே, தமிழ்த் தேசியத்தின் அடிப்படைப் பிறப்புரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் என்றே தமிழ் மக்கள் பேரவை நம்புகின்றது.
இலங்கைத் தீவில் தாம் கொண்டுள்ள நலன்களைப் பாதுகாக்க முனைகின்ற உலக சக்திகள், இங்கு ஐக்கியத்தையும் அமைதியையும் பேணவிரும்புகின்றன. தமிழ்த் தேசிய இறையாண்மைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவல்ல ஒரு சமூக ஒப்பந்தத்தின் ஊடாக மட்டுமே நிரந்தரமான ஐக்கியமும் அமைதியும் இந்தத் தீவில் பேணப்படமுடியும் என்பதை பன்னாட்டுச் சமூகம் உணர்ந்து கொள்ளவேண்டும். அத்தகைய ஒரு சமூக ஒப்பந்தத்தைச் சாத்தியமாக்குவதற்கு பன்னாட்டுச் சமூகம் தலையீடுசெய்யவேண்டும் என்று தமிழ் மக்கள் பேரவை வேண்டி நிற்கின்றது என்றுள்ளது. (5)

# தனிநாட்டைத் தமிழர்கள் கைவிட்டதை தெற்கு சரியாகப் பயன்படுத்தவேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஒக். 4
தமிழ், முஸ்லிம் மக்கள் பிளவுபடாத நாட்டுக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள இணங்கியுள்ளனர். இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசுமாரசிங்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வழிநடத்தல் குழுவின் அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பில் விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதில் அவர் கலந்து கொண்டு மேலும் தெரிவித்ததாவது:
கூட்டு அரசு கொடுத்த பிரதான வாக்குறுதி நிறைவேற்று அரச தலைவர் முறையை இல்லாதொழித்தலாகும். மக்கள் எதிர்பார்க்கும் சனநாயக அரசமைப்பை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
எமக்குப் பொன்னான சந்தர்ப்பமொன்று கிடைத்துள்ளது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட தரப்பினர் விகாரைகளுக்குச் சென்று நாட்டைப் பிளவுபடுத்தப்போவதாகத் தெரிவித்து வருகின்றனர்.
தமிழீழ விடுதலைப்புலிகள் நாட்டை பிளவுபடுத்துமாறு கோரியிருந்தனர். இன்று தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்ட நாட்டுக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள இணங்கியுள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் - என்றார். (5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நெருடுகிறது உறவு

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் வைர விழா நிகழ்வை நிறுத்த முற்பட்டுமூக்குடைப்பட்டுநிற்கின்றார்வடக்குமாகாணசபையின் கல்வி அமைச்சர். அந்த நிகழ்வை இடைநிறுத்துமாறு அமைச்சர் தனது செயலாளர் ஊடாகக் கடிதம் அனுப்பிய போதும், நிகழ்வைத்தாம்திட்டமிட்டபடி சிறப்பாகநடத்தி முடித்திருக்கிறது பாடசாலைச் சமூகம்.

பாடசாலைச் சமூகத்தின் நிகழ்வில் தலையிட்டு அதனை நிறுத்தும்படி மாகாணக் கல்வி அமைச்சர் உத்தரவிட்டமைக்குஅரசியல்உள்நோக்கங்களேகாரணம்என்றுசுட்டிக் காட்டப்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பில் மாகாணக் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் விடுத்த அறிக்கையிலும் அந்தஅரசியல்புகைச்சல்வெளிப்படையாகவேதெரிந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவர் தன்னைத்தவிரவேறுஎவரையும்கிளிநொச்சியில்நடக்கும் நிகழ்வுகளுக்கு அழைக்கக்கூடாது என்று தெரிவித்ததன் அடிப்படையிலும், நிகழ்வை நடத்தப் பணம் தருவதாகக் கூறியதன்அடிப்படையிலும், கொழும்புஅரசிடம்இருந்து பாடசாலைக்குஒருவகுப்பறைக்கட்டடம்அமைக்கஉதவியைப் பெற்றுத் தருவதாகக் கூறியதன் அடிப்படையிலும் தான் மாகாணக் கல்வி அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் இந்த நிகழ்வுக்கு அழைக்கப்படவில்லை என்று அந்தஅறிக்கையில்மாகாணஅமைச்சர்குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கும்இடையிலானஉறவுஎத்தகையதுஎன்பதைஇந்தச் சம்பவம்துல்லியமாகக்காட்டுகின்றது. இதுவரைகாலமும் கூட்டமைப்புக்குள் பங்காளிக் கட்சிகள் கொள்கை ரீதியாக மோதிக்கொண்டன. ஒரு ஜனநாயக அமைப்புக்குள் இத்தகையகருத்து மோதல்கள் ஆரோக்கியமானவை, அனுமதிக்கப்படவேண்டியவை என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எப்போதும் அதற்கு விளக்கம் அளித்து வந்தார். ஆனால், பங்காளிக்கட்சிகள் இடையிலான பிளவு என்பது கருத்து மோதல்களைத் தாண்டி அதிகாரப் போட்டியாக, அரசியல் மோதலாக விரிவாக்கம் கண்டுள்ளது என்பதையே பாடசாலை நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது.

எல்லோரும்ஒரேஅணியைச்சேர்ந்தஅரசியல்வாதிகள்தான் என்றாலும்,அவர்களுக்குஇடையில்புரிந்துணர்வின்மையும் இணக்கப்பாடின்மையும் வளர்ந்திருப்பது தமிழர்களின் அரசியலில் ஆரோக்கியமான நகர்வல்ல என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களை விரோதிகளாகவும் அவர்களைக்கொழும்புஅரசின்முகவர்களாகவும்பார்க்கும்போக்கை ஆரம்பித்து வைத்தவர்முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அந்த விசச்செடி இப்போது வளர்ந்துவிருட்சமாகிப்பயன்தரத்தொடங்கியுள்ளது.

மாகாண அமைச்சர் ஒருவரின் உத்தரவைக் கண்டுகொள்ளாமல், அதனை உதாசீனப்படுத்தித் தூக்கி எறிந்துவிட்டு ஒரு விழாவை நடத்தியதன் மூலம் சொந்தச் சமூகமே மாகாண சபையைத்தூக்கி எறிந்திருப்பது மெச்சிக்கொள்ளக்கூடியது அல்ல. எந்த அதிகாரங்களுக்காகத் தமிழர்கள் போராடி வருகின்றார்களோ அதே அதிகாரத்தை வேண்டாம் எனப் புறமொதுக்கி கொழும்பின் அதிகாரத்தை வரவேற்றிருப்பதும் மக்கள் நகர்ந்திருப்பதும் வரவேற்புக்குரியதல்ல. இந்தப் போக்குத்தமிழர்களின்கோரிக்கைகளையே அர்த்தமற்றதாக்கிவிடும்.

இதுபோன்றசம்பவங்கள், தமிழர்களுக்குமாகாணசபையை நிர்வகிக்கத் தெரியாதது மட்டுமல்ல, மாகாணம் மற்றும் கொழும்புஎன்றகட்டமைப்புக்களைக்கையாளவும்தெரியவில்லை. இவர்களுக்கு ஏன் அதிகாரப் பகிர்வு என்று தெற்கைச் சேர்ந்தவர்கள் கேலி பேசும் நிலைமைக்கும் தமிழர்களைத் தள்ளிவிட்டுவிடும். எனவே மாகாண உறுப்பினர்களுக்கும்நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதில் கூட்டமைப்புக் கவனம் செலுத்த வேண்டியது இப்போது மிக முக்கியம்.



மைத்திரிபால சிறிசேன இந்த நாட்டின் அரச தலைவராக வரக்கூடுமென எவர்தான் எதிர்பார்த்தார்கள்? ஆனால் அந்த அதிசயம் நடைபெற்று விட்டதல்லவா? ஆதலால், எவர்தான் அதற்கு முயற்சித் தாலும் அது நடக்காது என்று கூற இயலாதே என்று கூட ஒருசிலர் கூற முற்பட்டுள்ளார் களே? எது எப்படியான போதிலும் அடுத்த அரச தலைவர் பதவிக்கான கனவோடு பலர் செயற்பட்டுவருகின்றனர் என்பது மட்டும் பொய்யல்ல.



# நாட்டின் தேவை விசுவாசமான தலைவர்களே!

சிங்கள மூலம்: கீர்த்தி ரூபசிங்க (மவ்பிம)
தமிழில்: வீ.எஸ்ரீ

நாட்டில் இன்று பேசிக் கொள்வதற்கு எத்தனையோ பிரச்சினைக்குரிய விடயங்கள் இருக்கும் நிலையிலும் அடுத்து வரும் அரசதலைவருக்கான தேர்தலில் எவரெவர் போட்டியிடக் கூடும் என்பது குறித்த எதிர்வு கூறல்களேபலரதுபேச்சில்அலசப்படும் முக்கிய விடயமாக இருந்து வருகின்றது

சுதந்திரக் கட்சி சார்பில் மைத்திரிபால சிறிசேனவே போட்டியிடுவார் எனச் சிலர் கூறிக் கொள்கின்றனர்.

ஐக்கிய தேசியக் க்ட்சி சார்பில் ரணிலே அடுத்த அரசதலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் என மற்றொரு தரப்பினர் அடித்துக்கூறுகின்றனர்.

இல்லையில்லை, நிச்சயமாக கோத்தபாயவும் அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடத் தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றார்என்பதுபிறிதொரு தரப்பினரது நம்பிக்கை

அந்த வகையில் 2020 ஆம் ஆண்டின் அரசதலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடவுள்ள புதுமுகங்கள் எவரெவரெனவும் ஒருசிலர் எதிர்வு கூறத்தலைப்பட்டுள்ளனர்.

சமூக இணையத்தளங்களில், தாம் எதிர்வரும் அரச தலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடவுள்ளதை அத்தகைய சில புதுமுகங்கள் சுய விளம்பரம் செய்தும் வருகின்றனர்.

**முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இவர்களெல்லாம் அடுத்த அரச தலைவர் தேர்தல் குறித்து இப்போதிருந்தே கடும் அக்கறை காட்ட முயல்வ தற்கான காரணமென்ன?**

**அரசதலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிட கட்டுப்பாடேதும் கிடையாது**

மைத்திரிபால சிறிசேன இந்த நாட்டின் அரச தலைவராக வரக்கூடுமென எவர்தான் எதிர்பார்த்தார்கள்? ஆனால் அந்த அதிசயம் நடைபெற்று விட்டதல்லவா? ஆதலால், எவர்தான் அதற்கு முயற்சித்தாலும் அது நடக்காது என்று கூற இயலாதே என்று கூட ஒருசிலர் கூற முற்பட்டுள்ளார்களே? எது எப்படியான போதிலும் அடுத்த அரச தலைவர் பதவிக்கான கனவோடுபலர்செயற்பட்டுவருகின்றனர் என்பது மட்டும் பொய்யல்ல.

மைத்திரிபாலவோ, தாம் அடுத்த அரச தலைவர் தேர்தலில்போட்டியிடப்போவதில்லை எனக் கூறிவருகின்றார். தமது பதவிக்கான அதிகாரங்கள் சிலவற்றைக் கைவிட்டதன் மூலம் நாட்டின் அரசியல் வழக்கத்தில் புதியதொரு அத்தியாயத்தை உருவாக்கிக் காட்டியவர் இந்த மைத்திரிபால. ஆனால் அவர் மீண்டும் அரசதலைவர் தேர்தலில் போட்டியிட மாட்டார் என உறுதியாகக் கூறிவிட இயலாதுள்ளது.

நான் எனது பதவிக்காலத்தில் நாட்டுக்கு நன்மை தரத்தக்க பல செயற்பாடுகளை மேற்கொண்டேன். அவற்றில் நிறைவேற்ற வேண்டிய மேலும் சில திட்டங்கள் மீதமுள்ளன. **அவற்றை நிறைவேற்றித்தர நான் மீண்டும் மக்கள் ஆணையைக் கோரி நிற்கிறேன் என மைத்திரிபால மீண்டும் மக்கள் முன்வரமாட்டார்எனக்கொள்ள இயலாது.**

**சரி, ரணில் விக்கிரமசிங்க** மீண்டும் ஒரு தடவை அரச தலைவர் தேர்தலில் போட்டியிட மாட்டார் எனக் கூறிவிட இயலாது. மூன்று தடவைகள் முயன்று தோற்றபோதிலும், நான்காவது தடவையாக முயன்று பார்க்கும் தகுதி அவருக்கு இல்லாமலில்லை. வென்றாலும் சரி தோற்றாலும் சரி, எது குறித்தும் அலட்டிக் கொள்ளாத சுபாவம் கொண்டரணில், மீண்டுமொரு முறை அரச தலைவர் பதவிக்கான பலப்பரீட்சையில் இறங்கினால் அதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

தென்கிழக்கு ஆசிய வட்டகையிலேயே தகுதி வாய்ந்த அரசியல்வாதியான ரணிலை நாட்டின் அரச தலைவராக்குவோம் எனக்கூறி பலர் அவரை வேட்பாளராக ஆக்க முயற்சிக்கக் கூடும்.

அதேவேளை "இரண்டு கடைகளிலும் இருந்த பொருள்களெல்லாம்பழுதாகிவிட்டுள்ளன" எனக் காரணம் கற்பித்துக் கொண்டு, சிலவேளை ஜே.வி.பி தரப்பின் சார்பில் அனுரகுமார திசநாயகவும் அரச தலைவர்தேர்தலில் குதிக்கக் கூடும்.

மறுபக்கத்தில், மூன்றாவது எஸ்.எவ் நடவடிக்கை எனக் கூறிக் கொண்டு சிலவேளை சரத் பொன்சேகாவும் தேர்தல் களத்தில் பலப்பரீட்சையில் ஈடுபட முன்வரக் கூடும், ஜனநாயக நாடொன்றில் இராணுவ அதிகாரியொருவரை நாட்டை நிர்வாகிக்க அனுமதிப்பது தவறென, இந்த நாட்டு மக்கள் சரத் பொன்சேகாமுதல்தடவையாக அரச தலைவர் தேர்தலில் போட்டியட்டபோதே தீர்மானித்து விட்டிருந்தனர். **18 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில்**

நாட்டு மக்கள் சரத்பொன்சேகாவை நிராகரித்திருந்தனர். போர்வெற்றியாளரானபோதிலும்நாட்டுமக்கள்சரத்பொன்சேகாவிடம்நாட்டைநிர்வகிக்கும்வாய்ப்பைக் கையளிக்க தயாராக இருக்கவில்லை.

கோத்தபாய அரச தலைவருக்கான தேர்தலில் ஏன் போட்டியிடக் கூடாது என கோத்த பாயவுக்காக வக்காலத்து வாங்குபவர்கள் சிலர் இல்லாமல் இல்லை. அதற்கேற்றாற்போல் புதிய அமைப்பொன்றை உருவாக்கி நகரங்கள், கிராமங்கள் மத்தியில் அது குறித்துப் பரப்புரை மேற்கொள்ள கோத்தபாய ஆரம்பித்தபோதே, ஒருசிலர் அவர் அரசதலைவர்பதவியை இலக்குவைத்துச்செயற்படுகிறார் என்று எதிர்வுகூறமுனைந்தனர். கோத்தபாய அந்தக் கருத்தை மறுத்துரைத்தபோதிலும், அது பூரணமான, உறுதியான மறுத்துரைப்பாக இருக்கவில்லை.

**மகிந்த தமது அரச தலைவர் பதவியை இழக்க முக்கிய காரணம் கோத்தபாயவே**

மகிந்தவின் அரசு பதவியிழக்க வேண்டி நேர்ந்தமைக்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் உள்ளக ரீதியில் மிக முக்கியமான காரணமொன்றாக அமைந்தது, அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவின் நடவடிக்கைகளின் தாக்கமே அரசியலும் இராணுவமும் வெவ்வேறான இரு பிரிவுகளே என்பதை உணர முடியாதிருக்கும்வரை, நாடொன்று பாதுகாப்பற்ற நிலையில் இருக்கவே நேரும். குறித்த அந்த நாட்டின் தலைவிதி சிக்கல் நிறைந்ததாகவே இருக்கும்.

இராணுவத் தரப்பின் தலைமைகள் அரசியலில் பிரவேசிப்பதால் ஏற்படும் போராபத்துக்குறித்துப் பாகிஸ்தான் போன்ற நாடுகள் உதாரணம் காட்டியுள்ளன.

கோத்தபாய மற்றும் சரத்பொன்சேகா போன்ற இந்த நாட்டின் இராணுவத்தரப்பைச் சார்ந்தோர் குறித்து 'ஜனவரி 8 புரட்சியில் கண்கண்ட சாட்சிகள்' என்ற தலைப்பிலான சிங்கள வரலாற்று நூலில் கீழ்க் கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

கோத்தபாய இலங்கை இராணுவத்தின் கஜபா றெஜிமேந்து படைப் பிரிவைச் சேர்ந்தவராயிருந்தார். சரத் பொன்சேகாவோ சிங்கள றெஜிமேந்து படைப் பிரிவைச் சேர்ந்தவராயிருந்தார். கோத்தபாயவைவிட சரத்பொன்சேகா ஓராண்டு காலத்தால் மூத்த நிலை அதிகாரியாய் இருந்தார். இருவருக்குமிடையே பொதுவான இயல்புகளாகப் பல இருந்தன. அவற்றில் அரசியல் குறித்த அனுபவமோ அறிவோ இருவரும் கொண்டிராதிருந்ததும் ஒரு ஒற்றுமை. அரசியல்வாதிகளுக்கு இராணுவம் குறித்த தெளிவு இல்லாதிருந்தமை போன்று இராணுவ அதிகாரிகளுக்கும் அரசியல் அறிவோ அனுபவமோ வாய்த்திருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டின் அரச தலைவர் தேர்தலில் சரத் பொன்சேகா போட்டியிடாது இருந்திருந்தால், அவரது உருவச் சிலைகள் வடக்கு கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் நாற்சந்திகளில் நிறுவப்பட்டிருக்கும்.

அது மட்டுமன்றி எதிர்காலத்தில், மேலும் நூறு வருடங்களுக்காவது அவர் போரை வென்று கொடுத்த ஒப்பற்ற இராணுவத்தளபதியாக வரலாற்றில் இடம் பிடித்திருந்திருப்பார்.

**இராணுவத்தை நிர்வகிப்பதற்கும் அரசொன்றை நிர்வகிப்பதற்கும் நிறையவே வேறுபாடுகள் உள்ளன**

மேற்குறித்த விதத்தில் குறிப்பிட்ட அந்த வரலாற்று நூலில் குறிப்பிட்டிருந்த அந்த நூலின் ஆசிரியர், இந்திய அரசியலில் இடம்பெற்ற சம்பவமொன்றையும் உதாரணம் காட்டி எழுதியிருந்தார். இந்திய உப கண்டத்தின் முதலாவது இராணுவ பீல்ட் மார்ஷல் பதவிவகித்த சாம் மானிக்ஷேவ் 1972 ஆம் ஆண்டில் இந்திய பாகிஸ்தான் போரில் இந்தியாவுக்கு வெற்றி தேடிக் கொடுத்த இராணுவ அதிகாரியாவார். அந்த வேளைய இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியை நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்க ஓய்வு பெற்ற இராணுவபீல்ட் மார்ஷலான சாம் மாணிக்ஷெவ் வைப் பயன்படுத்த எதிர்க்கட்சிகள் வியூகம் வகித்ததை தலைமை அமைச்சர் இந்திராகாந்தி ஏதோ ஒரு வகையில் தெரிந்து கொண்டார். பீல்ட் மார்ஷலைத் தமது உத்தியோகபூர்வ வாகஸ்தலத்துக்கு அழைப்பித்த தலைமை அமைச்சர் இந்திராகாந்தி, "நீங்கள் வாழ்நாள் முழுவதும் தேசிய வீரராக மதிப்புப்பெற்ற ஒருவரே. உங்களுக்கு இன்று எதிரிகள் என்று எவரும், எங்கும்கிடையாது. நீங்கள் அரசியலில் பிரவேசித்தால் உங்களது அரசியல் ஆதரவாளர்கள் உங்களை ஒருபக்கத்திலிருந்து இழுக்க முயல்வர். ஆனால் ஏனைய பக்கங்களில் உங்களுக்கு எதிரிகள் உருவாவர். இவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து அரசியலில் பிரவேசிப்பதா, இல்லையா என்பதைத் தீர்மானியுங்கள்" எனக்கூறினாராம். கடைசியில் தாமொரு இராணுவ வீரரேயன்றி அரசியல்வாதியல்ல என்ற முடிவை மேற்கொண்டாராம் அந்த பீல்ட் மார்ஷல்.

வடகொரியா தனது தன்னிச்சையான, ஆணவப் போக்கான நிர்வாகத்தால்



**வடகொரியா தனது தன்னிச்சையான, ஆணவப் போக்கான நிர்வாகத்தால் அழிவின் பக்கத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளது.**

**ஜனநாயக ரீதியில் செயற்படும் தென்கொரிய அரசு இன்று உலகின் முன்னேறி வரும் நாடுகளில் முக்கிய இடம் வகிக்கிறது.**

அழிவின் பக்கத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளது. நல்லாட்சி மற்றும் கொடூர ஆட்சி என்பவற்றை ஒரே தேசத்தில் காணவிரும்பினால் தென் மற்றும் வடகொரியா பக்கங்களை நோக்குவது பயனுடைத்து. ஜனநாயக ரீதியில் செயற்படும் தென்கொரிய அரசு, இன்று உலகின் முன்னேறி வரும் நாடுகளில் முக்கிய இடம் வகிக்கிறது. அதனுடன் எல்லையைப் பகிரும் வடகொரியாவோ அழிவுப் பாதையில் பயனளிக்கும் உலக நாடுகளில் முன்னிலை வகித்து வருகின்றது. இரண்டாம் உலகப்போரின் பின்னர் எந்தவொரு வேளையிலும் மற்றொரு பெரும் போருக்கு வழி வகுத்து நிற்கும் நாடாக வடகொரியா இன்று திகழ்கிறது.

**உலகையே அச்சுறுத்துகிறார் வடகொரிய அரச தலைவர்**

இன்றைய யுகத்தில் ஏகாதிபத்தியவாத மனநோயால் பீடிக்கப்பட்டு, உலகையை போர்ப் பீதியில் ஆழ்த்தி வரும் வடகொரியாவின் அதிபர் கிம் யோங் உன் தமது தந்தையின் மறைவையடுத்து நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட ஒருவராவார். இராணுவத்தில் கடமையாற்றி நான்கு நட்சத்திர பதக்கம் ஈட்டியவரான தனது மாமா மீது சதிக்குற்றம் சாட்டி சாவுத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தவர் இந்த கிம்யோங் உன். மூன்று நாள்களாக உணவோ நீரோ வழங்காது பசியோடு கட்டி வைத்திருந்த 120 நாய்கள் அடங்கிய கூட்டுக்குள் தனது மாமனைத் தள்ளுவித்து சில நிமிடங்களுக்குள்ளேயே அந்த நாய்களால் கடித்துக் குதறிக் கொன்று உண்ணப்பட்ட தனது மாமனது எலும்புகளைப் பார்த்துக் கிம்யோங் உன் திருப்தியடைந்தார் என்று ஹொங்கொங்கிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது. தற்போது அமெரிக்காவுக்குச் சவால் விடுத்து நாட்டை மட்டுமல்ல உலகத்தையே பயங்கர ஆபத்தின் பக்கம் இழுத்துச் செல்கிறார் அந்த கிம்யோங் உன்.

உலகம் ஜனநாயகத்துக்குத்தான் மதிப்பளிக்கிறது. இராணுவ அதிகாரிகளால் நிர்வகிக்கப்படும் நாட்டில் ஒழுக்கம் சிறப்பாக கடைக்கொள்ளப்பட்டாலும், சுதந்திரம் சிறைப்படுத்தப்பட்ட நிலையே நிலவுகிறது.

அத்தகையவர்களது கைகளில் ஒரு நாட்டின் நிர்வாகம் அகப்படுமானால் அந்த நாடு கடைசியில் அழிவையும் இழப்பையுமே சந்திக்க நேரிடும்.

எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் ஆரம்பித்த இளைஞர்களது எழுச்சி, எகிப்தின் இராணுவ நிர்வாகத்தை ஒழித்துக்கட்டுவதில் வெற்றிகண்டது. அதேபோல ஏகாதிபத்திய வழியில்யேமன்நாட்டை நிர்வகித்த அப்துல்லா செல்லாவின் தலைவிதியும் இளைஞர் எழுச்சியாலேயே முடிவு செய்யப்பட்டது.

தம்மை விட இருபது வயது இளையவரான தனது இளம் மனைவிக்கு நாட்டின் வளங்கள் அனைத்தையும் மட்டற்ற விதத்தில் வழங்கி டியூனிசியா நாட்டையே குட்டிச்சுவராக்கி நிர்வகித்த பென் அலியின் இரகசியங்கள் விக்கி லீக்ஸ்ஸால் வெளிப்படுத்தப்பட்டதையடுத்து பென்அலியின் ஆட்சி அகற்றப்பட்டது.

எனவே இராணுவப் பின்னணியில் நாடுகளை நிர்வகிப்பது தற்காலிக நிர்வாகமாக மட்டுமே அமைய நேரும். இன்றைய உலகு, சுதந்திர வாழ்க்கையை நாடும் மக்களது உலகாகும். அத்தகைய உலகுக்குத் தேவைப்படுவது விசுவாசமான அரசியல் தலைவர்களே!

## ஆசிரியருக்கான கடிதம்

### தொடரட்டும் பயன்தரவல்ல பணி

பனம் பழம், பனம் விதை குறித்து கடந்த ஞாயிறு உதயனின் சூரியகாந்தி பகுதியில் 2 பக்கங்கள் வரை ஒதுக்கப்பட்டு மிகக் கவர்ச்சிகரமாகவும் கனகச்சிதமாகவும் தகவல்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. சில. வாரங்களுக்கு முன்னர் 'விவேகம்' படத்துக்கான விமர்சனம் 'விவேகம்' வீண் விரயம் என தலைப்பிட்டு வெளிவந்திருந்தது. அந்தப் படம் வீண் விரயமோ இல்லையோ, அதற்காக ஒரு பக்கம் உதயனில் ஒதுக்கப்பட்டு விமர்சிக்கப்பட்டமை விரயத்திலும் விரயம். 'நீதிக்குப் பின் பாசம்' என்னும் ஒரு படத்திற்கு அந்தக் காலத்தில் 'பாதிக்குப் பின் மோசம்' என பட விமர்சனம் ஓரிரு வரிகளில் எழுதப்பட்டிருந்தமை இன்றும் மனதில் அழுத்தமாகப் பதிந்துள்ளது. விவரம் புரியாமல் விவேகத்துக்கு ஒரு பக்கம் ஒதுக்கியமை விவேகம் அல்ல.

இந்த நிலையில் பனம்பழம், பனம் விதை என்பவை குறித்த பயனுள்ள தகவல்களுக்கு 2 பக்கங்கள் ஒதுக்கியமையை 'கற்பக காவலன்' 'சிவதர்ம வள்ளல்' அமரர் க. கனராசா இன்றிருந்தால் அகம் மிக மகிழ்ந்து பாராட்டியிருப்பார். ஏனெனில் எம் மண்மீதும் மக்கள் மீதும் பற்றுக் கொண்டவர் அவர். அந்த வகையில் உதயனில் பனையின் பயன்பாட்டுக்கு இரண்டு பக்கங்கள் வரையில் ஒதுக்கியமை மக்கள் மீதும், மண் மீதும் உதயன் பற்றுக் கொண்டவன் என்பதனை வெளிப்படுத்தி நிற்கின்றது. கட்டுரையாளருக்கும் பிரசுரித்த பத்திரிகையாளருக்கும் மனமார்ந்த பாராட்டுக்கள்.

*மண்ணின் மைந்தன்.*

# பொருளாதார மேம்பாட்டை துரிதப்படுத்துவதே நோக்கம்

## *அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு*

அனைத்து நாடுகளுடனான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை கட்டியெழுப்புவதன் ஊடே பொருளாதார முன்னேற்றத்தை துரிதமாக்கிக் கொள்வதே அரசின் தற்போதைய கொள்கை என்ற கருத்தை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க உயர் பிரதிநிதிகள் குழுவை தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அரச தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"நாட்டில் மீண்டுமொரு போர்ச் சூழல் ஏற்படுவதனைத் தவிர்க்கும் முகமாக நாட்டில் நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம். குறிப்பாக நாட்டில் நல்லிணக்கத்தை பலப்படுத்துதல், மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்தல் மற்றும்

> அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையேயான உறவைப் பலப்படுத்தவும் இலங்கையின் புதிய அபிவிருத்தி திட்டங்களுக்காக அமெரிக்காவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவும் இலங்கை அரசு எதிர்பார்த்துள்ளது.



பொருளாதார உறுதிநிலையை ஏற்படுத்தி அனைத்து மக்களதும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே அரசின் தற்போதைய குறிக்கோள்.

புவியியல் ரீதியிலே இலங்கை முக்கிய அமைவிடத்தில் உள்ளது. கப்பல் போக்குவரத்தில் மட்டுமன்றி இந்து சமுத்திர பிராந்தியத்தின் பாதுகாப்புத் தொடர்பிலும் பங்களிப்பினை செய்துவருகிறோம். இலங்கை பாரிய வெளிநாட்டு முதலீட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்தியப் பாதுகாப்பு தொடர்பிலும் கவனமெடுக்க வேண்டியுள்ளது" - என்றார். (ஓ)

# தனித்துவமான தனியார் வங்கியாக கொமர்ஷல் வங்கி தெரிவு

## *கொழும்பு பங்குச் சந்தை நிதி ஈட்டப் பதிவுகள் தகவல்*

> மீளாய்வு செய்யப்பட்ட 12 மாத காலப்பகுதியில் நான்கு மாத காலத்துக்கான வரி 11 வீதத்தில் இருந்து 15 வீதமாக அதிகரித்துள்ளது. 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் இலாபம் 21.92 வீதத்தால் அதிகரித்து 14.513 பில்லியனாகப் பதிவாகியுள்ளது.

COMMERCIAL BANK

இலங்கையின் தனித்துவமான தனியார் வங்கியாக கொமர்ஷல் வங்கி தெரிவாகியுள்ளது என்ற தகவலை கொழும்பு பங்குச் சந்தையின் நிதி ஈட்டப் பதிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.


கொமர்ஷல் வங்கி 2016 ஆம் ஆண்டிற்குரிய வரிக்கு முன்னையதான இலாபமாக 20.051 பில்லியன் ரூபாயைப் பதிவு செய்துள்ளது. அத்துடன் ஒரு ரில்லியன் ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்களைக் கொண்டுள்ள இலங்கையின் முதலாவது தனியார் வங்கி என்ற நிலையையும் பெற்றுக்கொண்டுள்ளது.

பெறுமதி சேர் வரிக்கு முன்பான இலாபம் 18.58 வீதத்தால் அதிகரித்து 23.755 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியது. மீளாய்வு செய்யப்பட்ட 12 மாத காலப்பகுதியில் நான்கு மாத காலத்துக்கான வரி மதிப்பீடு 11 வீதத்தில் இருந்து 15 வீதமாக அதிகரித்துள்ளது. இதன் மூலமாக வங்கியின் பெறுமதி சேர் வரிச் செலவு மதிப்பீடுகள் 28.17 வீதத்தால் அதிகரித்து 3.703 பில்லியன்களாக அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் செலுத்திய தொகை மதிப்பீடான 2.889 பில்லியனில் இருந்தே இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது. வரிக்கு முன்பான இலாபத்தில் ஈட்டப்பட்ட 16.96 வீத வளர்ச்சி வரிக்குப் பிந்திய இலாபத்தின் வளர்ச்சியால் சிறப்பாக ஈடு செய்யப்பட்டுள்ளது என்ற தகவலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தவிர 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி 21.92 வீதத்தால் அதிகரித்து 14.513 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. 2015 ஆம் ஆண்டில் சுப்பர்கெயின் வரியாகச் செலுத்தப்பட்ட 2.570 பில்லியனிலும் பார்க்க இந்த மதிப்பீடுகள் 15.78 வீதம் அதிகமாகக் காணப்படுகின்றது.

இந்தப் பெறுபேறுகள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள கொமர்ஷல் வங்கியின் தலைவர் தர்ம தீரசிங்க,

"2016 ஆண்டில் எட்டப்பட்டுள்ள சாதனைகள் குறித்து வங்கி பெருமை கொள்கிறது. துரிதமாக மாறிவரும் சூழலிலும் கூட வங்கி தனது வளர்ச்சியைப் பேணக் கூடிய ஆற்றல் கொண்டது என்பதை இத்தகு நிதிசார் செயல்நிலைகள் பிரதிபலிக்கின்றன. ஐந்து ஆண்டுகளில் எமது ஐந்தொகையின் முக்கிய அலகுகள் இரட்டிப்பாகியுள்ளன. 2016 ஆம் ஆண்டு இந்த சாதனைகளுக்கு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளது" என்றார். (ஓ)



# கைத்தொழில் உற்பத்தி சுட்டெண் அதிகரிப்பு

> கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது மிகப் பிரதானமான பொருளாதாரக் குறிகாட்டியாக உள்ளதுடன் அவை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களையும் வெளிப்படுத்துகின்றமை குறித்து நோக்கத்தக்கது.

2016 ஆம் ஆண்டின் மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 மே மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அளவீடு 2.3 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்தத் தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

உற்பத்திக் கைத்தொழில்களில், 2016 ஆம் ஆண்டு மே மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 மே மாத உற்பத்திகளில் தளபாடங்கள் 21.6 வீதமாகவும், ஏனைய உலோகமல்லாத தாதுப் பொருள்கள் உற்பத்திகள் 15.4 வீதமாகவும் மற்றும் ஆடை அணிகலன்கள் 14 வீதமாகவும் பதிவாகியுள்ளதுடன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றன. உணவு உற்பத்தியானது மே மாதத்தில் 0.1 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அதேவேளை மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகள் 5.7 வீதமாகவும், இரசாயனமும் இரசாயனப் பொருள் உற்பத்தியும் 21 வீதமாகவும் மற்றும் புகையிலை உற்பத்திகள் 6.1 வீதமாகவும் வீழ்ச்சியைப் பதிவிட்டுள்ளன. (ஓ)

## கடந்த மார்ச் மாதத்தில்

# உணவல்லாப்பொருள்களின் செலவுப் பெறுமதி அதிகரிப்பு

கடந்த மார்ச் மாதத்தில் உணவல்லாப் பொருள்களின் செலவுப் பெறுமதி அதிகரித்துள்ளது. தளபாடம், குடிசார் உபகரணம் மற்றும் வழமையான குடிசார் பராமரிப்பு, ஆடை, நானாவிதப் பொருள்களும் சேவைகளும் ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதி அதிகரிப்பே இதற்கான காரணங்களாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தவிர தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையான வருடத்தின் மீதான பணவீக்கம் நடப்பாண்டின் மார்ச் மாதத்தில் சிறிய அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது என்ற தகவலையும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் அமரசதர சிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதத்தில் 8.2 வீதமாக இருந்த பணவீக்கமானது 2017 மார்ச் மாதத்தில் சிறிய அதிகரிப்பினை வெளிக்காட்டி 8.6 வீதமாகப் பதிவாகியுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பற்றியதான அறிக்கையில் பின்வரும் விடயங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக 2017 மார்ச் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளி லிருந்தான பணவீக்கப் பங்களிப்பு முறையே 4.9 வீதம், 3.8 வீதமாக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நிலவிய ஆகக் குறைந்த விலை மட்டங்களை பிரதிபலிக்கும் வகையில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளினதும் பங்களிப்புகள் முறையே 0.2 வீதம், 2.0 வீதமாகக் காணப்பட்டுள்ளன. இருப்பினும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதம் மீதான மாத மாற்றங்கள் என்ற வகையிலே ஒப்பிடும் போது 2017 பெப்ரவரி மாதத்தில் பதிவாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 119.9 இருந்து 2017 மார்ச் மாதத்தில் 119.5 ஆக குறைந்துள் ளது. இதனை பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது 0.4 சுட்டெண் புள்ளி மற்றும் 0.3 சதவீதக் குறைவு என்பவற்றை வெளிக்காட்டியுள்ளன. இந்த மாதாந்த மாற்றத்திற்கான காரணம் உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 0.38 வீதத்தினால் குறைந்தமையும் உணவல்லாப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 0.03 வீதத்தால் அதிகரித்தமையுமே ஆகும். (ஓ)


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

பங்குச்சந்தைத் தகவல்கள்

| 3/10/2017 | | | |
|---|---|---|---|
| www.cse.lk | | | |
| சுட்டிகள் | | இன்று | நேற்று |
| ASPI | ↑ 23.26 | 6,494.22 | 6,470.96 |
| S&P SL20 | ↑ 43.21 | 3,752.87 | 3,709.66 |
| வியாபாரப் புரள்வு | | 1,345,283,460 | 549,431,810 |
| உள்நாடு: கொள்வனவு | | 687,219,330 | 493,209,408 |
| விற்பனை | | 696,816,900 | 504,228,800 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 658,064,060 | 56,222,412 |
| விற்பனை | | 648,466,500 | 45,203,000 |

| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| நெஸ்லே லங்கா | NEST.N | 1,699.90 | 247,710 | 403,281,875 |
| எல்பிட்டிய பெருந்தோட்டம் | ELPL.N | 32.4 | 5,171,915 | 162,124,978 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 165 | 492,394 | 81,365,831 |
| சம்பத் வங்கி | SAMP.N | 320 | 248,370 | 79,009,803 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 71 | 888,718 | 63,099,028 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 245 | 189,673 | 46,498,496 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 140.5 | 316,905 | 43,331,302 |
| எ சி எல் கேபிள் | ACL.N | 42.9 | 819,472 | 34,833,343 |
| அக்ஸஸ் இஞ்சினியறிங் | AEL.N | 25.9 | 1,334,220 | 34,406,738 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.X | 61 | 537,390 | 32,793,138 |




அறிவித்தல்கள் -

பங்குலாபம்

மெர்க்கன்டைல் முதலீடுகள் (MERC)- Rs. 7.00
பி.ஆர்.சி லங்கா பினான்ஸ் (NIFL)- Rs. 0.04

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | | 295 |
| பரிமாற்றத்தில் | ↑ | 249 |
| விலை உழைப்பு | ↓ | 10.8 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.4 |
| பங்குலாப விளைவு | ↓ | 2.9 |

BRITISH COUNCIL



# உலகின் முன்னணி ஆங்கில வல்லுனர்களிடம் இணைந்து பயிலுங்கள்.

சிறந்த கற்கை அனுபவத்தினை
மாணவர்கள் பெறும் வகையில் புதிய
தொடர்பாடல் முறைகளைப்
பயன்படுத்தி எமது பாடத்திட்டங்கள்
வடிமைக்கப்பட்டுள்ளன.

எம்மிடம் சிறுவர் மற்றும்
பெரியோர்க்கான பல்வேறு பாடநெறிகள்
உள்ளன.

அக்டோபர் மாதம் ஆரம்பமாகும் அடுத்த கற்கை
நெறிக்காக அழையுங்கள் -
0217 521 521 (ext 6901)

பிரிட்டிஷ் கவுன்சில் |
70 ரக்கா வீதி, கண்டிக்குளி, யாழப்பாணம்.

# ES Printers

**2018**ஆம் ஆண்டுக்கான
**கலண்டர்கள்** விசேட விலைக்கழிவுடன்
அனைத்து அளவுகளிலும்,
அனைத்து நிறுவனங்களுக்கும்.



மக் பிரிண்ட்
( MUG )
**350/=**

ஆசிரியர் தின
அன்பளிப்பாக
ஆசிரியர் படம்,
வாழ்த்து பொறித்த
'மக்' வழங்கி
வாழ்த்துங்கள்.
குறைந்த விலையில்
குறுகிய காலத்தில்
நேர்த்தியாக செய்து
தரப்படும்.



தின நாள்காட்டி (கலண்டர்)
'வோல் கலண்டர்'
பஞ்சாங்கக் 'கலண்டர்'
'டெஸ்க் கலண்டர்'
'நம்பர் சீற் கலண்டர்'
'போட்டோக் கலண்டர்'

பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேர்ட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டீஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com



லொஸ் வெகாஸ் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அமெரிக்காவெங்கும் பரவலாக நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. தேவாலயங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. வெள்ளை மாளிகையிலும் சிறப்பு அஞ்சலிகள் நடைபெற்றன. (ம)

# லொஸ் வெகாஸ் சம்பவத்தில் தீவிரவாதக் குழுக்கள் இல்லை

## அமெரிக்கப் புலனாய்வுப் பணியகம் தகவல்

வொஷிங்டன், ஒக். 4

"உலகையே அதிரவைத்த லொஸ்வெகாஸ்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட நபருக்கு பன்னாட்டு தீவிரவாத குழுக்களுடன்தொடர்புகள்எதுவும் இல்லை" என அமெரிக்க புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.




லொஸ் வெகாஸ் நகரில் உள்ள கேசினோ கேளிக்கை விடுதியில் நேற்றுமுன்தினம் இந்த அசம்பாவிதம் நடைபெற்றது.

குறித்த விடுதியில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றுக்காக சுமார் 20 ஆயிரம் ரசிகர்கள் குவிந்திருந்த நிலையில் இந்தச் சூடு நடத்தப்பட்டது என்று அறிய வருகிறது. 58 பேர் உயிரிழந்தனர். துப்பாக்கிச் சூட்டினாலும், அதைத் தொடர்ந்து மக்கள் சிதறி ஓடியதால் ஏற்பட்ட சன நெரிசலுக்குள்ளும் சிக்கி சுமார் 520 பேர் காயமடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகமான டெய்லி மெய்ல் குறிப்பிட்டது.

இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு சில மணிநேரங்களின் பின்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தாக்குதலுக்குப் பொறுப்பேற்றது. எனினும் தாக்குதல்தாரி எந்த ஆயுதக் குழுக்களுடனும் தொடர்புபட்டிருக்கவில்லை என்று அமெரிக்கப் புலனாய்வுத்துறை அறிவித்தது. இசை நிகழ்ச்சி நடத்தப்பட்ட கேசினோ கேளிக்கை விடுதிக்கு எதிரேயுள்ள கட்டடத்தில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

10 இயந்திரத் துப்பாக்கிகள் மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் அமெரிக்கப் புலனாய்வுத்துறை அறிவித்தது. (ம)

# அமெ. உளவு வானூர்தியை சுட்டு வீழ்த்தியது ஹௌதி

ஏமன் நாட்டை உளவு பார்ப்பதற்காக அமெரிக்காஅனுப்பியிருந்தஆளில்லா வானூர்தியை ஹௌதி ஆயுதக் குழு சுட்டுவீழ்த்தியுள்ளது.

ஏமன்நாட்டின்அரசுக்குஎதிராகஹௌதி ஆயுதக் குழு போராடிவருகிறது.

ஹௌதி ஆயுதக் குழுவுக்கு எதிராக சவூதியின் தலைமையில் கூட்டுப் படைகள் போரிட்டுவருகின்றன. அமெரிக்காவும் அவ்வப்போது ஏமன் அரசுக்கு உதவி செய்து வருகிறது. இந்த நிலையில் ஹௌதி ஆயுதக் குழுவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிக்குமேலாக நேற்றுமுன்தினம்பறந்தஅமெரிக்கஉளவு வானூர்தி ஒன்றை ஹௌதி ஆயுதக் குழுவினர் சுட்டுவீழ்த்தியுள்ளனர். (ம)



# காட்டலோனிய மக்கள் தனிநாட்டுக்கு ஆதரவு

பார்சிலோனா, ஒக். 4

ஸ்பெய்னிடம் இருந்து பிரிந்து தனிநாடாகச் செல்வதற்காக காட்டலோனியா மாநிலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், பதிவுசெய்யப்பட்ட வாக்குகளில் 90 சதவீதமான வாக்குகள் பிரிவுக்கு ஆதரவாக அமைந்தன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெய்ன் நாட்டின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக காட்டலோனியா திகழ்கிறது.



ஸ்பெய்னின் வருவாய் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் காட்டலோனியாவின் பங்கு அதிகம். மக்கள் தொகையும் காட்டலோனியாவில் அதிகம். இதனாலேயே அந்த மாநிலம் தனிநாடாகச் செல்ல விரும்புகிறது. கடந்த ஐந்து வருடங்களாக இந்த தனிநாட்டுக் கோரிக்கை வலுத்துள்ளன. இந்தப் பின்னணியிலேயே இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தனிநாடாகப் பிரிந்து செல்வதற்கு ஸ்பெய்ன் அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதால், காட்டலோனியாவில் பரவலாகப் போராட்டம் நடைபெற்று வருகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இரவு பகலாகத் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. (ம)

HONDA WORLD
AUTHORIZED DEALER STAFFORD MOTOR CO.( PVT ) LTD
HONDA
The Power of Dreams
HONDA GENERATOR
JAFFNA SHOWROOM:
HOT LINE- 0763594350
NELLIADY SHOWROOM:
POINTPEDRO ROAD, NELLIADY.
T.P:- 0212264416 / 0770387444
HONDA WORLD

American English
First time in Jaffna
வயது வேறுபாடின்றி ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
வகுப்புக்கள் :
வார நாட்கள், வார இறுதி மற்றும் இரவு நேரங்களில் நடைபெறும்.
மொத்தமாக 7 level கொண்ட இப் பாடநெறியானது மாணவர்களின் ஆங்கில அறிவை சரளமாக வளர்க்க கூடியது. வகுப்பறை பயிற்சி மற்றும் களப்பயிற்சிகள் உள்ளடங்கலாக நவீன கற்றல் சாதனங்களின் உதவியுடன் இலகுவாக மாணவர்கள் ஆங்கிலம் பயில்வது உறுதிசெய்யப்படுகின்றது.
Speaking
Listening
Reading
Writing
Skills 4
ஆங்கிலத்தில் ஆரம்ப அறிவு இல்லை என்றால் level 1 இனை தெரிவு செய்யுங்கள்.
BRC யில் நடாத்தப்படுகின்ற English Placement test இல் தோற்றி உங்கள் ஆங்கில அடைவு மட்டத்தை அறிந்து உங்களுக்குரிய கற்கை நெறியை தொடருங்கள்.
Course Duration : Each stage 1 - 1 1/2 month
Course Fees : Each stage Rs. 2900/=
Registration Rs. 1000/= (one time only)
கொழும்பிலிருந்து வருகைதரும் ஆசிரியர் குழாமின் வழிகாட்டலில் தனிப்பட்ட கவனிப்பு, விரும்பிய கற்றல் நேரம் என மேலும் அதிகமான சலுகைகளுடன்.
076 584 22 22
சான்றிதழ் :- ஒவ்வொரு level இனையும் நிறைவு செய்பவர்களுக்கு தனித்தனி சான்றிதழ் வழங்கப்படும்.
(முழுமையாக நிறைவு செய்பவர்களுக்கு Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
BRC
BRITISH ROYAL COLLEGE
267, Power House Road, Jaffna.
T-021 221 4191
E-mail: collegebritishroyal@gmail.com
Web: www.britishroyalcollege.com

புதன் பொய்கை



**பொன்மொழி**

எழுத்தாளர் ஆவதற்குச் சாமர்த்தியம் மட்டும் போதாது. சரக்கும் வேண்டும்.

- எமர்சன்




மேலோர் நினைப்பர் கீழோர் மறப்பர் 24

சனி பகவானை வணங்கும் ஒழுங்குமுறை 20

'வாடைக் காற்று' மீள் வாசிப்பு 19






# புலம்பெயர் தமிழரின் எதிர்காலம்

நியூசிலாந்து சிற்சபேசன்

சென்ற நூற்றாண்டு பூமிப்பந்தெங்கும் பரந்து வாழும் தமிழருடைய வாழ்வியல் வரலாற்றில் தடங்கள் பல பதித்துள்ளது. குடியேற்ற அரசுகளால் தமிழர்கள் இலங்கை, மியன்மார், மலேசியா, தென் ஆபிரிக்கா, பீஜி, மொரீசியஸ் என உலகின் பல பாகங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். அவர்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டன. உணர்வுகள் தகர்க்கப்பட்டன. மியன்மாரிலிருந்து அகதிகளாக வெளியேறினர். மலையகத்தமிழர்கள் நாடற்றவர்களாகினர். தமிழர்கள் செறிந்து வாழும் தமிழ்நாட்டில் தமிழ் தேசியம் இந்தியத் தேசியத்துக்கு உட்பட்டதே என்னும் புதிய வரைவிலக்கணத்தை பேரறிஞர் அண்ணா முன்வைத்தார். அதுகாறும் தமிழ்தேசியத்தின் நீட்சியாக தனிநாடு கோட்பாட்டை முன்வைத்த திராவிட முன்னேற்ற கழகம் 1960களில் அந்தக் கோட்பாட்டை கைவிட்டது. இலங்கையிலே தமிழர்கட்கு எதிரான நிராக ரிப்புக்கள் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய பின்னணியிலேயே பெரிய அளவுகளில் புலம்பெயர்வுகள் ஏற்பட்டன. புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் தம்முடைய வாழ்வியல் போராட்டங்களையும் புலம்பெயர்ந்த நோக்கமான அடையாளம் பேணுதலையும் புதிய புலம்களில் எவ்வாறு அமைத்து வருகிறார்கள் என்பதையே இந்தக் கட்டுரை ஆராய முனைகின்றது.

**புலம்கள்**

ஐரோப்பிய நாடுகள், கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து என்பனவே பாரிய அளவுகளில் இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்துள்ள நாடுகளாகும்.

**சுவாத்தியம்**

புதிய புலங்களின் சுவாத்திய தன்மைகளுடன் இயைபடைந்து கொள்வதில் அவர்கள் அடையும் துயரை வார்த்தைகளில் வர்ணிப்பது இலகுவானதன்று. தம்முடைய சொந்த மண்ணிலேயே மாரிகால குளிரில் ஏங்கிப்போகின்றவர்கள். உறைநிலைக்குக் கீழே சாவகாசமாக இறங்கிச்செல்லும் குளிரில் உடலால் வருந்தி உள்ளத்தால் உருகிவிடுகின்றனர். சொந்த மண்ணின் இதமான தட்பவெப்ப நிலைகளை மனக்கண்ணில் உருவகப்படுத்தியே உள்ளத்தை ஆற்றுப்படுத்துகின்றனர்.

அதிகாலையிலே சூரியோதயத்துடன் எழுந்து பொழுதை ஆரம்பிப்பவர்கள் சூரியனே கண்ணில் தட்டுப்படாமல் பகல்கள் வந்து போவதைப் படித்திருப்பார்கள். ஆனால் அனுபவிக்கும்போது அதிர்ந்துவிடுகின்றார்கள். காலஓட்டத்தில் மிகுந்த போராட்டங்களுடன் தம்மை புதிய சுவாத்தியத்துடன் அத்தியாவசியமான அளவுளுக்கேனும் இயைபுபடுத்தி கொள்கின்றார்கள். ஆனாலும் ஒன்றிவிட இயலாமல் தவிக்கின்றனர். ஒன்றிவிடாமலேயே போய் விடுகின்றார்கள்.

> "தாவரத்துக்கு வேர்கள் எவ்வளவு அவசியமானதோ அவ்வளவு அவசியமானவையே மனிதருடைய அடையாளங்களாகும். கப்பலுக்கு கலங்கரை விளக்கம் போன்று மனித வாழ்வுக்கு பிடிமானமாகவும் வழி காட்டியாகவும் அமைவதே அடையாளமாகும்."

**வாழ்வுமுறைமை**

தமிழர்களுடைய வாழ்வுமுறைமை, வாழ்விலட்சியம் என்பன அவர்கள் புலம்பெயர்ந்துள்ள சமூகங்களினுடையதிலிருந்து மாறுபட்டதாகும். வாழ்வுபற்றிய கோட்பாடுகளில் ஒத்தவைகளிலும் பார்க்க ஒவ்வாதவைகளே அதிகமாகும். தமிழர்கள் ஆன்மிக ஈடுபாடு மிக்கவர்கள். இன்று என்பது நேற்று என்பதன் அத்திவாரத்தில் நாளை என்னும் எழப்போகும் எதிர்காலத்தின் முன்கட்டியம் என்னும் நம்பிக்கை உடையவர்கள். எப்படியும் வாழலாம் என்னும் சித்தாந்தத்தைப் பின்தள்ளி இப்படித்தான் வாழவேண்டும் என்னும் கட்டுக்கோப்பான வரைவிலக்கணத்தை முன்வைத்தவர்கள் தமிழர்கள்.

இருவேறுபட்ட வாழ்வுமுறைமைகளில் எதைத் தெரிவு செய்துகொள்வது: மேலைத்தேய வாழ்வுமுறைமையா? அல்லது கீழைத்தேய வாழ்வுமுறைமையா? என்பதே புலம்பெயர்ந்த முதலாவது தலைமுறை தமிழர் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாகும். தம்முடைய வாழ்வுமுறைமையை பிறவோடு ஒப்பீடு செய்கின்றார்கள். தம்முடையவை தாழ்வானவை என்னும் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்திக்கொள்கின்றார்கள். துன்புறுகின்றனர். பிறருடையவைகளை பின்பற்ற முனைகின்றனர். தோல்வியுறுகின்றனர். ஆங்கிலமோ, பிரஞ்சோ, ஜேர்மனோ இன்னோரன்ன பிறமொழிகளோ தமக்கு இரண்டாவது மொழி என்பதனை உணர மறுக்கின்றனர். அந்த மொழிகளைத் தம்மால் இலகுவாகக் கையாள இயலாமையை நினைந்து வருந்துகின்றனர். வாழ்வுமுறைமை பற்றிய தெளிவற்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளவர்கள் அடுத்த தலைமுறையினரை நெறிப்படுத்தி வழிகாட்டிடத் தயங்குகின்றார்கள். புலம்பெயர்நாடுகளில் வளரும் இளைய தலைமுறையினரோ மேலைத்தேய வாழ்வுமுறைமையை ஏற்றுக்கொள்ள துணிகின்றார்கள். இந்த வகையான ஆரோக்கியமாற்ற நிலைப்பாடுகளால் தமிழ் அடையாளம் காலஓட்டத்தில் கரைந்துவிடக்கூடிய அபாயநிலையையே காணக்கூடியதாக உள்ளது.

**அடையாளம்**

சொந்த மண்ணில் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பின்மையாலேயே புலம்பெயர்ந்திருந்தாலும் தமிழ் அடையாளம் பேணப்படல் வேண்டும் என்பதே புலம்பெயர்வின் உள்ளார்ந்த நோக்கமாகும். அடையாளம் எனப்படுவது எந்தவொரு இனத்தையும் அவர்களுடைய பாரம்பரியம், பண்பாடு, வாழ்க்கைக் கோட்பாடுகள், இலட்சியங்கள், முறைமைகள், நம்பிக்கைகள், ஆன்மிக நிலைப்பாடுகள், பழக்கவழக்கங்கள் என்னும் விழுமியங்களுடன் காண்பிப்பதாகும். அடையாளம் பேணுவது இயல்பானதாகும். அடையாளம் பேணாமை செயற்கையானது மட்டுமல்ல ஆரோக்கியமற்றதுமாகும். தாவரத்துக்கு வேர்கள் எவ்வளவு அவசியமானதோ அவ்வளவு அவசியமானவையே மனிதருடைய அடையாளங்களாகும். கப்பலுக்கு கலங்கரை விளக்கம் போன்று மனிதவாழ்வுக்கு பிடிமானமாகவும் வழிகாட்டியாகவும் அமைவதே அடையாளமாகும். உடைகள், கலாசார நிகழ்வுகள் என்பனவே என்ற ஒரு தோற்றம் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்கமுடிகின்றது. இவைகள் அடையாளத்தின் கூறுகள் என்பதை ஏற்றுக்கொள்



> பெரும்பாலோரின் புலம்பெயர்வுகள் சுய முயற்சியினாலேயே ஏற்பட்டுவருகின்றன. பெற்றவர்கள், பெரியவர்கள் என குடும்பத்தவர்களின் பங்களிப்பின்றித் தனியொருவருடைய செயற்பாடாகவே அமைந்துவிடுகின்றபோது ஆங்கே தன்முனைப்பு முன்னரங்குக்கு வந்துவிடுகின்றது. இந்நிலையிலேயே பிறரது அபிப்பிராயமும், ஆலோசனையும், ஒத்தாசையும் இல்லாமலேயே தனித்து எதையுமே சாதித்துவிடலாம் என்ற முனைப்பு ஏற்பட்டுவிடுகின்றது.

கின்ற வேளையில் இவைகள் மட்டுமே அடையாளத்தைப் பிரதிபலிப்பனவாக அமைந்துவிடாது என்பதனை புலம்பெயர்ந்த தமிழர் உணர தவறுகின்றனர்.

### வழிநடத்தல்

புலம்பெயர்ந்த முதலாவது தலைமுறை தமிழர் எதிர்கொள்ளும் குறிப்பிடத்தக்க இன்னுமொருவிடயம் வழிகாட்டுதல் இல்லாமையாகும். சொந்தமண்ணில் வாழ்ந்தபோது குடும்பங்களில் பெற்றவர்கள், பெரியவர்கள், மூத்தவர்கள் என கூடி வாழ்ந்தனர். ஆலோசனைகளும் வழிநடத்தலும் ஒத்தாசைகளும் என வாழ்க்கைப் பயணத்தில் வழித்துணைகள் இருந்தன. புலம்பெயர்ந்தவர்களை பொறுத்தவரை பெற்றவர்களை, சுற்றத்தவர்களை நீண்ட நெடுங்காலம் பிரிந்து வாழ்வதாக வாழ்க்கை அமைந்துவிடுகின்றது. இவ்வாறான நிலைப்பாடுகள் தமிழர்களுக்கு முற்றிலும் புதியவையாகும். புதிய சூழல், புரியாத மொழி, புதிரான வாழ்வுமுறைமை என்பனவற்றுடன் பயணத்தில் வழித்துணைகளும் இல்லை.
தனிமனித சுதந்திரம், பொருளாதார சுதந்திரம் என்பனவற்றில் தமிழர்களுடைய வரைவிலக்கணம், அவர்கள் புலம்பெயர்ந்துள்ள சமூகத்தினதிலிருந்து பெரிதும் வேறுபட்டதாகும். புலம்பெயர் தேசங்



களில் வழக்கிலுள்ள தனிமனித மற்றும் பொருளாதார சுதந்திரங்களின் உள்ளார்ந்த பண்புகள் தமிழர்களுக்குப் புரியாமையால் புதுமையாக உள்ளன. அவற்றைத் தெளிவாக உள்வாங்கிக் கொள்ளவும், இயைபடைந்துகொள்ளவும் தமிழர்கள் சிரமப்படுகின்றார்கள்.
புரிதலின்மையால் தன்னிச்சையான செயற்பாடுகள் ஆரம்பமாகின்றன. குடும்பம், சமூகம் என்னும் கோப்புகளிலிருந்து தமிழர் விலகத் துணிகின்ற னர்.
பெரும்பாலோரின் புலம்பெயர்வுகள் சுய முயற்சியினாலேயே ஏற்பட்டுவருகின்றன. பெற்றவர்கள், பெரியவர்கள் என குடும்பத்தவர்களின் பங்களிப்பின்றி தனியொருவருடைய செயற்பாடகவே அமைந்துவிடுகின்றபோது ஆங்கே தன்முனைப்பு முன்னரங்குக்கு வந்துவிடுகின்றது. இந்த நிலையிலேயே பிறரது அபிப்பிராயமும், ஆலோசனையும், ஒத்தாசையும் இல்லாமலேயே தனித்து எதையுமே சாதித்துவிடலாம் என்ற முனைப்பு ஏற்பட்டுவிடுகின்றது. வாழ்க்கை ஓர் தொடர் பயணம், பெற்றவருடைய அனுபவம், வழிகாட்டுதல் என்பன பிள்ளைகட்கு கைமாறும்போதுதான் வாழ்வு சிறப்படைகின்றது!
புலம்பெயர்களனில் வழிகாட்டிகளும் குறைவு, அப்படியான வழிகாட்டுதல்களை ஏற்றுக்கொண்டு வளம்பெற விழைவோரும் அரிதாக உள்ளமையையே காணக்கூடியதாக உள்ளது.

### இல்லறம்

இல்லறமல்லது நல்லறமன்று என்பது ஆன்றோர் வாக்கு. ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் வாழ்க்கையை அறம் என வகுத்தது தமிழ் சமூகமாகும். திருமணம் என்பது இருநபர்கள் இணைந்து வாழும் வாழ்க்கை என்பது மேலைத்தேய கோட்பாடாகும். இருநபர்கள் இணைந்து வாழும் வாழ்க்கை என்று மட்டுமல்லாமல் இரு குடும்பங்களின் இணைப்பாக வகுத்தது தமிழ் சமூகம். இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி, வேளாண்மை செய்தற் பொருட்டு என செந்நாப்போதர் சொல்லிப்போந்தார். விருந்தோம்பல் தமிழருடைய பண்பாடு. உபசரிப்பது தமிழருடைய பாரம்பரியம். பண்பாடும் பாரம்பரியமும் பேணப்படவேண்டும் என்னும் கோணத்திலும் இல்வாழ்க்கை விதந்துரைக்கப்படுகின்றது. இல்லத்துக்கு வருவோரை எதிர்கொண்டழைத்து வரவேற்று விருந்தோம்பும் பாரம்பரியம் புலம்பெயர்கள னில் அருகிவருவதையே காணமுடிகின்றது. உபசாரம் என்பது அறவே விலக்கப்பட்ட தையே உணரமுடிகின்றது. இந்நிலை தொடருகின்ற பட்சத்தில் தமிழ்மண்ணில் வாழும் தமிழரும் புலம்பெயர் களனில் வாழும் தமிழரும் உறவாட இயலாத நிலையே ஏற்படும்.
பண்பாடும் பாரம்பரியமும் தவறவிடப்படும்போது காலஓட்டத்தில் அடையாளம் சிதைந்து போகக்கூடிய சாத்தியக்கூறுகளே அதிகமாகின்றன.

### குடும்பம்

தனிமனிதர்கள் இணைந்து குடும்பங்கள் அமைகின்றன.
குடும்பங்கள் இணைந்து சமூகம் உருவாகின்றது. ஆக ஆரோக்கியமான குடும்பங்களே சமூகத்தின் ஆணிவேராகும். கூட்டு மனப்பான்மை குறைந்து தனித்துவமும் தன்னிச்சையான செயற்பாடுகளும்



குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்படும் பொழுது அதனுடைய பிரதிபலிப்பாக கூட்டுணர்வு, புரிந்துணர்வு, நேசம் போன்ற நற்குணாம்சங்களற்ற சமூகத்தையே காணலாம். புலம்பெயர்க ளன்களிலே குடும்பங்களிலே நியாயமான நிர்ப்பந்தங்களாலும் தனித்துவம் என்னும் மேலைத்தேய பண்பாட்டு கூறடிப்படையில் செயற்படுவதாலும் ஒட்டுதல்கள் குறைந்துவருகின்றன. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து ஒருவேளை உணவையேனும் அருந்துவது கூட அரிதாகிவருகின்றது. குடும்பங்களில் ஒருவரிடமிருந்து மற்றவர் விலகிச் செல்லும் பாங்கு பெருகி வருகின்றது.
குடும்பங்கள் ஒன்று கூடும்போது ஆண்கள் ஒரு குழுவாகவும் பெண்கள் மற்றுமொரு குழுவாகவும் சிறுவர், சிறுமியர் இன்னுமொரு குழுவாகவும் முதியவர்கள் தனித்தும் விடப்பட்டுவிடுகின்ற நிலையையே பெரும்பாலும் அவதானிக்க கூடியதாக உள்ளது. இவ்வகையான செயற்பாடுகள் குடும்ப உறுப்பினர்களை ஒன்று சேர்ப்பதற்கு பதிலாக அவர்களுக்கு இடையேயான இடைவெளியையே அதிகப்படுத்துகின்றது. ஒற்றுமையை வளர்க்க வேண்டிய ஒன்றுகூடல்கள் கூட எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தி வருகின்றன. இவை தலைமுறை இடைவெளியால் ஏற்படுவதாக காரணம் கற்பிப்பது சற்றும் பொருத்தமற்றதாகும். சொந்தமண்ணில் பாட்டன் முதல் பேரன் வரை ஒன்றுகூடி ஒற்றுமையாக வளர்ந்து வளம்பெற்ற நேற்றைய நினைவுகள் புலம்பெயர் நாடுகளில் ஏற்பட்டுள்ள நிலைகண்டு தலைகுனிகின்றன. புலம்பெயர் நாடுகளில் தமிழரது குடும்ப சித்தாந்தங்கள் மாறிவருவதான அறிகுறிகளே தென்படுகின்றன.

### மொழி

புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழி பேணப்படுகின்றதா என்பது நோக்கும் கோணத்தைப் பொறுத்ததாகும். பலநாடுகளில் தமிழ் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழில் கருமங்களை ஆற்றக்கூடிய நிலை பரவலாக ஏற்பட்டுவருகின்றது. பாடசாலை கல்வித் திட்டங்களில் தமிழ்மொழி ஓர் அலகாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. பொது நூலகங்களில் தமிழ் நூல்கள் சேர்க்கப் பட்டுவருகின்றன.
இவ்வகையானசெயற்பாடுகள்மட்டுமேதமிழ் மொழியை பேணிப் பாதுகாக்கும்என்பதாக கொள்ளவியலாது. புலம்பெயர் நாடுகளில்வளரும் இளைய தலைமுறையினர் தமிழ் மொழியை தொடர்புமொழியாக கொள்கின்றனரா என்பதைப் பொறுத்தே தமிழின் எதிர்காலத்தை கணிப்பிட முடியும். சமையல்கூடங்களில் தமிழ் தொடர்புமொழியாக இல்லாது போகும் பட்சத்தில் காலப்போக்கில் வழக்கிழந்து போகும் வாய்ப்புக்களே அதிகமாகின்றன.
புலம்பெயர்களன்களில் தமிழ்மொழிக் கல்வி வலியுறுத்தப்படுகின்ற வேளையில் அஃது தொடர்புமொழியாக வலியுறுத்தப்படாமையையே அவதானிக்க முடிகின்றது.

### சமூகம்

புலம்பெயர் நாடுகளில் தமது அடையாளங்கள் பேணப்படல்வேண்டும் என்பதில் முதல் தலைமுறையினர் ஆர்வம் கொண்டுள்ளமையையே காணக்கூடியதாக உள்ளது. மொழி, கலை கலாசாரம் சார்ந்த மற்றும் பழைய மாணவர் ஒன்றியங்கள் என பலவகைப்பட்ட சமூக அமைப்புக்கள் செயற்படுகின்றன. இவைகளின் செயற்பாடுகளால் இளைய தலைமுறையினருக்கு தமிழ் கலாச்சாரங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. கர்நாடாக சங்கீத வாய்ப்பாட்டு மற்றும் வாத்தியக் கருவிகள், பரதநாட்டிய அரங்கேற்றங்கள் நடைபெறுகின்றன. தமிழ் செய்திதாள்களும் வானொலி மற்றும் தொலைக்காட்சி சேவைகளும் தமிழர்களை இணைக்கும் பாலமாகவும் அவர்களுடைய கருத்துக்கட்கு மேடையாகவும் அமைவதோடு புலம்பெயர்ந்த தமிழரிடையேயுள்ள எழுத்தாளர்களையும் படைப்பாளிகளையும் அடையாளம் காட்டுகின்றன.
புலம்பெயர்களனில் சமூக அமைப்புக்களும் ஊடகங்களும் தமிழருடைய வாழ்வை வளம்படுத்தியே வருகின்றன.

### முடிவு

புலம்பெயர்களன்களில் தமிழர்கள் தமது அடையாளங்களை எவ்வாறு பேணுகின்றார்கள் என்பதை இக்கட்டுரை ஆராய முற்பட்டிருக்கின்றது.
முதல் தலைமுறையினரிடம் தெளிந்த பார்வையும் திடமான தொலைநோக்கும், குலையாத பிடிமானமும் இருப்பதாக வரையறுத்துச்சொல்ல முடியாத நிலைப்பாடேயுள்ளது. அவர்கட்கு வழிகாட்டுதல்கள் இல்லை. தமது சந்ததியினர் தமிழ் அடையாளங்களை பேணவேண்டும் என விரும்புகின்றார்கள். ஆனால் தாமே கலாச்சார விழுமியங்களை தொலைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இப்படித் தான் வாழவேண்டும் என்பதை விடுத்து எப்படியும் வாழலாம் எனத் துணிகின்றார்கள்.
சுதந்திரமான வாழ்வு என்ற கோதாவில் தமிழ் விழுமியங்களை தவற விடுகின்றார்கள். இவர்களிடையே விருந்தோம்பலும் உபசாரமும் அர்த்தமிழந்து வருகின்றன. வயதில் இளையவர்கள் தமக்கு மூத்தவர்களை மதிப்பது அருகிவருகின்றது. வயதில் பெரியவர்களை பெயர் சொல்லி அழைப்பது நாகரீகம் என்ற அபிப்பிராயத்தை வளர்த்துக்கொண்டு வருகின்றார்கள்.
இவ்வாறாக தமிழ் விழுமியங்களை முதலாவது தலைமுறையினரே உதறுகின்றபோது அடுத்துவரும் தலைமுறைகட்கு அவை கிடைக்காமல் போய்விடுகின்ற நிலையையே கற்பனை பண்ண முடிகின்றது.
இந்த நிலை மாறவேண்டும். கல்தோன்றி மண்தோன்றா காலத்து முன்தோன்றிய பெருமைகொண்டகுடியினர் தமிழர்கள். அவர்கள் பழம்பெரும் நாகரீகங்களின் சொந்தக்காரர்கள். அவர்களுடைய அடையாளம் என்றென்றும் நிலைபெற வேண்டும்.



# செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' ஒரு மீள் வாசிப்பு




அ.றொனிராஜன்

எழுத்து இலக்கிய உலகில் பலராலும் அறியப்பட்ட செங்கை ஆழியானின் இயற்பெயர் கந்தையா குணராசா. இவர் ஒரு புவியியல் பட்டதாரி. புவியியல் பாடத்தில் கலாநிதிப் பட்டத்தை நிறைவு செய்தவர். கொழும்புப் பல்கலைக் கழக உதவி விரிவுரையாளர், ஆசிரியர், உயர் நிர்வாகசேவை அதிகாரி, பிரதிக் காணி ஆணையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர், உதவி அரசாங்க அதிபர் என பல்வேறுபட்ட உயர் பதவிகளை வகித்தவர். சிறுகதை, நாவல், பாடநூல் உருவாக்கம், கட்டுரை ஆக்கம், ஆய்வு நூல்கள், தொகுப்பு முயற்சிகள் எனப் பல தளங்களில் தனது ஆளுமையைச் செலுத்தியவர். தனது எழுத்துக்களுக்காக பல்வேறு விருதுகளையும் பட்டங்களையும் பெற்றவர். அவரது "வாடைக்காற்று" நாவல் இங்கு மீள்வாசிப்புச் செய்யப்படுகிறது.

**வாடைக்காற்று**

1973ஆம் ஆண்டு வீரகேசரி வெளியீடாக "வாடைக்காற்று" நாவல் வெளிவந்தது. வெளிவந்த சில காலத்துக்குள் இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. காரணம், இங்கு ஆய்வுப்பொருளாக அமையும் "வாடைக்காற்று" நாவல், பல நிலைகளில் பிழையான தகவல்களைக் கொண்டு காணப்படுகின்றமையாகும். இந்த நாவல் பற்றி முன்வைக்கப்பட்ட மதிப்பீடுகளை நோக்கும்போது, அவை நாவலின் கலைத்தன்மையை உச்சத்தில் வைத்துக் கொண்டாடுகின்றன. அவை எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதனையும் மீள்வாசிப்புச் செய்வதாக இந்த ஆய்வு அமைகின்றது.

**நாவலின் களம்**

"வாடைக்காற்று" நெடுந்தீவைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் எனக் கொண்டாலும், உண்மையில் நெடுந்தீவின் தெற்குக் கடற்கரையைப் பகைப்புலமாகக் கொண்டு அந்தக் குறுகிய பகுதிக்குள் நடைபெறும் ஒரு காதல் கதையின் தோற்றம், வளர்ச்சி, முடிவு பற்றிப் பேசுகின்றது. ஆனால், இக்குறுகிய களம் பற்றிய எடுத்துரைப்புக்கூட நம்பகத்தன்மை கொண்டதாகக் காணப்படவில்லை. இங்கு கதையின் நகர்வுடன் கடற்கரை, மயானம், கிணறு, ஆலடி வைரவர் கோவில் என்பன தொடர்புபடுகின்றன. இதில் கடற்கரை என்பது பிரதான கதைக்களமாகக் காணப்படுகின்றது. தொழிலாளர்களின் குடியிருப்பு, அவர்கள் கடல் தொழிலில் ஈடுபடும் காட்சி, அவர்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடும் போட்டியும் என்றவாறாக கடற்கரை முக்கியம் பெறுகின்றது.

> கடற்கரை என்பது பிரதான கதைக்களமாகக் காணப்படுகின்றது. தொழிலாளர்களின் குடியிருப்பு, அவர்கள் கடல் தொழிலில் ஈடுபடும் காட்சி, அவர்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடும் போட்டியும் என்றவாறாக கடற்கரை முக்கியம் பெறுகின்றது.

ஆனால், இந்நாவலில் நெடுந்தீவுக்கு வெளியில் இருந்து வரும் தொழிலாளர்கள் மற்றும் உள்ளூர் மீனவர்கள் எந்தெந்த இடங்களில் வாடியமைத்துத் தொழில் செய்ய வேண்டும் என்ற தரவு, "அதோ பார், கிழக்கே தெரியுதே ஆலமரம்... அதுக்கு முன்னால் நிற்கிற பனையிலிருந்து, உங்கே தெரிகிற பூவரசமரம் மட்டும் இருக்கிற கரை உள்ளூர்காரங்களுக்குச் சொந்தம்... அதிலேதான் உள்ளூர் சம்மாட்டி யூசுப்பினுடைய கட்டுமரங்கள் வந்து கரையேறும்... அதிலேயிருந்து மேற்கால அந்தப் புளியமரம் இருக்குமிடத்தில் வெளியூர்க்காரங்க யாரும் தங்கி மீன் பிடிக்கலாம்..." (வாடைக்காற்று பக்:13) என்று காட்டப்படுகிறது.

நெடுந்தீவின் தெற்குக் கரையிலுள்ள 'வெல்லை' என்னும் பகுதியே இந்நாவலில் குறிக்கப்படும் முக்கிய நிலப்பகுதி. இது தீவின் தென்மேற்கு முனையிலிருந்து தென்கிழக்கு முனை வரையுள்ள பகுதியின் இடையில் அமையும் சிறு நிலப்பகுதி. இங்கு முள்ளி, தாழை, இயங்கம் பற்றை மற்றும் கண்டல் தாவரங்களும் சில இடங்களில் மாத்திரம் ஒரு சில பனைகளும் உள்ளன. ஆனால், இங்கு குறிப்பிடப்படும் புளியமரம், பூவரசமரம் என்பன இப்பகுதிகளில் இல்லை. அதேபோன்று இங்குள்ள பொதுக் கிணறு பற்றிச் சொல்லப்படுகிறது. இக்கிணற்றுப் பகுதிதான் சிமியோன் பிலோமினா ஆகியோரின் காதல் வளரும் இடமாக இருக்கிறது. இப்பிரதேசத்தின் கிணறுள்ள இடம் பற்றி, "கடற்கரையில் வாழ்கின்ற ஒன்பது குடும்பங்களும் தங்களுக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெறுவதற்குக் கால் மைல் தூரம் வடக்கே செல்ல வேண்டும். அண்மையில் இரு கிணறுகள் இருந்த போதிலும் அவற்றின் நீர் உவர்ப்பாயிருந்ததால் குளிப்பதற்கும், பாத்திரங்கள் கழுவுவதற்குமே அவை உதவின (வாடைக்காற்று பக்:5) என்று குறிப்பிடப்படுகிறது. இந்த இரண்டு தகவல்களும் தவறானவையாகும். ஒன்று "கடற்கரையிலிருந்து கால் மைல் தூரத்தில் நன்னீர்க்கிணறு உள்ளது. இன்னொன்று கடற்கரைக்கு அண்மையில் உள்ள நீர் உவர்ப்பானதுஎன்பது. ஆனால், கடற்கரையில் இருந்து ஐம்பது மீற்றர் தூரத்துக்குள் குடிநீர்க்கிணறுகள் இருக்கின்றன. இக்கிணறுகளில் உள்ள நீர் உவர்ப்புத் தன்மை அற்ற தூயநீர் ஆகும். கோடை காலங்களில் நெடுந்தீவின் வடக்கு, மற்றும் மத்தியில் உள்ள மக்கள் குறிப்பாக, பெண்கள் தண்ணீர் எடுப்பதற்காக நெடுந்தீவின் தென்பகுதிக்குத்தான் செல்வார்கள்.

இந்நாவலில் "சுடலைச் சண்முகம்" என்றொரு பாத்திரம் இடம்பெறுகிறது. இப்பாத்திரம் ஒழுக்கப்பிறழ்வு கொண்ட பாத்திரமாகவும் கதை நகர்வுக்கு அவசியமானதொன்றாகவும் காணப்படுகின்றது. எனவே இப்பாத்திரத்தை மயானத்துடன் தொடர்புபடுத்த மயானம் பற்றிய தரவு, "கிணற்றுக்கு வடக்கே இருநூறு யார் தூரத்தில் பெரியதொரு ஆலமரம் கிளை பரப்பிச் செழித்து வளர்ந்திருந்தது. அதனோடு இணைந்து சில பனை மரங்களும் காணப்பட்டன. அவ்வூருக்கான பொதுமயானம் அங்கேயிருந்தது" (வாடைக்காற்று பக்:6) என்றுள்ளது. இங்கு குறிப்பிடப்படும் மயானம் ஆசிரியர் குறிப்பிடுவதைப் போன்ற பாங்கில் அமைந்திருந்த ஒன்றல்ல. மாறாக கடற்கரைக்கு மிக அருகிலேயே இருந்தது. இப்போதும் இருக்கின்றது. இக்கணிப்பும் தவறானதாகும்.

அடுத்ததாக, "ஆலடி வைரவர் கோவில்" என ஒரு இந்து ஆலயம் பற்றிய குறிப்பு வருகின்றது. பிலோமினாவும் சிமியோனும் ஒருவரை ஒருவர் தனிமையில் சந்திக்கும் இடமாக இந்த ஆலயச் சூழல் இடம் பெறுகிறது. ஆனால், நெடுந்தீவின் தென்கரையில் வைரவர் கோவில் எதுவும் இல்லை. மாறாக "தெக்காட்டு அம்மன்" கோவில் என அழைக்கப்படும் ஒரு அம்மன் கோவில் கடற்கரையில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட விடயங்களை நாம் உற்று நோக்கும் போது, ஆசிரியருக்கு இக்களம் பற்றிய பரீட்சயம் இல்லை என்ற விடயம் உறுதியாகிறது.

**வெளியூர்த் தொழிலாளர்கள்**

இந்நாவலில் சிமியோன் கரையூரிலிருந்து ஆண்டுதோறும் மீன்பிடிக்க வரும் மீனவனாகவும், மரியதாஸ் முதன் முதலாக மன்னார் பேசாலையிலிருந்து தொழில் செய்வதற்கு வந்த மீனவனாகவும் காட்டப்படுகின்றனர். ஆனால், நெடுந்தீவிலிருந்து கிடைக்கப்பெற்ற வாய்மொழித் தரவுகள் மூலமும் நூல் மூல ஆதாரத்தின் அடிப்படையிலும், "இங்கு காலத்துக்குக் காலம் மயிலிட்டி, தாளையடி, முல்லைத்தீவு முதலிய இடங்களிலிருந்தும் மீனவர்கள் வந்து வாடி அமைத்து மீன் பிடிப்பது வழக்கமாகும். "(நெடுந்தீவு மக்களும் வரலாறும், விநாயகமூர்த்தி, பக்:55) வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காலங்களில் இலங்கையின் வடகடல், கிழக்குக் கடல் என்பன கொந்தளிப்பாகக் காணப்படும். எனவே, இக்கடல்களில் தொழில் செய்வது மீனவர்களுக்குப் பெரும் சவாலாக அமையும். ஆகவே, ஓரளவு கடல் கொந்தளிப்புக் குறைவான நெடுந்தீவுக்கு மீனவர்கள் வருவது வழமையாகும். ஆனால், இந்நாவலில் குறிப்பிடுவதைப் போன்று மன்னார், கரையூர் போன்ற இடங்களில் இருந்து மீனவர்கள் வருவதில்லை. காரணம், இந்த இரண்டு இடங்களும் வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றின் ஒதுக்குப் புறத்தில் அமைந்துள்ளன. எனவே, இங்கிருந்து அவர்கள் மீன்பாடுள்ள இடங்களுக்கு இலகுவாகச் சென்று வரலாம். எனவே ஆசிரியர் குறிப்பிடும் தரவு நம்பகத் தன்மை அற்றதாக உள்ளது.

**நெடுந்தீவில் கரைவலைத் தொழில்**

அதிக அளவிலான மனித வலுவைக் கொண்டு செய்யப்படும் தொழில்தான் கரைவலைத் தொழில். இதற்குக் கற்பாறைகள் அற்ற மணல் பாங்கான கடல் அவசியம். நெடுந்தீவில் கரைவலைத் தொழில் செய்வதற்குப் பொருத்தமான இடம் நெடுந்தீவின் வடகடலில் சேமக்காலைக்கு அருகில் உள்ளது. மேலும் நெடுந்தீவின் தென் கடல் அதிகமான கற்பாறைகளைக் கொண்ட இடமாகும். ஆனால், இந்நாவலில் நெடுந்தீவின் தென்கரையில் மன்னாரில் இருந்து வந்த சம்மாட்டி மரியதாஸ் கரைவலைத் தொழில் செய்வதாகவும் பலமுறை முயன்று, ஈற்றில் ஏனைய மீனவர்கள் வியக்கும் வண்ணம் பெருமளவிலான மீன்களைப் பிடிப்பதாகவும் காட்டுவது நகைப்புக்குரியதொன்றாக இருக்கிறது.

(தொடரும்)





காரைநகர் மணிவாசகர் சபையினால் அமரர் கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்களின் இரண்டாம் ஆண்டு நினைவிற்கான சமர்ப்பண நூலான 'திருவாசக மணி' நூல் வெளியீட்டு விழா அண்மையில் காரைநகர் இந்துக்கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புரையினை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபரும் மணிவாசகர் சபையின் தலைவருமான வே.முருகமூர்த்தியும் நினைவுரைகளை சிவஸ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்), அதி.வண கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோரும் நிகழ்த்த நூல் நயப்புரையை ஓய்வு நிலை அதிபர் க.செல்லத்துரை நிகழ்த்தினார். (ம -250)


# வரலாற்றில் இன்றைய தினம்

1535 - ஆங்கில மொழியிலான வேதாகமம் அச்சிடப்பட்டது.
1582 - இத்தாலி, போலந்து, போர்த்துக்கல் மற்றும் ஸ்பெய்னில் கிறகோரியன் நாள்காட்டிநடைறைக்கு வந்தது. இதற்கமைய இந்த ஆண்டின் ஒக்ரோபர் நான்காம் திகதி நேரடியாக ஒக்ரோபர் 15 எனக் கொள்ளப்பட்டது.
1883 - ஓரியன் எக்ஸ்பிரஸ் முதன் முதலாக தனது சேவையைத் தொடங்கியது.
1957 - முதலாவது செயற்கைக் கோளான ஸ்புட்னிக் முதன் முதலாக விண்வெளியில் புவியைச் சுற்றி வந்தது.
1958 - பிரான்சின் தற்போதைய அரசமைப்பு நடைமுறைக்கு வந்தது.
1966 - பிரிட்டனில் இருந்து லெசோதோ சுதந்திரம் பெற்றது.
1997 - அமெரிக்க வரலாற்றில் இரண்டாவது பெரிய பணக்கொள்ளை வடகலிபோர்னியாவில் இடம்பெற்றது. 17.3 மில்லியன் டொலர்கள் கொள்ளையிடப்பட்டது. புலனாய்வின் மூலம் 24 பேர் கைது செய்யப்பட்டதுடன் 95 வீதமான பணம் மீட்கப்பட்டது.

1963 - கியூபா மற்றும் ஹெய்டியில் புளோறா சூறாவளியினால் 6ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.

2001 - சைபீரிய வானூர்தி சேவை வானூர்தி 1812 தவறுதலாக உக்ரைன் எஸ்200 ஏவுகணையால் தாக்கப்பட்டதில் 75 பேர் கொல்லப்பட்டனர்.
2016 - தீ விபத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி வர்த்தகர்களுக்கு பிரான்ஸ் வாழ் தமிழர்கள் உதவி வழங்கினர்.









# அருட்தந்தை நிர்மலராஜின் கலைப்பயணம்

இலங்கை நாட்டில் கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சிக்கு வித்திட்ட மன்னார் மறை மாவட்டத்தின் முருங்கன் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர் அருட்தந்தை எம். நிர்மலராஜ் அடிகளார். இந்தக் கிராமம் நாட்டுக்கூத்திலும், இசை நாடகத்துறையிலும் சிறப்புப் பெற்று விளங்கி வருகின்றது. இக்கிராமத்தின் இத்தகைய பின்னணி தான் அருட்தந்தை எம். நிர்மலராஜ் அடிகளாரின் இசைத்துறையின் இயல்பான வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் ஆணிவேராக அமைந்திருந்தது. இசைத்துறையில் ஆர்வம் கொண்டிருந்தபோதிலும் இறை பணியிலும் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்என்ற ஆவல் மேலிட்டதினால் காலம் சென்ற அருட்தந்தை தோமஸ் (அ.ம.தி) அடிகளாரால் உருவாக்கப்பட்ட 'செபமாலைதாசர்சபையில்' இணைந்து அருட்தந்தையானார்.

அருட்தந்தை எம். நிர்மலராஜ் அடிகளார் இசைத்துறை மீது கொண்டிருந்த ஆர்வத்தையும், அதன் தேவையையும் கருத்தில்கொண்ட அருட்தந்தை அ.ம.ஸ்ரீபன் அடிகளார் அந்தத் துறையில் வளர்ச்சியடைய ஊக்கப்படுத்தியதினால் அருட்தந்தை நிர்மலராஜ் அடிகளார் இந்தியா சென்று அங்குள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் அனுசரணையில் இயங்கும் கலைக்காவேரி கல்லூரியில் ஆறு வருடங்கள் கர்நாடக சங்கீதத்தைப் பயின்றுகலைமாணிப்பட்டம்(B.F.A) மற்றும் கலை ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பட்டங்களைப் பெற்றார்.

அருட்தந்தை நிர்மலராஜ் அடிகளார் இசைக்கல்வி பயிலும் காலத்தில் தானே எழுதி இசையமைத்த 'நெஞ்சத்தின் சந்தங்கள், எனும் ஒலி நாடாவையும் 'அஞ்சாதேநீ' எனும்ஒளி, ஒலி இறுவெட்டினையும் வெளியிட்டுள்ளார். இதில் எஸ்.பி. பாலசுப்ரமணியம், மனோ போன்ற தென்னிந்தியாவின் புகழ்பெற்ற திரைப்படப்பின்னணி பாடகர்கள் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் 'ஆன்மீக அலைகள்' என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார். தான் கற்றவற்றைத் தனக்குள்ளே வைத்துக்கொள்ளாமல் அடுத்தவர்களுக்கும் அதனை பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக இருக்கும் அருட்தந்தை நிர்மலராஜ் அடிகளார் இசை ஆய்வுகள் மற்றும் இசை பற்றிய கருத்தரங்கு போன்றவற்றை நெறிப்படுத்தவும் ஆவலாய் உள்ளார்.

> தான் கற்றவற்றைத் தனக்குள்ளே வைத்துக்கொள்ளாமல் அடுத்தவர்களுக்கும் அதனை பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் அருட்தந்தை நிர்மலராஜ்

*க. அருள்நேசன், குருநகர்*

# சனி பகவானை வணங்கும் ஒழுங்குமுறை



சனி பகவானை நேருக்கு நேர் வணங்கக்கூடாது என்ற கருத்து உள்ளது. ஆனால் அதற்கு என்ன காரணம் என்று நம்மில் நிறைய பேருக்குத் தெரியாது. ஒரு விடயத்தை நாம் பின்பற்றும் போது காரண காரியங்களை, விடயம் அறிந்த பெரியவர்களிடம் தெரிந்துகொண்டு செய்வதோடு நம்முடைய பிள்ளைகளுக்கும் கோயிலுக்கு செல்லும்போது அதை விளக்கிக் கூறினால், அவர்களும் மகத்தான நம் இந்து மதத்தின் பெருமை பின்பற்ற உதவும்.

பொதுவாக கோயிலில் ஸ்தாபிக்கப்பட்ட எந்த ஒரு தெய்வத்தையும் நாம் நேருக்கு நேர் நின்று தரிசிக்கக் கூடாது. அந்த தெய்வத்தின் பார்வையில் உள்ள சக்தியை சாதாரண மனிதர்களாகிய நம்மால் தாங்கிக்கொள்ள இயலாது. சந்நிதியின் இரு பக்க வாட்டிலும் நின்று தான் தரிசிக்க வேண்டும்.

அதேபோல் நவக்கிரகங்களில் ஒவ்வொரு கிரகத்துக்கும் அதன் இருப்பிடம், சேர்க்கை, பார்வை ஆகியவற்றைப் பொறுத்து ஒவ்வொரு விதமான பலன்கள் உண்டு. இதற்கு ஸ்தான பலம், ஸம்யோக பலம், த்ருஷ்டி பலம் என்று சொல்வார்கள். இயல்பிலேயே அசுபகிரஹனம் என்று சொல்லப்படும் சனி கிரகத்தின் 3, 7, 10ஆம் பார்வை, பொதுவாக அசுப பலனையே ஏற்படுத்தும். ஆகவே, கோயில்களிலும் சனீஸ்வரன் சந்நிதியில் ,சனியின் பார்வை நம் மீது விழக்கூடாது என்பதால் நேருக்கு நேர் நின்று அமர்ந்து சனியை தரிசிப்பதைத் தவிர்க்கிறார்கள்.

நவக்கிரகங்களை, தன் கட்டுப்பாட்டில் வேலைக்காரர்களாக வைத்து கொடுமைப்படுத்தி வந்த இலங்கை வேந்தனான இராவணன், சூரியன், சந்திரன், செவ்வாய் முதலான ஒன்பது கிரகங்களையும் தனது சிம்மாசனத்தின் கீழே அமைக்கப்பட்டிருக்கும் படிக்கட்டுகளில் படுக்க வைத்து, தான் அரியணையில் ஏறும்போதும் இறங்கும் போதும் அவர்களின் மார்பின் மீது தனது கால்களை வைத்து அவர்களை மிதித்துக் கொண்டே அரியணை ஏறும் வழக்கத்தைக் கொண்டிருந்தான். இதற்காக நவக்கிரகங்கள் ஒன்பதும் ஒவ்வொரு படிகளிலும் ஒவ்வொன்றாக வரிசையாக மேல் நோக்கி படுத்துக் கொண்டிருக்கும். ஆனால்,நவக்கிரகங்களில் சனிக் கிரகம் மட்டும் தனது பார்வை பட்டால் கெடுதல் விளையும் என்பதால், மேல் நோக்கிப் படுக்காமல் கீழ் தரையை நோக்கியபடி படுத்திருந்தது.

இதைக் கவனித்த நாரதர், இராவணனின் கொடுமைக்கு முடிவு கட்ட வேண்டும் என்பதற்காக, இராவணன் சபைக்குவந்து, இராவணன் நவக்கிரகங்களை காலால் மிதித்து அரியணை ஏறுவதை அவதானித்தார். அப்போது இராவணனிடம் நாரதர், இராவணா! உனது கட்டளையை அனைவரும் மதித்து, மேல் நோக்கி படிகளில் படித்திருக்கிறார்கள். ஆனால், இந்த சனிக் கிரகம் மட்டும் உனது கட்டளையை அவமதிக்கும் வகையில்கீழ் நோக்கி படுத்திருக்கிறது பார்த்தாயா! என்று கூற, இராவணனும் சனியை மேல் நோக்கி படுக்கச் சொன்னான். தனது பார்வையால் கெடுதல் விளையும் என்பதை சனிக் கிரகம் எடுத்துச் சொல்லியும் இராவணன் பிடிவாதமாக இருக்கவே, சனியும் படிக்கட்டில் மேல் நோக்கியவாறு திரும்பிப் படுத்தது. இராவணன் தனது காலால் சனியை மார்பில் மிதிக்கும் போது சனிக் கிரகத்தின் குரூரமான பார்வை, ராவணனின் மீது விழுந்தது.

அது முதல் இராவணனுக்கு பேரிடர் ஆரம்பமாயிற்று. நாரதரும் வந்த வேலை முடிந்ததை எண்ணி மகிழ்ச்சியுடன் புறப்பட்டார். சனிப்பார்வை என்பது பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. எனவே கோயிலுக்குச் செல்லும் போது சனி பகவானை பக்கவாட்டில் இருந்து தரிசித்து அவர் கருணையை வேண்டுவோம்.

# 5

- **பஞ்சலோகம்** - இரும்பு, பொன், வெள்ளி, செம்பு, ஈயம்.
- **பஞ்சவர்ணம்** - கருப்பு, சிவப்பு, பச்சை, மஞ்சள், வெள்ளை.
- **பஞ்சவாசம்** - ஏலம், இலவங்கம், கற்பூரம், திப்பிலி, ஜாதிக்காய்.
- **பஞ்சரத்தினம்** - பொன், சுகந்தி, மரகதம், மாணிக்கம், முத்து.
- **பஞ்சபூதம்** - ஆகாயம், காற்று, நிலம், நீர், நெருப்பு.
- **பஞ்சபாண்டவர்** - தர்மர், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன்.
- **ஐவகை நிலங்கள்** - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.
- **ஐம்பெருங் குழு** - மந்திரியர், புரோகிதர், சேனாதிபதியர், தூதர், சாரணர்.
- **ஐம்பெருங்காப்பியம்** - சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.
- **ஐஞ்சிறு காப்பியங்கள்** - நாக குமார காவியம், யசோதர காவியம், உதயன குமார காவியம்,நீலகேசி, சூளாமணி.

CMYK

# சைவபரிபாலனசபை நடத்திய சைவமாநாடு

## ஒரு கண்ணோட்டம்

இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வழிபாடியற்றுகின்ற சமயம் சைவசமயம். ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனைப் போல் தொடக்கமும் முடிவுமில்லாத சைவசமயத்தைப் பரிபாலனங் செய்து தம்மாலான சேவையை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆற்றி வருகிறது. இந்தச் சைவ பரிபாலன சபை நடத்திய மூன்று நாள் சைவமாநாடு மிகப்பெரிய அளவில் வெகுசிறப்பாக அமைந்திருந்தது. யாழ்ப்பாணம் நீராவியடி கல்லூரி வீதியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த செப். 15 முதல் 17 வரையான மூன்று நாள்களும் முத்தான நிகழ்ச்சிகள் வெகுசிறப்பான முறையிலே மகோன்னதம் நிறைந்த மங்கல நிகழ்வாக இடம்பெற்றிருந்தமை பாராட்டுக்குரியதே.

### கலாசாரம் நிறைந்த மாநாட்டு விழா

மாநாட்டின் முதல் நாள் நிகழ்வின் ஆரம்பமாக வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து தமிழ் பண்பாட்டு சைவ கலாசார ஊர்வலம் மங்களகரமாக நடைபெற்றது. 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகிய இந்த ஊர்வலம் மிகவும் அழகான முறையிலே இடம்பெற்றது. மாணவர்கள் சைவஅபிமானிகள், அன்பர்கள், அடியார்கள் அனைவரும் சீருடையோடு இதில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பம்சமாகும்.

அத்துடன் அலங்கார உடையணிந்த மாணவிகளின் தாளநடனம் கண்களுக்கு விருந்தாக அமைந்திருந்தது. விழா மண்டபத்தை நோக்கி நடத்தப்பட்ட இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவச் செல்வங்கள் தமிழாகிய தேவாரத்தையும் மணிவாசகரின் திருவாசகத்தை யும் பண்ணிசையாக இசைத்த வண்ணம் வந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். முன்னே மங்கள இசை தவில் நாதஸ்வரத்துடன் அலங்கார பவனியாக அசைந்து சென்ற ஊர்வலம் விழா மண்டபத்தை அடைந்ததும் மங்கல விளக்கேற்றப்பட்டு இறைவணக்கத்துடன் மாநாடு மங்களகரமாக ஆரம்பமாகியது. கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெற்ற முதலாம் நாள் நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் நாவலர் கலாசாரம் பின்பற்றப்பட்டு மிகச் சிறப்பாகத் தொடங்கியுள்ள இந்தச் சைவ மாநாடு எல்லோருக்கும் பயனுள்ளாக அடைய வேண்டும் என்று ஆசி வழங்கி அருளாசியுரை வழங்கியிருந்தார்.

அதையடுத்து விழாத் தலைவர் ஆறு.திருமுருகன் சைவத்தின் உயர்வையும் அதன் மேன்மையையும் தனது தலைமையுரையில் நிகழ்த்தியிருந்தார்.

அன்று முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட இந்து மத அலுவல்கள் கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உரையாற்றுகையில், சைவத்தையும் தமிழையும் காத்தவர் எமது தமிழ்ப்பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்றும் அவருடன் உள்ள தொடர்பிலும் அவருடைய கருத்துகள் பற்றியும் ஆழமாக ஆராய்ந்தவர்களுக்குத் தான் ஆறுமுகநாவலருடைய நிலைப்பாடு தெரியும் என்றும் ஆலயச் சொத்துக்களை அபகரித்தவர்களையும் ஏழைகளுக்கு உதவாதவர்களையும் அவர் இகழ்ந்துரைத்துள்ளார் என்றும் குறிப்பிட்டார். அத்துடன் நாவலர் பெருமானுடைய அருமை பெருமைகளை எமது இளைய சமுதாயம் நன்கு உணர வேண்டும் அவருடைய அளப்பரிய சேவைகளை நாம் நினைத்து நடக்க வேண்டும். இந்தச் சைவமாநாடு இளைஞர்களுக்கு ஆன்மிக உணர்வை ஊட்ட வேண்டும் நாங்கள் எல்லோரும் வேறுபாடு காட்டாமல் ஒற்றுமையாகச் செயற்பட்டாலேயே பல்வேறு முன்னேற்றங்களை அடைய முடியும் என்றார்.

முதலாம் நாள் நிகழ்வில் தேவாரப் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்திய தேவார இசைமணி எஸ்.ஆர்.திருஞான சம்பந்தருடைய தேவாமிர்தமான கான மழையுடன் வந்திருந்தவர்கள் அறநனைந்து ஒன்றித்துப் போயினர்.

### இரண்டாம் நாள் அரங்கு நிகழ்வுகள்

சைவமாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்விலே யாழ். பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாமன் தமது தலைமையுரையில், சைவத்தின் மேன்மை பற்றியும் சைவபரிபாலனசபையின் சேவை பற்றியும் அழகாக எடுத்துரைத்தார். அதையடுத்து யாழ்.பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் திருமதி சாந்தினி அருளானந்தம் மாறி வரும் சமுதாய மாற்றத்தில் சைவப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சவால்களும் என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தியிருந்தார். இறுதியாகச் சிறப்புரையாற்றிய இ.ஜெயராஜ் "சைவசமயமே சமயம் என்ற பொருளில் பல்வேறு ஆழ்ந்த கருத்துக்களையும் மேற்கோள்களையும் சபையோருக்கு விளங்கக்கூடிய இலகு தமிழில் உரையாற்றினார்.

சைவத்துக்கு மேற்சமயமில்லை. அதற்கு ஈடு இணை கிடையாது நாங்கள் உண்மைச் சைவர்களாக வாழ வேண்டும் என்றும் அத்துடன் சைவத்தை நாங்கள் பேணிப்பாதுகாக்க வேண்டும் சைவம் எங்களை வாழ வைக்கும். சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானைப் "பித்தா" என்று பேசி வன்றொண்டராகித் தோழனாகவும் இருந்து தேவாரம் பாடினார். சிவலிங்க சாட்சியின் மூலம் திருவிளையாடல் செய்த சிவபெருமானின் இயல்பையும் பெருமையையும் அழகாக எடுத்துக் கூறியமை விழாவுக்குச் சிகரம் வைத்தாற்போல அமைத்திருந்தது.

### சைவ அடியார்களின் சிறப்புக்கள்

இந்தச் சைவமாநாட்டின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் சைவ பரிபாலனசபைத் தலைவர் திரு.இ.வசந்தசேனன் தலைமையில் நடைபெற்றன. சிவஸ்ரீசபா வாசுதேவக்குருக்கள் ஆசியுரை வழங்கினார். சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் பொ.கமலநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். பின்பு வர்ணனையாளர் திரு.தவநேசன் சமயமும் வாழ்வியலும் என்ற தலைப்பில் சைவத்தின் சிறப்பையும் அதன் மேன்மையும் அழகாக எடுத்தியம்பினார்.

மாநாட்டின் மூன்றாம் நாள் நிகழ்வுகளில் கம்பவாரிதி ஜெயராஜ் தலைமையில் நடைபெற்ற சிந்தனை அரங்கு வெகு சிறப்பான நல்ல பயனுள்ள அருமையான நிகழ்வாக அமைந்து சிந்தனைக்குப் பெருவிருந்தாக அமைந்திருந்தது.

மேன்மைகொள் சைவநீதி என்ற தலைப்பில் நடைபெற்ற சிந்தனையரங்கில் மெய்ப்பொருள் நாயனார் காட்டிய நீதிபற்றி ச:லலீசன் தமக்கேயுரிய பாணியில் இனிய தமிழில் உரையாற்றிச் சென்றார். அதையடுத்து திருநீல்கண்டர் காட்டிய நீதி பற்றி திரு.அ.வாசுதேவா மிகவும் ஆழமான கருத்துக்களை அழகான தமிழ் நடையில் எடுத்துக் கூறியமை பாராட்டுக்குரியது.

அதற்கு அடுத்தாற்போல, திருநாலைப்பேருவார் காட்டிய நிதிபற்றி கலாநிதிஸ்ரீ பிரசாந்தன் உரை நிகழ்த்தும்போது நந்தனார் சரித்திரம் எடுத்துக்கூறும் நீதியே உயர்ந்தது என்று தமக்கேயுரிய பாணியில் ஆழமான அர்த்தமுள்ள கருத்துக்களை அழகு தமிழில் இனிமையாகப் பேசி சபையோரை மகிழ்வித்தார்.

இறுதியாகப் பேசிய இரா செல்வவடிவேல் சிறுத்தொண்டர் காட்டிய நீதி பற்றித் தகுந்த மேற்கோள்களை மிக அழகாக எடுத்துக்கூறி எல்லோருடைய் உள்ளங்களிலும் இடம் பிடித்துக்கொண்டார். உண்மையில் இது சிந்தனைக்குரிய ஒரு சிறப்பு நிகழ்வாகும். இதற்குப் பிறகு உரைநிகழ்திய கம்பவாரிதி ஜெயராஜ் மெய்ப்பொருள்காட்டிய நீதி-எப்படியானது? நீலகண்டர் காட்டிய நீதி எத்தகையது? திருநாளைப் போவார் காட்டிய நீதி எத்தன்மை வாய்ந்தது? சிறுத்தொண்டர் காட்டிய நீதி எப்படிப்பட்டது? என்று தொகுப்புரை நிகழ்த்தி நிரூபித்தார்.

### விரலிசைக் கானம்

கடைசியாக நட்ந்த விரலிசைக் கானம் பசிநேரமாக இருந்தாலும் ஜனரஞ்சகமாக அமைந்து சபையோர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. மிக நன்றாக ரசித்து ருசித்துச் சந்தோஷத்தை அள்ளிக் கொடுத்தது. யாழ் சைவபரிபாலன சபை நடத்திய இந்தச் சைவ மாநாடு யாழ் மக்களுக்கு குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு ஆன்மிக நாட்டத்தை உண்டுபண்ணி வெற்றி கண்டுள்ளதால் இதுபோன்ற நல்ல நிகழ்வுகள் மேன்மேலும் நடத்த வேண்டும் என்பதே சைவச் சான்றோரினதும் சைவ அபிமானிகளதும் பெருவிருப்பாகும். மொத்தத்தில் சைவ பரிபாலன சபைக்கு ஒரு சபாஷ்!

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்று நிலைநிறுத்திய சைவபரிபாலன சபையின் பணி நல்லமுறையில் தொடரட்டும்

எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் சைவபரிபாலன சபை நடத்திய சிறப்புமிக்க இந்த மாநாட்டுக்கு பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டுள்ளமை மனதுக்கு மிகுந்த வேதனையை அளிக்கின்றது. மண்டபம் நிறைந்த சனத்தொகை சமூகமளித்திருந்தால் மாநாடு ஓஹோ வென்று அமைந்திருக்கும் யாழ் மக்கள் ஆன்மீக நிகழ்வுகளுக்கு நல்ல ஆதரவு காட்டினால் வாள்வெட்டு போன்ற இன்னல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்!










அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் முத்தமிழ் விழா நிகழ்வு கல்லூரியின் தலைமை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண உதவி கல்வி பணிப்பாளர் திருமதி கௌரி முகுந்தன், சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்காய்வு பிரிவு உத்தியோகஸ்த்தருமான திருமதி கலையரசி நிமலதாஸன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதில் பாடசாலை மாணவர்களால் நடன நிகழ்வு, 'என் கதை ஏதென்று நான் சொல்ல' எனும் தலைப்பில் கவியரங்கம் மற்றும் அரிச்சந்திரன் மயான காண்டம், இசை நாடகம் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்து 'வேரும் விழுதும்' இசை நிகழ்வும் நடைபெற்றன. (ம-422)




வவுனியா கோயில்குளம்

# அருள்மிகு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ மஹாவிஷ்ணு தேவஸ்தானம்

## தேர்த்திருவிழா - 04.10.2017(புதன்கிழமை) முற்பகல் 10.00

மஹா விஸ்ணு மெய்யடியார்களே !

புண்ணிய பூமி என்றழைக்கப்படுகின்ற இந்து சமுத்திரத்தினுடைய முத்தான இலங்காபுரியினுடைய வடபால் கந்தகப் பூமியாக விளங்குகின்றதும் அடவிகளால் சூழப்பட்டதும் கனி நிலங்களினை கொண்டதும் குளிர்ச்சி பொருந்திய ஜலாந்திரங்களினைக் கொண்ட பூமியான வவுனியா நகரத்தினுடைய கீழ்த் திசையாம் ஆநிரைகளின் ஆளுகைப்பதியாம் கோயில்குளம் பதிதனிலே கோயில் கொண்டு வேண்டுவோர் வேண்டியவற்றை வாரி வழங்குகின்ற அருட் தெய்வமாம் காத்தல் கடவுளாகிய மஹாவிஷ்ணுப் பெருமானுக்கு நிகழும் மங்களகரமான ஹேவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 10 ஆம் நாள் (26.09.2017) ஷஷ்டி திதியும் அனுச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய மங்கள வாரமாகிய செவ்வாய்க் கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் மஹோற்சவ பெருவிழாவானது நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

**தீர்த்தோற்சவம் - 05.10.2017**
(வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி)

**திருக்கல்யாணம் - 06.10.2017**
(வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி)

**ஆஞ்சநேய உற்சவம் - 07.10.2017**
(சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி)

### தேர் உற்சவம்

காலை : சங்கல்பம் - 6.30 மணிக்கு
காலை : வசந்தமண்டப்பூஜை 9.15 மணிக்கு
காலை : தேரில் ஆரோகணித்தல் 10.30 மணிக்கு

### தீர்த்த உற்சவம்

காலை : சங்கல்பம் - 7.30 மணிக்கு
காலை : வசந்தமண்டப்பூஜை 10.30 மணிக்கு
தீர்த்த உற்சவம் 11.00 மணிக்கு
காலை : கொடியிறக்கம் 07.30 மணிக்கு

### குருமார் விவரம்

அருளாசி
பண்டிதர் கலாநிதி
**சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் (J.P)**
நல்லை ஆதீன சிவாச்சாரியார். புன்னாலைக்கட்டுவன்

ஆலய பிரதம குரு
"சிவாகம பூஷணம்"
**சிவஸ்ரீ.முத்து இரத்தின வைத்தியநாதக் குருக்கள் (J.P)**
(ஸ்ரீதேவி பூதேவி சமேத மஹாவிஷ்ணு தேவஸ்தான பிரதம குரு கோயில்குளம்)

ஆலய ஸ்தானிக குரு
"வித்தியாசாகரம்"
**சிவஸ்ரீ.ஜெகதீஷமயூரக் குருக்கள் (M.A)**
(விளைவேலி - வவுனியா)

ஆலய உதவிக்குருமார்
பிரம்மஸ்ரீ.ரா.சிந்துஜ சர்மா (சாவகச்சேரி)
பிரம்மஸ்ரீ.நவராஜ சர்மா (யாழ்ப்பாணம்)
பிரம்மஸ்ரீ.ந.மகதீன சர்மா (அளவெட்டி)
பிரம்மஸ்ரீ.தே.ரூபகண்ண சர்மா (சாவகச்சேரி)

ஒலி அமைப்பு
**சுமனா சவுண்ட்ஸ்**
(குட்செட் வீதி, வவுனியா)

ஒளிஅமைப்பு
**ஆலயத் தொண்டர்கள்**
(மஹா விஸ்ணு தேவஸ்தானம்)

மங்கள வாத்தியம்
**திரு.மு.ஜெயரட்ணம் குழுவினர்**
(தெற்கிலுப்பைக் குளம்)

பூமாலை அலங்காரம்
**V.K செல்வம்**
(தெற்கிலுப்பைக்குளம்)

எல்லோரும் இன்புற்றிருக்கப் பிரார்த்திப்போமாக
கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்தா ! கோவிந்தா !! கோவிந்தா !!!

**அருள்மிகு ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ மஹாவிஷ்ணு தேவஸ்தானம்**
**கோயில்குளம், வவுனியா 024 222 1700**

**என்றும் ஸ்ரீ நாராயண சேவையில் நிற்கும் குருமணிகள்**
**உபயகாரர்கள், ஆலயத் தர்ம பரிபாலன சபையினர், பக்த அடியார்கள்.**



# யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்

## திருமண பட்டுப் புடவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷன்

## தீபாவளி விசேட தள்ளுபடி

## 15% - 50%

**இலவசம்** 15,000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் அழகிய இந்தியன் செலக்ஷன் வர்ணக்குடை ஒன்று இலவசம்

**இலவசம்** 10,000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் அழகிய இந்தியன் செலக்ஷன் கப் ஒன்று இலவசம்

**அனைத்துவிதமான பட்டுச் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் அனைத்து விதமான ஆடைத் தெரிவுகளுக்கும்**

| | விலை | கழிவு விலை |
|---|---|---|
| டொப் | ~~1500~~/= | 750/= |
| சாரி | ~~2400~~/= | 1200/= |
| கொட்டன் சல்வார் | ~~5000~~/= | 2500/= |
| கலக்ஷி சல்வார் (New) | ~~8500~~/= | 4000/= |
| சல்வார் துணி | ~~1500~~/= | 750/= |

1ம் பரிசு குளிர்சாதனப் பெட்டி
2ம் பரிசு தையல் இயந்திரம்
05 ஆறுதல் பரிசுகள்

**5000.00 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்கின்ற அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அதிஷ்ட சீட்டிழுப்பில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு.**

**ஒக்டோபர் 04 - 19 2017**

\# ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்



## வல்லிபுரப் பதிதனில் வீற்றிருக்கும் வேங்குழலோனே காப்பேன் என்றே வருக

வரலாறாய் விளங்குகின்ற
வல்லிபுர நாதா! வேங்குழலோனே
ஸ்ரீதேவி பூதேவி சகிதம் சித்திரத் தேரிலே
சிங்கரப் பவனி வருகின்ற கோவிந்தா
எங்கள் சிந்தைக்கு இனியோய்
நிந்தன் தேர்க் காட்சிதனை அள்ளிப் பருகியே
அருள் பெறுவதற்காய் திரள் திரளாய்
நிற்கும் அடியார்கள் கொஞ்சமாகவா
சமுத்திரமே திகைத்து நின்று
சப்திக்க ஒருகணம் மறந்து
அருள் கேட்டு வணங்குகிறதே
இன்று தேரேறி வருகின்ற காத்தற் கடவுளே
பரந்தாமாபக்தர்களைப் பார்த்தாயா?
ஆனந்தக் கண்ணீரோடு ஆடல்கள் பாடல்கள்
மாலே மணிவண்ணா மாதவா கேசவா
கால்பிடித்தோம் கிருஷ்ணா கிருஷ்ணா
கடலலைகளும் தாளமிட்டு மகிழ்கிறதே
நம்பியோர்க்கு நலங்கள் வழங்குகின்ற
வல்லிபுரநாதா நாராயணா
எம்மவரைக் காப்போம் என்றே
தேரேறி நீ வருக

மீசாலையூர் கமலா

HONDA
Stafford Motor Co. 40 Years — TOWARDS EXCELLENCE
ஸ்டபர்ட் மோட்டார் கம்பனியின்
40வது ஆண்டு நிறைவை
முன்னிட்டு
விசேட சலுகை !
CB HORNET 160R
NAVi
CD Dream 110



ரூபா. 405,500/- ரூபா. 399,500/- ஒற்றை டிஸ்க்
ரூபா. 439,500/- ரூபா. 429,500/- இரட்டை டிஸ்க்
ரூபா. 215,500/- ரூபா. 199,500/-
ரூபா. 216,500/- ரூபா. 199,500/-
Full Tank பெற்றோல் இலவசம் !*
இச் சலுகை 2017 செப்டெம்பர் 01 தொடக்கம் 2017 ஒக்டோபர் 31 வரை மட்டுமே
பெருமைமிக்க HONDA உரிமையாளர் ஆகுங்கள்
உலகின் நம்பர் 01 மோட்டார் சைக்கிள் !
இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்,
வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்
பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ: 011-7607200. மோட்டார் சைக்கிள் காட்சியறை : 195, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய, போரலஸ்கமுவ. தொ: 011-7607705.
மற்றும் நாடளாவிய ஹொண்டா விற்பனையாளர் வலையமைப்புகளூடாக. / Honda Sri Lanka

PFRC
Prasanth Fertility Research Centre
பிரசாந்த் குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்
THE TIMES OF INDIA
SURVEY OF FERTILITY CLINICS
NO.1 FERTILITY CENTRE IN CHENNAI
NO.6 @ NATIONAL LEVEL IN INDIA
யாழ்ப்பாணத்தில்
செயன்முறைக் கருத்தரிப்பு சிகிச்சையில் உலகப் புகழ் பெற்ற
சென்னை பிரசாந்த் மருத்துவமனையின் பிரதிநிதிகள்..
எதிர்வரும் அக்டோபர் மாதம் 7ஆம், 8ஆம்
திகதிகளில் நேரில் சந்திக்க வாய்ப்பு!
வழி நடத்துகிறோம் நாங்க.. சந்திக்கலாம் வாங்க...!
- டொக்டர் கீதா ஹரிப்ரியாவை இலங்கையில் நடந்த இலவச மெடிக்கல் கேம்பில் ஏற்கனவே சந்தித்து ஆலோசனை பெற்றவர்கள்
- டொக்டர் கீதா ஹரிப்ரியா அவர்களை தமிழகத்தில் சந்திக்க விரும்புபவர்கள்
- பிரசாந்த் மருத்துவமனையில் சிகிச்சை பெறத் திட்டமிட்டிருப்பவர்கள்
- விரைவில் சென்னை செல்ல வேண்டிய விபரங்களை அறிய விரும்புபவர்கள்
- விமானப் பயணத்துக்கான ஆவணங்களைத் தயார் செய்து கொள்ள விரும்புபவர்கள்
நேரில் வந்து சந்தித்துப் பேச அரியதோர் வாய்ப்பு!
உடனடியாகத் தொடர்பு கொண்டு உங்களது நேரத்தைப் பதிவு செய்து கொள்ளுங்கள்!
அழையுங்கள்: 075 40000 12
* சென்னைக்கு விமான பயணச் சீட்டு இலவசம்!
* முதற்கட்ட சிகிச்சைக்கான 5 நாட்கள் தங்குமிடம்!
* விமான நிலையம் ⇄ மருத்துவமனை போக்குவரத்து இலவசம்!
தாய்மைக்கு தயாராகுங்கள்!
தாய்மைக்கான தடைகளை தகர்த்தெறியும் அதிநவீன சிகிச்சைகள்!
★ ஆண்களிடம் குறை இருந்தால் என்ன? பெண்களிடம் குறை இருந்தால் என்ன? தீர்வு நம் கையில் இருக்கையிலே..!
★ தம்பதிகளின் தவிப்பு நீங்கி, மடியில் குழந்தை தவழட்டும்
★ தாய்மையின் மகத்துவத்தைப் பெற்று மகிழுங்கள்!
Dr. கீதா ஹரிப்ரியா
MD, DGO, FRCOG (London)




No. 77, HARRINGTON ROAD, CHETPET, CHENNAI-31, TAMIL NADU, INDIA.
pfrcivf.com haripriyageetha@gmail.com
0091-98410-30388 | 0091-44-422-77777

# மேலோர் நினைப்பர் கீழோர் மறப்பர்

சங்க இலக்கியங்கள் பேசும் அன்பெனும் மாறுதலற்ற அகஉணர்வின் சிறப்பு

எஸ்.மல்லிகா



கீழ்மைக்குணம் படைத்தவர்கள் பிறர் செய்யும்நல்லகாரியங்களைமறந்துவிடுவர். ஆனால் மேன்மைக் குணம் படைத்தோர் அவற்றை ஒருபோதுமே மறந்துவிடுவதில்லை. இக் கருத்து நிலையையே நன்னூல்களும் எடுத்தியம்புகின்றன. அதாவது கீழோர்மறப்பர்என்றும்மேலோர்நினைப்பர்என்றும் அவை சுட்டுகின்றன. இதனை இன்னொரு அர்த்தத்திலும் எடுத்துக்கூறுகின்றன பண்டைய இலக்கியங்கள். மேலோர் என்றால் கண்கள் என்றும் கீழோர் என்றால் கால்கள் என்றும் அவை கூறுகின்றன. இது காதலர்க்கு நன்கு பொருந்தும்.

### காதல் இன்பம்

காதலர்கள்இருவர்கருத்தொருமித்துப்பேசிவிட்டு, விடைபெறும்நேரம் இருக்கிறதே அதைப்போன்ற வலி உலகில் கிடையாது. இன்னும் சில மணித்துளிகள் நாம் பேசினால் என்ன என்ற ஏக்கத்தில் அவர்வாடிநிற்பர். ஆயினும், கடமைமற்றும்கற்பின் நிமித்தம்அவர்கள்பிரிந்துசெல்லநேர்கையில்அவர்களுடைய கண்கள் மீண்டும் மீண்டும் திரும்பிப்பார்த்தவண்ணம்செல்லும். ஆனால், கால்கள்தாம்போகும்திசையில் சீராகப் பயணிக்கும். அவை திரும்பிப் பார்ப்பதில்லை. ஆனால் காதல் உணர்வையும் தம்மில் சேர்த்துப் பார்க்கும் கண்களுக்குத் தான் எத்துணை சக்தி.

மனிதன் புறத்தோற்றத்தில் மாறுபட்டாலும் அகவுணர்வுகளால் மாறுபடுவதில்லை. அதிலும் காதலுணர்வு என்றைக்கும் நிலைத்திருக்கும். இந்த உணர்வு பிரபஞ்சஜீவராசிகள் அனைத்திற்கும் உண்டு. எனினும் மானிட அன்பை இலக்கியங்கள் மாண்புற எடுத்தியம்புகின்றன. இலக்கியத்தில்இனிப்பதுபோன்றுநடைமுறைவாழ்க்கையில் அன்பு இனிப்பதில்லை. அதிலும் இன்றைய மனிதர்கள்மத்தியில்அதனைக்காண்பதுஎன்பதுஅரிது. அன்புள்ளங்களை ஆண்டவன் அதிகம் படைப்பதில்லை என்பதற்கு இது உதாரணமாகின்றது.

### மாறுதலற்ற அக உணர்வு

பண்டைய இலக்கியத்தில் ஒரு அழகிய இலக்கியக்காட்சி: காதல் மணம் புரிந்த தலைவன் குடும்பத்திற்குப் பணம் ஈட்டும்வழிபற்றிச்சிந்திக்கிறான். வாணிபத்தின்பொருட்டு அவன்தலைவியைப்பிரிந்துசெல்லநேரிடுகிறது. ஆனால் தலைவிக்கோ தலைனைப் பிரிந்திருக்க மனம் இடம்தரவில்லை. ஈற்றில் அவன் சென்றுவிடுகிறான். பிரிவு நேர்கையில் அவன் கண்கள் அவளை இமைக்காது பார்த்தவண்ணம் செல்கின்றன. அப்போது தலைவி,

"இந்தக்கால்களுக்குஎவ்வளவுபணிவிடைகள்செய்திருப்பேன். என்னைப் பிரிந்து செல்கிறதே. ஆனால், இந்தக் கண்களை நான் நேருக்கு நேர் பார்த்ததேயில்லை. நாணத்தால் வெட்கம் என்னை ஆட்கொள்கின்றதே. அவை என்னைப் பார்த்துப் பார்த்துச் செல்கின்றனவே" என்கிறாள். இதன்காரணம்கொண்டுதான்கண்வழிகசிந்திடும் உண்மை அன்பு என்கின்றனரோ..?

### தலைவன் தலைவி கொள்ளும் அன்பு மனம்

அன்பு ஈனும் குழவியாகிய அருளைப் பற்றி வள்ளுவப் பெருந்தகைஅழகுறக்கூறுகின்றார். அதேபோன்றுதலைவன் தலைவியரின் அன்பு மனம் பற்றியும் பாங்குடன் இயம்புகின்றார். அன்பின்வழிநடப்போர்ஈற்றில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அருள் உணர்வைப் பெறுகின்றனர். இதனைச்சங்கத்தமிழ்அழகிய இலக்கியச்சித்திரமாக்கியுள்ளது. இதற்கு ஒருபடி மேலேசென்றுஔவைப்பிராட்டியார்,

"நாடாயிருந்தால் என்ன, காடாயிருந்தால்
என்ன..?
மேடாயிருந்தால் என்ன, பள்ளமாயிருந்
தால் என்ன..?
எங்கு உன்மேல் நடக்கும் மனிதர்கள்
நல்லவர்களாக இருக்கின்றனரோ
அங்கு நீயும் நன்றாக வாழ்கிறாய்
மண்ணே

என்று கூறுகின்றார். ஆம், மேன்மைக்குணம் படைத்த மக்களை அவர் ஆராதிக்கிறார். அன்பு பட்சம் கொண்டுகருத்தூட்டுகிறார்.

### அகக் கல்வியின் சிறப்பு

அகக்கல்வி பரவினால் காதல் வாழ்விற்கு மாறான சமுதாயம் வேரூன்றாது. கற்பிற்கு முரணான பரத்தமையை ஆடவர்க்காக வளரவிடும் நிலை அமையாது. வளர்ந்த பரத்தமையைக் குல ஒழுக்கமென வாழவிடார். இது அகப் புறப்பாடலின் பயனாக அமைகிறது. உயர்ந்த அன்பு நிலையை வெளிப்படுத்துவதற்குஅகத்துறைகளைவிடச்சிறந்தஇடம் வேறில்லை. எனவே முழுமுதற் கடவுளிடத்தும் பேரன்பு செலுத்தி ஆடிப்பாடி அகம்நெக்குருகிய அடியார்களும் அக்கடவுளையும் தம்மையும் தலைவன் தலைவியாகக் கொண்டாடவும், இறை அருளின் பேறடையவும் தலைப்பட்டனர். சங்க இலக்கியக் காதலன் காதலி அகவுணர்வு நிலை பக்தி நெறியில் செம்மைப்படுத்தப்பட்டு நாயகன் நாயகி பாவமாகப் போற்றப்பட்டது. கடவுளிடத்துச் செலுத்தும் காமப்பகுதியைப் புறத்திணைக்குரியதாக ஆசிரியர்கள் இலக்கணம் வகுத்திருப்பினும் அதன் பொருள்க்கூறுகள் யாவும் அகத்திணைத் தொடர்புடையனவாகவே அமைகின்றன. இந்த அருமை பெருமைகளைத் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், நாலாயிர"திவ்விய பிரபந்தம் முதலிய பக்திப்பனுவல்கள் மூலம் அறியலாம். சிற்றின்பத்திற்கு மட்டுமன்றி, பேரின்பக் கடலில் இறங்குவதற்கும்அத்துறைகள்துணைபுரிகின்றன. இதில்ஆண்டாள் உச்சத்தைத் தொட்டு நிற்பதைக் காணலாம்.

### வாழ்வியல் கூறும் சங்க இலக்கிய மாண்பு

சங்க இலக்கியங்களில் தலைவன் அன்பினைநாடிநிற்கும்தலைவியை இறைவனின் அருளை நாடும் தலைவியாகக் காட்டிக்கொள்கின்றனர். சங்க இலக்கியப் பெயர் சுட்டா நிலை மாற்றம் பெறுகிறது. சமய அக இலக்கியங்களுக்கு இறைவன் புகழ்பாடும் நோக்கம்இருத்தலின்வழியேஇறைவனின்பெயர்சுட்டப்படுகின்றது. சங்க அகத்துறைகளே அன்றி தலைவன், தலைவி செயலைத் தாய்க்கு உரைத்தல், நற்றாய் செவிலிக்குக் கூறுதல் (திருவருட்பா5670 689) எனப்புதிய துறைகள்சமய இலக்கியத்தில்தோன்றவும் சங்க அகத்துறைகள் காரணமாகின்றன.

கற்பனை இலக்கியங்களைவிட மானுடம் பாடும் இலக்கியங்களைப்போற்றும் இன்றைய அறிஞர்களுக்குச்சங்க இலக்கியம்எடுத்துக்காட்டுஇலக்கியமாகப்பயன்படுகிறது. 'மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்' என்று தொல்காப்பியத்தால் சிறப்பிக்கப்படும் சங்க அக இலக்கியம் மக்கள் வாழ்வோடுபின்னிப்பிணைந்துமானுடம்தனைப் பாடுகிறது. இன்றுமனிதத்துவப்படுத்திப்பாடும்இலக்கியங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைகிறது. சங்ககால அகப்புற இலக்கியங்கள் பின்னால் வந்த இலக்கியப் படைப்பாளர்களுக்கு வழிகாட்டியாக அமைகின்றன. இளங்கோவடிகள் முதல் கண்ணதாசன் வரை அனைவருக்கும் சங்கப் புலவர்களே முன்னோடிகளாக விளங்குகின்றனர்.

"ஞாயும்யாயும்யாராகியரோ"என்றகுறுந்தொகைப் பாடல், "நேற்றுவரை நீ யாரோ நான் யாரோ... இன்று முதல் நீ வேறோ நான் வேறோ" என்ற கண்ணதாசனின் பாடலுக்கு வித்திட்டது. இவ்வாறு எண்ணற்றஉதாரணங்களைக்குறிப்பிட்டுச்சொல்லலாம்.

### வேண்டும் மேன்மை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த காதல் துறைகளும், வீரத்தின்விளைதுறைகளும்இன்றும் கவிஞர்களின்பாடல்களில்காணப்படுகின்றன. யார் பாடியதாயினும் எவ்வகைப் பாட்டாயினும் அகத்துறைக் கூறுகளும் புறத்துறைக் கூறுகளும் கலப்பின்றி இருக்க முடியாது. தமிழ்ச் சமுதாயம் அகத்திணைக் கல்வியும் புறத்திணைக் கல்வியும் ஊறப் பெற்றது என்னும் பெருமையுடையது. நாங்களும் மேலோர் தானே...?



# கற்கால உணவும் தற்கால மனிதர்களும்

■ யாழிசை



புதுமைவாதிகளாக தங்களைக் கருதும் மனிதர்கள் பழங்காலத்தை புகழ்ந்து பேசும் மனிதர்களை ஆதிகாலத்தவர் (நியாண்டர்தால்) என்று பரிகாசம் செய்வதுண்டு. ஆனால் முதியோரும் இளைஞர்களும் உடம்பைக் குறைப்பதற்கும் வலுப்படுத்தவும் வழிகாட்டும் உணவு முறைகளில் காட்டும் ஆர்வத்தில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல. அமெரிக்காவில் தங்களுடைய உணவு முறையைப் பற்றி பேசுபவதற்கு வயது வரம்பே இல்லை என்று கூடச் சொல்லலாம்.

ஒரு பிரெஞ்சுப் பெண்மணி தொலைக்காட்சியில் பேசும்போது சொன்னது நினைவுக்கு வருகிறது. "எங்கள் நாட்டில் உணவை நாங்கள் ருசித்து சாப்பிடுகிறோம், அமெரிக்காவில் அதே உணவை மருந்து போல் நினைக்கிறார்கள். அதனால்தான் அமெரிக்கர்கள் உணவை பற்றிப் பேசுவதிலும், படிப்பதிலும், தொலைக்காட்சியில் பார்ப்பதிலும் பாதி நேரத்தை செலவழித்து விடுகின்றனர்" என்று சொன்னார். அது உண்மையாகத்தான் தோன்றுகிறது.

மேலும், ஒரு புதிய உணவு முறையைப் பின்பற்றலாம் என்று நினைத்து ஒருவர் அதைத் தொடங்கும் முன்னரே அது சரியானதல்ல என்று பத்திரிகைகளோ, நண்பர்களோ அவரை சரிக்கட்டி விடுகின்றன. எல்லா உணவுத்திட்டங்களுமே தொடர்ந்து பின்பற்றுவதற்கு பொருத்தமில்லாதவை என்பது எவருமே எந்த ஒரு உணவு முறையையும் ஆறு மாதங்கள் கூட பின்பற்றுவதில்லை என்பதிலிருந்தே கண்கூடாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. இந்த உணவு முறைகளெல்லாம் வருவதும் போவதுமாகத்தான் இருக்கின்றன.

**உணவு வகை**

அண்மைக் காலத்தில் வெகுவாகப் பேசப்படும் உணவு முறைகளில் ஒன்று 'குகைவாசி உணவு' (கேவ்மேன்ஸ் டயட்) எனப்படும் 'பேலியோலிதிக் டயட்' என்பதாகும். வலம் எனும் புதிய தமிழ் சஞ்சிகையின் வலைதளத்தில் பேலியோ உணவைப் பற்றி வெளிவந்துள்ள புதிய புத்தகங்களுக்கான விளம்பரத்தின் மூலம் தமிழர்களிடையேயும் இந்த உணவு முறை பிரபலமாகி உள்ளது என்று தெரிய வந்துள்ளது.

தாதுப் பொருள்களில் எமது உடல் நலத்திற்கு மிகவும் இன்றியமையாதது பொட்டாசியம். ஆனால் அமெரிக்கர்களின் உணவில் இதன் அளவு மிகவும் குறைந்து விட்டது. இதனால் குருதிக் கொதிப்பு,மாரடைப்பு போன்ற இதய வியாதிகளுக்கு இது ஒரு காரணமாகக் காட்டப்படுகிறது. ஒரு நபர் தினம் உட்கொள்ள வேண்டியது 4 ஆயிரத்து 700 மில்லிகிராம் பொட்டாசியம். ஆனால் அமெரிக்கப் பெண்மணிகள் 2 ஆயிரத்து 200 மில்லிகிராம் அளவும், ஆண்கள் 3 ஆயிரத்து 26 மில்லிகிராம் அளவும் உண்கிறார்கள். ஆதி கால மனிதர்கள் உட்கொண்ட பொட்டாசியம் உப்பின் அளவு 15 ஆயிரம் மில்லிகிராம் என்று தெரிய வரும்போது எமது உணவில் பொட்டாசியம் வெகுவாகக் குறைந்து விட்டது என்று தெரிகிறது. மேலும் எமது உணவில் சோடியம் குளோரைடு என்று சொல்லப்படும் சாதாரண உப்பின் அளவு பொட்டாசியத்தை விட மூன்று மடங்காக அதிகரித்து உள்ளது. ஆதிவாசிகள் உப்பை மிகக் குறைந்த அளவே உபயோகித்துள்ளனர்.

அவர்கள் உணவில் பொட்டாசியம், உப்பை விட ஏழு மடங்கு அதிகமாக இருந்திருக்கிறது. இதற்கு காரணம் ஆதி மனிதர்களின் உணவில் முதன்மையாக இருந்தவை காய்,கனி, பச்சையிலை, கிழங்கு வகைகளே. இவையெல்லாவற்றிலும் பொட்டாசியம் சத்து மிக அதிகம். உப்புச் சத்து மிகக் குறைவு. தற்போதைய உணவு இதற்கு எதிர் மாறானது. இந்த உணவு மாற்றத்திற்கு 10 ஆயிரம் வருடங்களுக்கு முன் ஆரம்பித்த விவசாயம்தான் அடிகோலியது.

**தாதுப்பொருள்களின் உள்ளீடு**

நிறை அதிகரிப்பு, குருதிக் கொதிப்பு,நீரிழிவு, சிறுநீரகக் கல், எலும்புத்தேய்வு போன்ற நீண்ட நாள் வியாதிகளுக்கு உப்பு அதிகமாகவும் பொட்டாசியம் குறைந்தும் உள்ள தற்கால உணவிற்கு பெரும் பங்கு உள்ளது. நாம் உண்ணும் பொருள்களுக்கும் எமது உடலின் சரியான இயக்கத்திற்கு தேவையான பொருள்களுக்கும் பொருத்தமில்லாமலிருப்பதே இதற்கான காரணம். எமது சிறுநீரகங்கள் தினம் 15 கிராம் பொட்டாசியத்தை 20 நாள் வரை உண்டால் கூட அது குருதி அளவை ஒரே நிலையில் நிறுத்தி வைக்கும் சக்தியைக் கொண்டுள்ளன. அதிக அளவு பொட்டாசியம் உணவில் சேர்ந்தால் கூட அதை சிறுநீரகங்களால் வெளிச் செலுத்த முடியும் என்று இதிலிருந்து தெரிகிறது.

முதலில் சிறுநீரகம் எவ்வாறு பொட்டாசியத்தின் அளவை கட்டுப்பாட்டோடு வைத்திருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

பொட்டாசியம் அதிகமாய் உள்ள உணவு வயிற்றை அடைந்தவுடனேயே உணர்விகள் (சென்சார்ஸ்) சிறுநீரகத்திற்கு பொட்டாசியம் அதிகமாய் உள்ளதை அறிவிக்கின்றன. உடனே சிறுநீரகத்தின் சிறுநீரை சேகரிக்கும் மேல் பக்கக் குழாய்கள் (ப்ராக்சிமல் டிஸ்டல் கலெக்ட்டிங் ட்யூபியுல்ஸ்) சோடியம் உப்பை உள்ளே ஈர்த்துக் கொள்ளாமல் கீழ் பாகத்திற்கு செலுத்துகின்றன. அதே சமயம் கீழ் பாகத்தில் நுழையும் பொட்டாசியத்தின் அளவும் அதிகரிக்கிறது. சோடியம், உப்பும், பொட்டாசியமும் இரண்டுமே அதிக அளவில் சிறுநீர் வழியாக வெளியேறுகின்றன. இது குருதிக் குழாய் வழியாக செலுத்தப்படும் பொட்டாசியத்தை விட வேகமாகச் செயற்படுகிறது. அது மட்டுமல்லாமல், சோடியம் உப்பும் பொட்டாசியத்துடன் சேர்ந்து வெளியேறுவதால் பொட்டாசியம் சத்து அதிகமாய் உள்ள உணவு குருதி அழுத் தத்தைக் குறைக்கிறது.

**பொட்டாசியம் சத்து அதிகமாய் உள்ள உணவின் பயன்கள் குருதி அழுத்தம்**

பொட்டாசியம் சேர்க்கை குருதி அழுத்தத்தைக் குறைக்கிறது. பொட்டாசியம் குறைவது குருதி அழுத்தத்தை அதிகரிக்கிறது என்பதை பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிப்படுத்தியுள்ளன. D.A.S.H. (Dietary Approaches to Stop Hypertension) எனும் ஆய்வு 1 3/4 கோப்பை வேகவைத்த காய்கறிகள் அல்லது டென்னிஸ் பந்து அளவுள்ள 3 1/2 பழங்கள் (ஆயிரத்து 700 மில்லிகிராம் பொட்டாசியம்) உள்ள உணவோடு 4 1/4 கோப்பை வெந்த காய்கறிகளோ அல்லது

8 1/2 பழங்கள் சேர்ந்த (4 ஆயிரத்து 100 மில்லிகிராம் பொட்டாசியம்) உணவோடு ஒப்பிட்டு இரண்டாம் வகை உணவுக் குருதி அழுத்தத்தை கணிசமாக குறைத்தது என்று சொல்கிறது. பொட்டாசியம் அதிகமாக சேர்ந்த உணவு ஆபிரிக்க இனத்தவரிடையே குருதி அழுத்தத்தை குறைப்பதில் இன்னும் சிறந்து வேலை செய்கிறது. மேலும், பொட்டாசியம் குறைந்தால் உப்பு சிறுநீர் வழியாக வெளியேறுவது குறைந்து உடலில் தங்கி விடுகிறது.

இப்போதைய உணவில் பொட்டாசியம் குறைந்தும் உப்பு அதிகமாகவும் இருப்பதால் குருதி அழுத்த நோய் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது. பொட்டாசியம் குறைவினால் குருதிக் குழாய்களின் சுவர்கள் இறுகி குருதி அழுத்தத்தை அதிகமாக்குகிறது. மூளை, தண்டுவடத்தைச் சூழ்ந்திருக்கும் திரவத்தில் உப்பு அதிகமாயும், பொட்டாசியம் குறைந்தும் இருந்தால் 'ஹைப்போதலாமஸ்' எனும் மூளைப்பாகம் இயக்குநீர்கள் (ஓமோன்) வழியாக குருதி அழுத்தத்தை அதிகரிக்கிறது என்று அண்மையில் வெளியான ஆராய்ச்சி முடிவுகள் மூலம் அறியமுடிகிறது.

**பக்கவாதம்**

43 ஆயிரம் ஆண்களை 8 வருடங்கள் தொடர்ந்து கவனித்ததில், 4 ஆயிரத்து 300 கிராம் பொட்டாசியம் உள்ள உணவை உண்டவர்களிடையே பக்கவாதத்தின் தாக்கம் என்பது 2 ஆயிரத்து 400 கிராம் பொட்டாசியம் உள்ள உணவை உண்பவர்களோடு ஒப்பிட்டபோது 62 வீதம் குறைவாக இருந்தது. ஒரு இலட்சத்து 27 ஆயிரம் பேர் கொண்ட 11 ஆய்வுகளும் இதே முடிவுக்குத் தான் வந்துள்ளன. பொட்டாசியம் குறைவாக உள்ள உணவை உண்ட 9 ஆயிரத்து 800 பேரிடையே 19 வருட காலக் கவனிப்பில் பக்கவாதம் தாக்குவதற்கு 28 வீதம் அதிக வாய்ப்புள்ளது என்று இன்னொரு ஆய்வு சொல்கிறது. 50 இலிருந்து 79 வயதான பெண்மணிகளை 11 வருடங்கள் தொடர்ந்து கவனித்ததில், அதிக அளவு பொட்டாசியம் உள்ள உணவு பக்கவாதத் தாக்குதல் ஏற்படுவதைக் குறைப்பது தெரிய வந்தது.

**எலும்புத்தேய்வு**

காய்கறிகளும் பழங்களும் பொட்டாசியம் மட்டுமல்லாது பைகாபனேட் என்ற உப்பையும் அதிக அளவில் கொண்டுள்ளவை. தற்கால மேற்கத்தைய உணவில் இந்த உப்பு குறைவாகவும், அமிலச் சத்து அதிகமாய் உள்ள மீன், இறைச்சி, பாலாடைக்கட்டி போன்றவை அதிகமாகவும் உள்ளன. இந்த அமிலத்தை ஈடுசெய்வதற்கு எலும்பில் உள்ள கல்சியம் வெளியேறுகிறது. இதனால் எலும்பின் வலு குறைகிறது. மேலும், காய் கனிகளிலுள்ள பொட்டாசியம் எலும்பை வலிமைப்படுத்துகிறது. பொட்டாசியம் அதிகமாய் உள்ள உணவை உண்ணும் 266 முதிய பெண்மணிகளினுடைய எலும்பு அடர்த்தி பொட்டாசியம் குறைவாக உள்ள உணவை உண்ணும் பெண்மணிகளின் எலும்பு அடர்த்தியை விட சிறந்ததாக உள்ள ஆய்வு முடிவுகள் தெரிய வந்துள்ளன. உணவில் காய் கனிகளை சேர்ப்பதில் மூலம் எலும்புத் தேய்வை அதிகம் குறைக்கலாம்.

**சிறுநீரகக் கற்கள்**

சிறுநீரில் கல்சியம் அதிகமாகவும், சிட்ரேட் என்ற உப்பு குறைவாகவும் இருந்தால் சிறுநீரில் கற்கள் உருவாகும் வாய்ப்பு ஏற்படுகிறது. அமிலச் சத்து அதிகமாய் உள்ள நவீன உணவு, சிறுநீரில் கல்சியத்தை அதிகரிப்பதின் மூலமும் சிட்ரேட் அளவை குறைப்பதன் மூலமும் சிறுநீரகத்தில் கற்கள் உருவாகும் தன்மையை அதிகரிக்கின்றன. காய்கறிகள் பழங்கள் உண்பதை அதிகரிப்பதின் மூலம் இதை தவிர்க்க முடியும் என்பது ஆராய்ச்சியின் மூலம் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

**சிறுநீரக நொடிப்பும் பேலியோலிதிக் உணவும்**

சிறுநீரகம் பழுதடைந்திருந்தால் பேலியோலிதிக் உணவில் சேர்ந்துள்ள அதிக அளவு பொட்டாசியத்தை வெளியேற்ற முடியாததால் குருதியில் பொட்டாசியத்தின் அளவு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. அதிக அளவு பொட்டாசியம் இதய நாடித்துடிப்பைகுறைக்கும். அதிக அளவு பொட்டாசியம் நாடித் துடிப்பையே நிறுத்தி விடும். ஆனால் சிறுநீரகம் சேதமடைந்தவர்களுக்கு, காய்கனி நிறைந்த உணவினால் தனிப்பட்ட பலன்களும் உண்டு. சிறுநீரகம் சரியாக இல்லாதவர்களுக்கு மருத்துவம் செய்யும்போது முக்கிய மாசக் கவனிக்க வேண்டியவை புரதச் சத்து குறையாமலிருத்தல், பொஸ்பரஸ் உப்பு அதிகமாகாமல் இருத்தல், அமிலத் தன்மை அதிகமாகாமலிருத்தல் போன்றவற்றின் மீதான கண்காணிப்பே

**சைவ உணவும் பொஸ்பரஸ் அளவும்**

பொஸ்பரஸ் உப்பு புரதத்துடன் இணைந்தே சிறுகுடலிலிருந்து குருதியில் சேர்கிறது. இறைச்சியில் உள்ள புரதத்தோடு சேர்ந்த பொஸ்பரஸ் முழுவதுமாக குருதியில் கலக்கிறது. ஆனால் தாவரப் புரதத்தில் உள்ள பொஸ்பரஸ் பைடேட் என்ற உப்பாக இருப்பதால் பாதி அளவே சிறுகுடலிலிருந்து குருதியில் சேர்கிறது. சிறுநீரக நொடிப்பு உள்ளவர்களிடம் சம அளவு பொஸ்பரஸ் உள்ள மாமிசப் புரதத்தோடு, தாவரப் புரதத்தை உண்டவர்களை ஒப்பிட்ட போது சைவ உணவு உண்டவர்களுடைய பொஸ்பரஸ் அளவு அசைவ உணவு உண்டவர்கள் அளவை விட குறைவாகவே இருந்தது. இதனால் புரதச்சத்து நிறைந்த சைவ உணவு, சிறுநீரகம் சேதமடைந்தவர்களின் புரத அளவைப் பாதுகாப்பதுடன் பொஸ்பரஸ் அளவையும் அதிகரிக்காமல் கட்டுப்படுத்துகிறது என்பது புலப்படுகிறது. பழுதடைந்த சிறுநீரகங்கள் உடம்பில் உற்பத்தியாகும் அமிலத்தை வெளியேற்ற முடியாததால் உடம்பின் அமிலத்தன்மை (மெடபாலிக் அசிடோசிஸ்) அதிகமாகிறது. இதனால், புரதச் சத்து குறைதல், சக்கரை அளவு அதிகரித்தல், எலும்புத்தேய்வு, சிறுநீரகம் பழுதடைவு ஆகியவற்றுக்குக் காரணமாகிறது. இதைத் தவிர்ப்பதற்கு குருதியில் பைகாபனேட் அளவு 23 தொடக்கம் 29 அடுக்குள் இருக்க வேண்டும். இதற்காக. சோடியம் பைகாபனேட் மாத்திரைகளை சிறுநீரக வியாதியுள்ளவர்கள் எடுத்துக்கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

(26ஆம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

**யோகேஸ்வர குருக்கள் பஞ்சாட்சர குருக்கள்**



இந்திரம்மன் கோயிலடி, துன்னாலை மத்தியை பிறப்பிடமாகவும், மல்லாவியை வதிவிடமாகவும் கொண்ட யோகேஸ்வர குருக்கள் பஞ்சாட்சரக் குருக்கள் 02.10.2017 அன்று சிவபதமடைந்தார்.

யோகேஸ்வரக் குருக்கள் - பாலம்மாள் தம்பதிகளின் அன்பு மகனும், சாந்தநாயகி அம்மாவின் பாசமிகு கணவரும், நாகேஸ்வர சர்மா, கமலாம்பிகை அம்மா, காமாக்சி அம்மா, கலாதேவி ஆகியோரின் சகோதரரும், கௌரீஸ்வர குருக்கள் பாலேஸ்வரி, தினேஸ்வர குருக்கள், தரணிதரசர்மா ஆகியோரின் தகப்பனாரும், குமார பிரபாகார குருக்கள், லக்சுமி, நித்தியா ஆகியோரின் மாமனாரும் கம்சத்துவனி, ஸ்ரீ புஜன், ஸ்ரீ சைலன், ஸ்ரீ பூஜிதன், ஜீவகன், ஹிருதவாசினி ஆகியோரின் அருமை பேரனும் ஆவார்.

அன்னாரின் அந்திமக் கிரியைகள் இன்று (04.10.2017) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 4 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக அனிஞ்சயன்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**572, வளநகர்,**
**யோகபுரம், மல்லாவி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 206 0761**

## கண்ணீர் அஞ்சலி



**வைத்திய கலாநிதி மயிலு கணேசரட்ணம்**
*MBBS(Cey),FRCS(Eng),Hon PhD(Jaff)*
(பெருந்தலைவர் அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்ட நூற்றாண்டு விழா – 2019)

வைத்திய கலாநிதி மயிலு - கணேசரட்ணம் அவர்களின் திடீர் மறைவை அறிந்து அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாக சபை**
**அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா - 2019**

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் கந்தையா குலசேகரம்பிள்ளை**
(சமாதான நீதிவான்)

**அன்னை மடியில்**
**30.08.1926**

**அம்பாள் அடியில்**
**14.10.1997**

திதி: 04.10.2017



இருபது ஆண்டுகள் இருபது நாளாய்
இருந்ததையா
பெருமைகள் கண்டு பேணியகாலம் .
பெரிதாய் இருக்குதையா
உரிமைகள் கொண்டீர்
புதுமைகள் கண்டீர்
அருமைகள் தீர்த்தீர் மகிமைகள் சேர்த்தீர்

பள்ளிகள் வளர்த்தீர் வள்ளலுமாநீர்
கோயில்கள் கண்டீர் தாயிற் சிறந்தீர்
வாயில்கள் தோறும் வாழ்த்திட
வழிகள் செய்தீர்
மனைவி மக்கள் மாண்புற
மன்னனுமாநீர்...


இருபது வருடமா? இருநூறு
வருடங்களானாலும்
சந்ததி பெருகும் சங்கதி சொல்லும்
வாழ்ந்தால் உங்களைப் போல் வாழ்வார்
வளங்கண்டு வாழ்ந்தே வள்ளல்களாகி
இங்கிதம் சேர்ப்பார்.

திருமதி கு.நாகம்மா
பழமுதிர்சோலை,எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

**அன்பு மனைவி**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### வஸ்ரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை



இல.32,மவுண்கார்மேல்வீதி,குருநகரைப் பிறப்பிடமாகவும், கேணிக்கட்டு ஒழுங்கை, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்ரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 01.10.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வஸ்ரியாம்பிள்ளை -எலிசபெத் தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து – மரியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், கிறேசியன், மேரி தயாநிதி (றஜிதா - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வீனஸ் கென்ஸ்சின் பாசமிகு மாமனும், ஹட்சனின் அருமைப் பேரனும், யோகமணி (இத்தாலி), செல்லக்குமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பூராசா (இத்தாலி), காலஞ்சென்றவர்களான அரசரட்ணம், சிவராசா, இராசதுரை மற்றும் மரியதாஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பிறேமா, சுஜந்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகலனும், ரூபன் (லண்டன்), நேசன் (கனடா), தாசன் (ஆஸ்திரேலியா), பொபி, சிறிதர் (இத்தாலி), காலஞ்சென்ற டயஸ் மற்றும் ரேவதி, ஜெனி, உசா, ராஜன் (லண்டன்), மொய்ரா, சமீரா, எய்டன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும், மாலதி (கனடா), சுதா (லண்டன்),விஜி (ஆஸ்திரேலியா), றொக்ஷி (இத்தாலி), தர்ஷினி (இத்தாலி) ஆகியோரின் உறவுத் தந்தையும், சலமன், அஸ்னா, அன்ரூ, அன்றியா, ஆதீசன், டிசான், டிருஸ், அற்புதன் ஆகியோரின் பேரனும், லேனஸ் - சித்தாத்துரையம்மா ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.10.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கேணிக்கட்டு ஒழுங்கை,**
**பண்டத்தரிப்பு.**

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்**

# கற்கால உணவும் தற்கால மனிதர்களும்




அதேநேரத்தில், மனித மூளையின் நிறைக்குச் சமமான மூளையைக் கொண்ட ஆபிரிக்க யானையின் கொட்டாவி, மனிதனைவிடச் சற்றே குறைவாக இருந்தது. கொரில்லா, ஒட்டகம், சிங்கம், குதிரை, ஆபிரிக்க யானை எல்லாம் மனிதனைவிடக் குறைவான காலமே கொட்டாவி விட்டன.

ஆக, மூளையின் மேலே உயர்சிந்தனைப் பகுதி எனக் கருதப்படும் 'கார்டெக்ஸ்' பகுதியில் உள்ள மூளைக் கலங்களின் எண்ணிக்கைக்கும் கொட்டாவியின் கால நேரத்துக்கும் தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டது. ஆயிரத்து 200 கோடி கார்டெக்ஸ் நியூரான் கொண்டுள்ள உடல் அளவு, கபாலம் அல்லது கீழ்த்தாடை அளவுகளுக்கும் கொட்டாவி விடும் காலத்துக்கும் தொடர்பு இருக்கிறதா என்றும் ஆராய்ந்தார்கள். ஆனால் அப்படி எந்தத் தொடர்பும் இல்லை. ஆக, சிக்கல் மிகுந்த சிந்தனையின் பிறப்பிடம் எனக் கருதப்படும் கார்டெக்ஸ் பகுதி நியூரான் எண்ணிக்கைக்கும் கொட்டாவி விடும் கால அளவுக்கும் உள்ள தொடர்பு நிரூபிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, கூடுதல் வேலையின்போது மூளை வெப்பமடையும், அதனை குளிர்விக்கத்தான் கொட்டாவி வருகிறது எனும் கருத்து உடலியல் ஆய்வாளர்கள் மத்தியில் இருக்கிறது.

வாயை அகலமாகத் திறந்து காற்றை உள்ளே இழுக்கும் போது குளிர்ந்த குருதி ஓட்டம் மூளைக்குப் பாயும் என்று அவர்கள் சொன்னார்கள். அதுவும் இந்த ஆய்வு முடிவுடன் இயைந்துபோகிறது. ஆக,கொட்டாவி விடுபவர்களை சிந்தனைச் சிற்பிகளாகப் பார்க்க வேண்டிய காலம் வரலாம்.

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை



பிறப்பு 05.11.1931 இறப்பு 03.10.2017

கைதடியைப் பிறப்பிடமாகவும், வலதுகரை, முத்துஐயன்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை நேற்று (03.10.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ரத்தினம் மற்றும் சுப்பிரமணியம் (கனடா), அமிர்தலிங்கம், காலஞ்சென்ற சிவகோசாரியார் மற்றும் சிவபாக்கியம், முத்துக்குமாரசுவாமி (ஓய்வுநிலை அதிபர்) ஆகியோரின் அன்பு சகோதரரும், சிவதயாநிதி (ஆசிரியர் - மு/கற்சிலைமடு மகாவித்தியாலயம்), தயாரூபன் (பிரான்ஸ்), தவலோஜினி (ஆசிரியர் - மு/ முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை), காலஞ்சென்ற தயாரூபி மற்றும் தனுஷா (மக்கள் வங்கி, முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகலிங்கம், விமலாதேவி (பிரான்ஸ்), விஸ்ணுகரன் (பிரான்ஸ்) தவக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2017) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தட்டயர்மலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வலதுகரை,**
**முத்துஐயன்கட்டு.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 224 2334, 077 182 8260**

## Tribute to Dr. Mailoo Ganesharatnam

**(Formerly, Senior Consultant Surgeon, Jaffna Teaching Hospital)**



It is with deep sorrow that we received the sad message of the departed soul of Dr. M.Ganesharatnam.

He was the past President of the Sri Lanka College of Surgeons in 2007 and also the past President of the Jaffna Medical Association from 1992 to 1994. Dr. Ganesharatnam functioned as an external council member of the University of Jaffna from 1992 to 1996.

He functioned in the Post-Graduate Institute of Medicine as a Trainer, Supervisor, and examiner in Surgery.

While working as an eminent Surgeon at the Jaffna Teaching hospital during the difficult periods in its history, he shouldered the responsibility of the Professorial Unit of the Department of Surgery of the Faculty of Medicine. This included teaching Final year medical students and being chief examiner.

He had contributed in numerous ways to the development of the Faculty of Medicine, Teaching Hospital Jaffna and the entire community of Sri Lanka.

In recognition of his dedicated and exemplary service to the public& the students the University of Jaffna honored hima Doctorate in Philosophy [PhD] on thetwenty-sixth convocation ceremony in October 2010.

Sir, you will always be remembered by the people and the students to whom you dedicated your precious life.

The Alumni, Faculty of Medicine Jaffna, extends our deepest sympathies to the bereaved family members.

**The Alumni, Faculty of Medicine, Jaffna.**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 | 03 |
| 04 | 10 |
| 1930 | 2017 |

## திருமதி அன்னலச்சுமி (அன்னம்) குலசேகரம்

கௌதாரிமுனைபூநகரியைபிறப்பிடமாகவும் முக்கொம்பன் பூநகரியைவசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலச்சுமி குலசேகரம் நேற்று (03.10.2017) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களானதம்பு - சுந்தரம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான ஜீவகாருண்ணியம் -தங்கம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற குலசேகரம் (கமநலசேவை மேற்பார்வையாளர், வட்டக்கச்சி) அவரின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மனோன்மணியின் சகோதரியும் பரமேஸ்வரி, அகிலேஸ்வரி,நந்தகுமார்(பழக்கடைவாடியடி),குமாரசூரியர்(இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்.காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் வடிவேலு(ஓய்வுநிலைதபால் ஊழியர்),லோகேஸ்வரி,பாக்கியம் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுபாசினி - விஜேந்திரன்(கனடா), சிவநேசன் - பார்வதி (கனடா), சிவகுமார் - கேசினி(கனடா),சிவராஜன் -குமுதா(கனடா),சுவேந்தினி- பாஸ்கரரூபன்(லண்டன்), சுமுந்தினி - சுமந்திரன்(கனடா),வசந்தமலர்-கந்தராஜா(லண்டன்),வசந்தராணி-யோகேந்திரநாதன் (கனடா), வசந்தரூபி - சகாதேவன் (GIZ பணியாளர்), வசந்தறூபன் - கேதீஸ்வரி, வசந்தலோஜினி - சேகர் (தபால் ஊழியர்), வசந்தராஜன் (லண்டன்), உதயகுமார் - ரமா (லண்டன்), சுரேஸ்குமார் - சுகன்யா (வைகைக்குமாரன் வெற்றிலைக்கடை, வாடியடி), சுதாஸ்குமார் - கிருசாந்தி (லண்டன்), காலஞ்சென்ற றாஜ்குமார் மற்றும் நந்தகுமாரி -சுரேஸ்குமார் (பிரான்ஸ்), தங்கேஸ்வரன் - வியோலா (லண்டன்),லோஜினி - புஸ்பரூபன் (லண்டன்), லங்கேஸ்வரன் - திருமகள் (பிரான்ஸ்), கஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கிசேன் தட்ஜா,சரிஜாவாசு தேவன், ஜெனனிராஜா,பிரகீஸ், ஜக்சன், சிந்து,சாருஜன்,சார்விடச்சாயினி,வக்சாயினி,மீறரேஸ்,யுத்திரன், மித்திரன்,றிசிகா,பிரியங்கன்,தாரகா,தருணன், ஷானுகா, றிசாணிகா, கபிசன், டர்சிகன், தாருசன் , சேந்தன், ஷாருகா, அகழினி, ஆதூளன், புகழினி, வைகைக்குமரன், நெத்தாலியன், நெத்தாலியா, தரணிகா, நக்கீரன், மதுரன், ஒலிவியா, மாக்ஸ், கபிலாஸ், பவிசா, கவிசா ஆகியோரின்அன்புப் பூட்டியும்.மேனுஜா,அபிசா, அஜன் ஆகியோரின் பாசமிகு கொள்ளுப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2017) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 5அடிவான் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்


முக்கொம்பன் ,பூநகரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

# கந்தையா கயிலாயபிள்ளை

*(பூசாரி - மண்டுவில் காளிகோவில்)*



பெரியரசடி வீதி, சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கயிலாயபிள்ளை நேற்று(03.10.2017)செவ்வாய்க்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் நாகபூரணத்தின் அன்புக் கணவரும் வாசுகி (சுவிஸ்), உதயகுமார் (லண்டன்), கமலினி (பிரான்ஸ்), ஜெயக்குமார் (பிரான்ஸ்), உதயபாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருகேஸ்வரன் (சுவிஸ்), ஈஸ்வரி (லண்டன்), சுரேஸ்வரன் (பிரான்ஸ்), கமலேஸ்வரி (பிரான்ஸ்), மிதுளா ஆகியோரின் பாசமிகு மாமனும் சபூரா, சபீசன், திவானிகா, காருண்யா, சயூரி, சாருசன், அரிஸ், ஆதுசன், அக்ஷ்யஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, தில்லையம்மா, சரஸ்வதி, வடிவேலு மற்றும் அன்னப்பிள்ளை, திலகவதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2017) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியரசடி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
077 667 2364

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 | 01 |
| 12 | 10 |
| 1960 | 2017 |

## செல்வநாயகம் சோதிராசா

தெல்லிப்பழை, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் சோதிராஜா கடந்த (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் விஜயலட்சுமியின் பாசமிகு கணவரும் அருந்ததி, மாலதி, சகிலா, திபாசினி ஆகியோரின் தந்தையும் சுதாகரனின் மாமனும் தர்நிஷானின் அம்மப்பாவும் செல்வகுமாரி காலஞ்சென்ற உருத்திரகுமார் ஆகியோரின் அன்புத் தம்பியும் வசந்தகுமாரி, குசலகுமார் ஆகியோரின் அண்ணனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - மகாலட்சுமி தம்பதியரின் மருமகனும் சுதேசபாலன், சத்தியபாலன், பாலகுமாரன், யோகேஸ்வரன், தேவமலர், சுகந்தினி, அருள்தேவி, ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2017) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

# தம்பையா கந்தசாமி



கீரிமலை வீதி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்டதம்பையாகந்தசாமி கடந்த (02.10.2017) திங்கட்கிழமை இரவு இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களானதம்பையாஅன்னபூரணம் தம்பதியரின்சிரேஸ்டபுத்திரனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு இராசம்மா தம்பதியரின் மருமகனும் தங்கமலரின் பாசமிகு கணவரும் நடராஜா இராசமலர், பொன்மலர், புஷ்பமலர், காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின்பாசமிகுசகோதரரும்சிவானந்தம்(சுவிஸ்),சர்வானந்தம் (பிரான்ஸ்), யோகானந்தம், ஜெயானந்தம் (லண்டன்), ஆனந்தகௌரி (ஆசிரியை - யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யஸ்மின் (சுவிஸ்), சுகந்தினி (பிரான்ஸ்), திவ்யஅன்னமலர் (ஆசிரியை - யா/மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயம்), சுகதாரணி (லண்டன்), சுரேஸ்குமார் (பண்டத்தரிப்பு) ஆகியோரின் மாமனும் நம்மியா (சுவிஸ்), சாளினி (சுவிஸ்), நவீதா (பிரான்ஸ்), மிதுனா (பிரான்ஸ்), சயானா (பிரான்ஸ்), சங்கனி, சங்கோதயன், தர்மிகா (லண்டன்), ஜீவிகா (லண்டன்), கஜீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2017) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு. 076 397 7778

தகவல்:
குடும்பத்தினர்.

# இந்தியன்-2 விரைவில்

சினிமா



இயக்குனர் சங்கர் இயக்கத்தில் கமலஹாசன் நடித்த இந்தியன் திரைப்படம் 1996ஆம் ஆண்டு வெளியாகி பெரும் வரவேற்புப் பெற்றது. இந்த நிலையில் இந்தியன் - 2 விரைவில் தயாரிக்கப் படவுள்ளது என்ற அறிவிப்பு தற்போது வந்துள்ளது.

இயக்குனர் சங்கர் தற்போது ரஜனியை வைத்து இயக்கும் 2.0 படப்பிடிப்பில் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறார். இந்தப்படம் எதிர்வரும் ஜனவரியில் திரைக்கு வரவுள்ளது. 2.0 படத்தைத் தொடர்ந்து இந்தியன் -2 படத்தை தயாரிக்க திட்டமிட்டுள்ளார் சங்கர். இந்தப் படத்திலும் கமலஹாசனே நடிக்கவுள்ளார். தமிழில் மட்டுமல்லாமல் தெலுங்கிலும் இந்தப்படம் திரைக்கு வரும் என்று தற்போதே அறிவிக்கப்பட்டுள்ளது. 'பிக் பாஸ்' நிகழ்வின் இறுதி நாளில் வைத்து இந்தியன் - 2 படம் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்தினார் கமல். (ம)

## மன முதிர்ச்சி என்றால்?



1. மற்றவர்களைத் திருத்துவதை விட்டுவிட்டு எம்மை திருத்திக்கொள்வது
2. அனைவரையும் அப்படியே (குறைகளுடன்) ஏற்றுக் கொள்வது
3. மற்றவர்களின் கருத்துக்களை அவர்கள் கோணத்தில் இருந்து புரிந்துகொள்ளுதல்
4. எதை விட வேண்டுமோ அதை விட பழகிக்கொள்தல்.
5. மற்றவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதை விடுதல்.
6. செய்வதை மன அமைதியுடன் செய்வது.
7. எமது புத்திசாலித்தனத்தை மற்றவர்களிடம் நிரூபிப்பதை விடுவது.
8. எமது செயல்களை மற்றவர்கள் ஏற்க வேண்டும் என்ற நிலையை விடுதல்.
9. மற்றவர்களுடன் எம்மை ஒப்பிடுவதை விடுதல்.
10. எதற்குமே சஞ்சலப்படாமல் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள முயற்சித்தல்..
11. எமது அடிப்படைத் தேவைக்கும், நாம் அடைய விரும்புவற்றிற்கும் உள்ள வேறுபாட்டினை உணர்தல்.
12. சந்தோசம் என்பது பொருள் சம்பந்தப்பட்டது அல்ல என்ற நிலையை அடைதல்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**இடபம்:** பேச்சு, செயலில் உற்சாகம் வெளிப்படும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் உயரும். பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் விழிப்புடன் செயல்படுவது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**கடகம்:** சிலர் உங்களிடம் உதவி கேட்டு அணுகுவர். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ற முன்னேற்றம் உண்டாகும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**சிங்கம்:** நண்பர், உறவினரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**கன்னி:** குடும்பத்தினர் ஆதரவு வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழில்,வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. இலாபம் சுமார்.

**துலாம்:** மனதில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள் வெகுநாள் விரும்பிய பொருள் வாங்குவர்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட பணிகளில் கவனம் கொள்வது நல்லது. தொழில் வியாபார நடைமுறை மந்தகதியில் இயங்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

**தனுசு:** குடும்பத்தினர் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறை உடனுக்குடன் சரி செய்வது நல்லது. இலாபம் சுமார்.

**மகரம்:** நண்பர் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் அதிகாரிகளின் மத்தியில் நற்பெயர் காண்பர்.

**கும்பம்:** மற்றவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபார விஷயமாக வெளியூர் செல்ல நேரிடும். பெண்களுக்கு நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மீனம்:** அனுபவசாலிகளின் அறிவுரையை ஏற்று நடப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும்.

### எம்.பி.காமராஜ் கண்டுபிடிப்பு

**நுளம்புகளால்தான் டெங்கு பரவுகிறது**




உங்களை மாதிரி விஞ்ஞானிகளை எல்லாம் அரசியல்வாதிகளாக தேர்ந்தெடுத்து அமைச்சர்களாக வைத்ததை நினைத்து ரொம்ப பெருமைப்படுகிறோம்.


twitter.com/Srilaksman0
ஆசையை அளக்க முடியாது
ஆனால் அடக்க முடியும்.


twitter.com/Kozhiyaar
வாழ்க்கையில் ஒரு தெளிவு வருவதற்கு நாம் அதிகம் கலங்க வேண்டி இருக்கிறது!!


twitter.com/Kannan_Twitz
போன இடத்தில் மரியாதை கொடுக்கலேன்னு கோவப்படாதே!மரியாதை இல்லாத இடத்துக்கு சென்றதற்காக வருந்து.


twitter.com/SaranyaTwtzz
சினம் கொள்வதால்
நிம்மதியை இழக்கிறோம்!
மௌனம் கொள்வதால்
நிம்மதி பெறுகிறோம்!

பாஸ்போர்ட் சைஸ் போட்டோ எடுக்கணும். ஆனா செருப்புவரை தெரியணும்...



எடுத்திடலாம். செருப்பைக் கழட்டி தலையில வைச்சுக்கொண்டு கதிரையில உட்காரு...

நானும் தீயா வேலை செய்யணும்னு பார்க்கிறேன்...



ஆபிஸ் எரிஞ்சிடுமேன்னுதான் அடக்கி வாசிக்கிறேன்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | 1 | | | | | |
| 9 | 3 | 7 | | | | | | |
| 8 | | 5 | | 4 | | | 9 | |
| | | 3 | | 7 | | | | 4 |
| 4 | | | 6 | | 2 | | | 8 |
| 5 | | | | 8 | | | | |
| | 9 | | | 1 | | 4 | | 3 |
| | | | | | | 9 | 1 | 7 |
| | | | | | 7 | | 8 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 8 | 6 | 9 | 4 | 2 | 5 | 7 |
| 9 | 7 | 5 | 1 | 2 | 8 | 4 | 6 | 3 |
| 2 | 4 | 6 | 3 | 5 | 7 | 9 | 8 | 1 |
| 7 | 6 | 9 | 8 | 4 | 2 | 3 | 1 | 5 |
| 4 | 5 | 1 | 7 | 3 | 9 | 6 | 2 | 8 |
| 8 | 2 | 3 | 5 | 6 | 1 | 7 | 9 | 4 |
| 6 | 8 | 7 | 9 | 1 | 3 | 5 | 4 | 2 |
| 3 | 9 | 2 | 4 | 8 | 5 | 1 | 7 | 6 |
| 5 | 1 | 4 | 2 | 7 | 6 | 8 | 3 | 9 |

## ஒருமித்த...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1978ஆம் ஆண்டு அரசமைப்பு அரச தலைவருக்கு அதியுச்ச அதிகாரத்தை வழங்கியது. நாடாளுமன்றத்தின் அதிகாரம் வெட்டிக் குறைக்கப்பட்டது. அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அரச தலைவரின் அதிகாரம் மேலும் அதிகரிக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி அரச தலைவர் தேர்தலின் பின்னர் கூட்டு அரசு உருவாக்கப்பட்டு அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்ற சனநாயகம் அதிகளவில் பலமானது.

**புதிய அரசமைப்பு**

புதிய அரசமைப்புத் தொடர்பில் அனைவரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர். பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் ஒற்றையாட்சி முறைமையின் கீழ் அனைத்து இனத்தவர்களுக்கும் சம உரிமை வழங்கும் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். புதிய அரசமைப்பின் ஊடாக நாடாளுமன்றத்தின் அதிரகாரத்தை நாம் மேலும் பலப்படுத்த வேண்டும். அரசமைப்பை நிறைவேற்ற அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாடாளுமன்றத்தை பலப்படுத்தும் புதிய அரசமைப்பு அனைவரினதும் ஆதரவுகிடைக்கும்என்றுநான்நம்புகின்றேன். நாடாளுமன்ற சனநாயகம் மேலும் வலுப்பெற வேண்டும். சுயாதீனமாக நிறுவனமாக மாற்றப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரத்தின் மூலமாக அடிப்படை உரிமை, மனித உரிமை உறுதிப்படுத்த வேண்டும். சட்டவாட்சியை பலப்படுத்த வேண்டும். நீதித்துறை சுயாதீன நீதித்துறையை ஒப்புவிக்க வேண்டும். எதிர்காலத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு சிறந்த நாட்டை வழங்குவதற்கு நாடாளுமன்றத்தில் அனைவரும் கூட்டு பொறுப்புடன் செயற்படவேண்டும். தனி நபரின் அதிகாரத்தை பார்க்கிலும் அரசியல் அதிகாரத்தை கூட்டு பொறுப்புக்குள் உள்ளடக்க வேண்டும். கூட்டுப் பொறுப்பின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (வ-5,31)

## தீர்வு ஒன்றை...

திரம் கிடைத்தது. சிங்களம், தமிழ், முஸ்லிம் என்று அனைத்து இன மக்களும் இலங்கையர்கள் என்ற உணர்வுடனேயே அப்போது வாழ்ந்தனர். சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் 60 வருடங்களாக இந்த நாட்டில் இனப் பிரச்சினை இருந்தது. ஆயுதப் போர் நடத்தப்பட்டது. நாட்டில் பிரிவினைவாதம் மேலோங்கி காணப்பட்டது. போர் நிலமைக்கு சமூகம் தள்ளப்பட்டிருந்தது. இவை அனைத்திலும் இருந்து நாம் சனநாயகத்தைப் பாதுகாத்தோம். எனினும் சனநாயகத்தை இல்லாமல் செய்யவே பயங்கரவாதம் முயற்சித்தது.

அரசியல் தீர்வையும் ஐக்கியத்தையும் நாம் இன்னும் இந்த நாட்டில் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

1977ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரம் கொண்டு வந்தாலும் போர் காரணமாக எமக்கு அதற்கான உரிய பயனைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டது. ஏனைய நாடுகள் எம்மை முந்திச் சென்றுவிட்டன.

இந்த எதிர்பார்ப்புகள் இரண்டையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போனமையே எமது நாடாளுமன்ற முறைமையிலும் சனநாயகத்திலும் குறைபாடாக இருக்கிறது. அது எமது முதன்மைக் கட்சிகளினதும், அரசியல் கட்டமைப்பில் உள்ள குறைபாடாகும். எமது தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். நாம் புதிய அரசமைப்பை உருவாக்கும் நோக்குடன் நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றி, வழிப்படுத்தும் குழுவில் சகலரும் கருத்துக்களை முன்வைக்க இடமளித்தோம். நாம் மீண்டும் இலங்கையர்களாக வாழ்வதற்கு அரசியல் தீர்வொன்றை வழங்க ஒரு சந்தர்ப்பமொன்று கிடைத்தள்ளது. நாம் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பயனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அரசியல் தீர்வை வழங்குவதற்கு அரசியல் கட்சிகள் மட்டுமன்றி அரச தலைவரும் அர்ப்பணிப்புடன் உள்ளார் - என்றார். (வ-5,31)

## வல்லிபுர...

8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும். தொடர்ந்து சுவாமி தேரில் எழுந்தருளி முற்பகல் 10 மணிக்கு வீதி உலா வருவார்.

நாளை வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெறும். தொடர்ந்து சுவாமி எழுந்தருளி சமுத்திர தீர்த்தம் ஆடுவதற்காக கற்கோவளம் வங்கக் கடலுக்குப் புறப்படுவார். சமுத்திரத் தீர்த்தம் மாலை 5 மணிக்கு நடைபெறும்.

நாளை மறுதினம் காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று சுவாமி எழுந்தருளி கேணித்தீர்த்தம் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். மாலை 6 மணிக்கு கொடியிறக்கத்துடன் வருடாந்தத் திருவிழா நிறைவுபெறும்.

தேர்,சமுத்திர,கேணித்தீர்த்த உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் உள்ள பெரியாழ்வார் ஆச்சிரமம் , பரந்தாமன் ஆச்சிரமம், லக்சுமி நாராயண அமுதசுரபி ஆகியவற்றில் அன்ன தானம் வழங்கப்படும்.

பக்தர்களின் நலன்கருதி இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ மற்றும் தனியார் சிற்றூர்தி சேவை சங்கம் ஆகியன குடா நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் வல்லிபுர கோவிலுக்கு பேருந்து சேவைகளை ஒழுங்கு செய்துள்ளன. குடிதண்ணீர், சுகாதாரம், பாதுகாப்பு, ஒழுங்குகளை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மேற்கொண்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4-173)

## தேசிய...

யாழ்ப்பாணம், ஒக். 4

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் இருபால் பிரிவுகளிலும் வடக்கு மாகாண அணிகள் கடும் ஆதிக்கம் செலுத்தி பதக்க வேட்டை நடத்தின. இரண்டு தங்கப் பதக்கங்கள் உள்பட ஐந்து பதக்கங்கள் வடக்குக்குக் கிடைத்தன.

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான தேசியமட்ட உடற்பயிற்சி போட்டிகள் தெகிவளை எஸ்.வி.எஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்றன. இதில் 20 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் தங்கப் பதக்கத்தையும், கரம்பொன் சிறியபுஸ்பம் கன்னியர்மடம் வெள்ளிப் பதக்கத்தையும், யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின.

ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி தங்கப் பதக்கத்தையும், இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின. (வ-ம-422)

## மத்திய...

வுள்ளார். நாளை மறுதினம் 6ஆம் திகதி முல்லைத்தீவில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் பேச்சு நடத்தவுள்ளதோடு, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கும் செல்லவுள்ளார். 7ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள அவர் இங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், மீன்பிடிக் கிராமங்களுக்குச் செல்வதுடன் வர்த்தகர்கள் மற்றும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடவுள்ளார். (வ-5)

## டெனீஸின்...

தாக்கல் செய்த மனு மீதான இடைக்காலக் கட்டளை எதிர்வரும் 16ஆம் திகதியே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த மனு மீதான கட்டளை நேற்று வழங்கப்படும் என்று திகதியிடப்பட்ட போதும் மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வின் தலைவர் விடுப்பில் உள்ளதாலேயே 16ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் தீர்ப்பு வரும்வரையில், அமைச்சர்களாகப் புதிதாக நியமிக்கப்பட்டவர்கள் செயற்படுவதை தடுக்கும் வகையில் இடைக்காலத் தடை உத்தரவு வழங்குமாறு அமைச்சர் டெனீஸ்வரன் கோரியிருந்தார். அது தொடர்பான கட்டளையே எதிர்வரும் 16ஆம் திகதி பிறப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-5)

## யாழ்...

தலில் ஒருவர் படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நல்லூர், சிவன் சாலைச் சேர்ந்த ஞானசேகரன் குமணேந்திரன் (வயது - 21) என்பவரே வாள் வெட்டுக்கு இலக்கானார்.

சாலையோரம் மோட்டார் சைக்கிளில் திடீரென்று வந்த இருவர் வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4-106)

## போலியான...

களின்றி வெளிநாட்டு ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெறவே விரும்பியிருந்தோம். உண்மையில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸானது டொமினியன் தகுதி நிலையை விரும்பாது முழுமையான சுதந்திரம் வேண்டுமென்று தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கை விடுத்தி ருந்தது.

கடந்த 70 ஆண்டு காலமாக நாங்கள் தேர்தல் முறையூடாக சனநாயக ஆட்சியைக் காப்பாற்றி வந்திருக்கின்றோம். அது குறை காணப்படாததாக இருக்கவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேர்தல் வழிமுறை மட்டும் சனநாயக ஆட்சி முறையை உறுதிப்படுத்த மாட்டாது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பெரும்பான்மைவாதத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்குச் சேவை செய்வதையே பெரும்பாலும் தேர்தல் முறைமை தன்னகத்தே கொண்டுள்ளது. பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்வதும் அதற்கு மதிப்பளிப்பதுமே உண்மையான சனநாயகத்தின் அடிப்படையாக இருக்க வேண்டும். பன்முகத்தன்மையை ஏற்றுக்கொண்டும் அதற்கு மதிப்பளிக்கும் பொருட்டும் மேற்கொள்ளப்பட்ட அநேக முயற்சிகளின் விளைவாக இந்த நாட்டின் மதிப்பு வாய்ந்த தலைவர்களுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடுகள் துரதிர்ஷ்டவசமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

உள்நாட்டு உருவாக்கம் என்று உரிமை கோரப்பட்ட அரசமைப்புக்கள் சுயசேவைக்கு அப்பால் பன்முகத்தன்மையின் தேவைகளை நிறைவு செய்வதற்குச் சேவையாற்ற முடியாதவைகளாகவும், மாறாகப் பெரும்பான்மைவாதத்தை மேலும் உறுதிப்படுத்துபவையாகவுமே அமைந்திருந்தன. முழு நாட்டையும், அதன் மக்களையும் வெகுவாகப் பாதிப்புக்குள்ளாக்கிய நீண்ட கால ஆயுதப் போராட்டத்தையும், கிளர்ச்சிகளையும் நாம் கண்டிருக்கிறோம்.

அவற்றால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே. அவர்கள் தமது அடையாளத்தையும், மதிப்பையும் காப்பாற்றிக் கொள்ள நீண்டகாலப் போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். ஆயுதப் போராட்டத்துக்கான காரணங்களாக அமைந்த விடயங்கள் இன்னமும் நீடிப்பதனால் அவற்றுக்கு விரைவாகத் தீர்வு காணப்பட வேண்டும்.

எமது நாட்டில் நிலவிய மிகவும் ஆபத்தான நிலமைகளிலிருந்து நாம் பாடங்களைக் கற்றுக் கொண்டுள்ளோம். நாட்டுப்பற்று என்ற பெயரில், சரியாகச் சொன்னால் போலி நாட்டுப்பற்றின் அடிப்படையில் யாராவது இத்தகைய மோசமான நிலமைகளை மேலும் தொடர முயற்சிப்பார்களாயின், அது பெரும் சோகமாகவே முடியும்.

கணிசமான தேசிய ஒருங்கிசைவின் அடிப்படையில் கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் ஊடாக பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டு, வன்முறைகளும் மோதல்களும் அற்ற எதிர்காலத்தை நாட்டில் உருவாக்கும் பொருட்டு பல்வேறு செயல்முறைகளில் நாடு தற்போது ஈடுபட்டுள்ளது.

இதன் அர்த்தம் யாதெனில், இலங்கை மக்கள் தமது இன, மத வேறுபாடுகள் அற்ற வகையில் ஐக்கியமான, பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாத இல்ங்கை தமது சொந்த நாடு எனவும், இலங்கையர் என்ற அடையாளத்துடன் தாம் இலங்கை நாட்டுக்குள் உள்ளடங்கிய ஒரு பகுதியினர் என்பதையும் விரும்பி ஏற்பார்கள் என்பதேயாகும்.

இலங்கையில் சட்டவாட்சித் தத்துவங்களையும், சனநாயக மரபுகளையும் மேலும் பலப்படுத்தி, சுபீட்சம் மிகுந்த அபிவிருத்தியை அடையும் எமது விருப்பத்தை நிறைவேற்றும், ஐக்கியமான, பிளவுபடாத, பிரிக்க முடியாத நாட்டில் ஐக்கியப்பட்ட மக்களாக முன்னோக்கிச் செல்லவே நாம் முயற்சிக்கிறோம்.

இந்த விடயத்தில் ஏற்காமை எதுவும் இருக்கும் என்று நான் எண்ணவில்லை. இலங்கை வெற்றியடைய வேண்டும் என்ற எமது விருப்பம் நிறைவேற வேண்டுமாயின், அந்தக் குறிக்கோளை அடைய நாம் அனைவரும் ஐக்கியமாகச் செயற்பட வேண்டியதே அவசியமாகும் - என்றார். (வ-5,31)

## இடைக்கால...

வைத்துக் கிழித்தெறிந்து தீயிட்டுக் கொளுத்தினார்.

இடைக்கால அறிக்கையில் நாட்டின் ஒருமைப்பாடு, பௌத்தம் மற்றும் தற்போதுள்ள மாகாண சபை அதிகாரங்கள் போன்றவற்றுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விடயங்கள் உள்ளன என்று அவர் இதன்போது விமர்சித்தார்.

மத்திய மாகாண சபையின் மாதாந்த அமர்வு பதில் அவைத் தலைவர் எஸ்.பி.ரத்நாயக்கா தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்த அமர்வில் இடைக்கால அறிக்கை மீதான விவாதமும் நடைபெற்றபோதே நிமல் பிரேமவன்ஸ இந்த அடாவடியில் ஈடுபட்டார்.

நாட்டைப் பிளவுபடுத்தும் புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டால் நாடாளுமன்றில் புதிய அரசமைப்பை எரிப்போம். அதனை ஒருபோதும் நிறைவேற்ற விடமாட்டோம், என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். (வ-5)

## புதுக்குடியிருப்பு...

புதுக்குடியி ருப்பு தேவிபுரத்தில் நேற்று மாலை நடந்துள்ளது.

தேவிபுரம், வன்னா பகுதியில் சட்டவிரோத துப்பாக்கி தயாரிக்கப்படுகின்றது என்று புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. பொலிஸார் அந்த இடத்தைச் சுற்றிவளைத்தனர். அங்கு நடத்தப்பட்ட தேடுதலில் வீடொன்றில் இருந்து வெடிமருந்துகள், துப்பாக்கிகள், துப்பாக்கி தயாரிக்கப்படும் பொருள்கள் என்பன மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

1 கிலோ வெடி மருந்து, 2 ஆயிரம் துப்பாக்கி ரவைக் கூடுகள், 19 கட்டுத் துப்பாக்கிகள், 3 துப்பாக்கிகள் என்பவற்றுடன் துப்பாக்கி தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இயந்திரங்களும் மீட்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

அந்த வீட்டின் உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணைகள் நடைபெறுகின்றன. விசாரணையின் பின்னர் அவர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## புதிய...

நிகழ்வொன் றில் பங்கேற்றபோதே எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் குற்றச்சாட்டை ஜி.எல்.பீரிஸிடம் முன்வைத்ததாக அது தொடர்பான ஒளிப்படத்தையும் தனது கீச்சகத்தில் ஹர்ச டி சில்வா பதிவிட்டுள்ளார்.

இந்தக் கருத்துக்கு அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் ஆகியோரும் சாட்சி என்றும் ஹர்ச டி சில்வா கூறியுள்ளார். (வ5,33)

## வித்தியா...

கின் சுருக்க முறையற்ற விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் இடம்பெற்றன. வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு வந்த பூபாலசிங்கம் இந்திரகுமார், "ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கோபி எனும் பொலிஸ் உத்தியோகத்தர் காழ்ப்புணர்வு காரணமாகவே இந்த வழக்கில் என்னைக் கைது செய்தார். இந்த வழக்கில் இருந்து வெளியே வந்தால் கோபியை வெட்டுவேன்" என நீதிமன்ற வாளகத்தில் வைத்து பகிரங்கமாக கொலை அச்சுறுத்தல் விடுத்தார்.

சாட்சியை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் பூபாலசிங்கம் இந்திரகுமாருக்கு மற்றொரு வழக்கை பொலிஸார் தாக்கல் செய்தனர். அந்த வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

"சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் அறிக்கையில், மாணவி கொலை வழக்கின் சாட்சி ஒருவருக்குக் கொலைமிரட்டல்விடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை மாணவி கொலை வழக்கில் இவர் நிரபராதி என தீர்ப்பாயத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார். சட்டமா அதிபரால் தீர்ப்பாயத்துக்கு முன்வைக்கப்பட்ட குற்றப்பகிர்வு பத்திரத்தில், கோபி எனும் பொலிஸ் உத்தியோகத்தர் சாட்சியாக உள்ளாரா ? இல்லையா ? என்பதை இந்த மன்று கவனத்தில் எடுக்க வேண்டிய தேவை உள்ளது.

அதனை அறிந்து கொண்டால் மாத்திரமே , சந்தேகநபருக்கு எதிராக சாட்சியங்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழா அல்லது குற்றவியல் சட்டத்தின் கீழா வழக்கு நடத்த முடியும் எனும் தீர்மானத்துக்கு வர முடியும்.

ஆகவே மாணவி கொலை வழக்கின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட குற்றபகிர்வு பத்திரத்தை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளரிடம் இருந்து பெற்று ஊர்காவற்றுறை நீதிவான் மன்றப் பதிவாளர் இந்த மன்றில் முன்வைக்கவேண்டும்" என நீதிவான் கட்டளையிட்டார்.

இந்த நிலையில் சந்தேகநபரை எதிர்வரும் 17ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-17)

## இன்றைய மோதல்கள்

*வவு. மாவட்ட கால்பந்தாட்டம்*

வவுனியா மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்பிறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண் சைன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

*திருக்குமரன் வி.க. கால்பந்துத் தொடர்*

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி திருமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலட்டி ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

*சிறிமுருகன் வி.க. கரப்பந்துத் தொடர்*

மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தத் திட்டமிடப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)

## ஐயனார் நவஜீவன்ஸ் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஒக். 4

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஐயனார் விளையாட்டுக் கழக அணியும், நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் வெற்றிபெற்றன.

திக்கம் மத்திய சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில், ஐயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கனகபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:2 என்ற கோல் கணக்கில் ஐயனார் அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது.

(ம-23)




தேசிய உடற்பயிற்சிப் போட்டியில்

# ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 4

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

தெகிவளை எஸ்.வி.எஸ் விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி தங்கப் பதக்கத்தையும், இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின.

(ம-422-23)

## ஆவரங்கால் இந்து இளைஞர் கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 4

அரச தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில், ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணம் வென்றது.

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. 5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து இளைஞர் கைப்பற்ற அடுத்த செற்றை 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மத்தி கைப்பற்றி பதிலடி கொடுத்தது. மூன்றாம், நான்காம் செற்களை 25:23, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய இந்து இளைஞர் அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-108)

## கே.ஸி.ஸி.ஸி., சென்றலைட்ஸ் அணிகள் அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 4

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் கே.ஸி.ஸி.ஸி., சென்றலைட்ஸ் அணிகள் வெற்றிபெற்றன.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டு கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் அணி மோதியது. 46:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கே.ஸி.ஸி.ஸி. அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது. 84:56 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## எறிபந்தில் வடக்கு சிறந்த பெறுபேறு

யாழ்ப்பாணம், ஒக். 4

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் வடமாகாண அணிகள் முன்னேற்றம் கண்டுள்ளன. இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான எறிபந்தாட்டம் மொறட்டுவ வேல்ஸ் குமார வித்தியாலய மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. நேற்றைய ஆட்டங்களில் வடக்கு மாகாண அணிகள் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியுள்ளன.

17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய அணிகளும் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் ஆகிய அணிகளும் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

20 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் 20 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன. (ம-422)

## சென். லூட்சியா அணிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 4

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற 16 வயதுப்பிரிவு ஆட்டமொன்றில் மன்னார் சென். லூட்சியா அணி வெற்றிபெற்றது.

குணசிங்கபுர மைதானத்தில் நேற்றுக் காலை இந்த ஆட்டம் நடைபெற்றது. மாவன்அல்லா பதுரியக் கல்லூரி அணிக்கும் மன்னார் சென். லூட்சியா மகா வித்தியாலய அணிக்கும் இடையிலான இந்த ஆட்டத்தில் மன்னார் சென். லூட்சியா மகா வித்தியாலய அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)




## வீரகத்திப்பிள்ளை ம.வி. அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 4

இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய ஆண்கள் அணி அரையிறுதிக்குத் தெரிவு செய்யப்பட்டது.

நீர்கொழும்பு உல்லாசக் கடற்கரையில் நேற்று இடம்பெற்ற இந்தக் காலிறுதியாட்டத்தில் ஓவிடிகம போதிராஜ மகா வித்தியாலய அணியும் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் பலப்பரீட்சை நடத்தின. மூன்று செற்களைக் கொண்டதாக இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. முதலிரு செற்களையும் முறையே 21:13, 21:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்.



(ம-108)

## முருங்கன் ம.வி. அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 4
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில், 20 வயதுப் பிரிவினருக்கான ஆட்டமொன்றில் முருங்கன் மகா வித்தியாலய அணி அபார வெற்றிபெற்றது.
கொகழும்பு கம்பல்பாக் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த ஆட் டத்தில், முருங்கன் மகா வித்தியாலய அணியை எதிர்த்து குறிஞ்சாக்கேணி அரபா வித்தியாலய அணி மோதியது. இந்த ஆட்டத்தில் முருங்கன் மகா வித்தியாலய அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# தேசியப் பதக்கங்களை வழித்துத் துடைத்தன வடக்குப் பாடசாலைகள்

யாழ்ப்பாணம், ஒக். 4
இலங்கைப்பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் பெண்கள் பிரிவில் அத்தனை பதக்கங்களையும் வடக்கு மாகாண அணிகள் கைப்பற்றின.
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சி போட்டிகள் தெகிவளை எஸ்.வி.எஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்றன. இதில் 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.
கரம்பன் சிறியபுஸ்பம் கன்னியர்மடம் வெள்ளிப் பதக்கத்தையும், வேம்படி மகளிர் கல்லூரி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின. (ம-422)

## சென். சேவியர் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 4
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்ந்தாட்டத் தொடரில், நேற்று இடம் பெற்ற ஆட்டமொன்றில் 20 வயது ஆண்கள் பிரிவில் மன்னார் சென். சேவியர் அணி வெற்றிபெற்றது.
கொழும்பு கம்பல்பாக் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் சென். சேவியர் அணியை எதிர்த்து கட்டையமோட்டை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய அணி மோதியது. 7:0 என்ற கோல் கணக்கில் சென். சேவியர் அணி இமாலய வெற்றிபெற்றது.
(ம-23)

## தேசியமட்ட பளுதூக்கலில் முல்லை வீராங்கனை வென்றார் தங்கம்



யாழ்ப்பாணம், ஒக். 4
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளு தூக்கல் தொடரில், 17 வயதுப் பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனை ரி.தர்சிகா தங்கப்பதக்கம் வென்றார்.
இசுறுபாய கல்வி அமைச்சின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற போட்டியில், 17 வயதுப் பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன் குளம் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.தர்சிகா 44 கிலோ எடைப் பிரிவில் 78 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தை வென்றார்.
(ம-422)

## ஜசிந்தா றோ.க.த.க. காலிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 4
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கபடித் தொடரில் 17 வயதுப் பெண்கள் பிரிவில் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.
மொறட்டுவமகாவித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களில், முதலாவது ஆட்டத்தில் அமரசூரிய வித்தியாலய அணியை 40:11 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும், தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வரதும்பர வித்தியாலய அணியை 39:15 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும் வெற்றிபெற்றே ஜசிந்தா அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.
(ம-23)



# சென். ஹென்றிஸ் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 4
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் 16 வயது ஆண்கள் பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.
கொழும்பு குணசிங்கபுர மைதானத்தில் நேற்றுக் காலை இடம் பெற்ற ஆட்டத்தில் திருணந்தா மகா வித்தியாலய அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. சென். ஹென்றிஸின் சார்பாக இரண்டு கோல்களைப் பதிவுசெய்தார் டிசாந். 2:0 என்று ஹென்றிஸின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் சென். ஹென்றிஸின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார் ஜினோல்டரன். முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சென். ஹென்றிஸ் கல்லூரி அணி. (ம-23)

## சோமஸ்கந்தா அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 4
இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி அரையிறுதிக்குக்குத் தகுதி பெற்றது.
நீர்கொழும்பு உல்லாசக் கடற்கரையில் நேற்று இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 21:17, 21:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரண்டு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றதது சோமஸ்கந்தாக் க்ல்லூரி அணி. சோமஸ்கந்தாக் கல்லூரி அணி இன்று இடம்பெறும் அரையிறுதியில் வவுனியா சிறிசுமணா வித்தியாலயத்துடன் மோதவுள்ளது.
(ம-108)



## பதவி வெற்றிடம்
## (ASSISTANT PHARMACIST - உதவி மருந்தாளர்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் பிரபல தனியார் வைத்தியசாலைக்கு மேற்படி பதவிக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிப்போர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டும்.

- க.பொ.த (சா/த) (O/L) இல் (கணிதம், விஞ்ஞானம்) உள்ளடங்கலாக சித்தி அடைந்திருக்கவேண்டும்.
- க.பொ.த (உ/த) (A/L) இல் விஞ்ஞான பிரிவில் கற்றிருக்கவேண்டும்.
- Pharmacy Course பயின்றிருத்தல் விரும்பத்தக்கது. இரண்டு வருட துறைசார் அனுபவம்.
- வயதெல்லை 20 தொடக்கம் - 30 வரை

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை 11.10.2017 இற்கு முன்னர் நேரிலோ, தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்க முடியும்.

மனிதவள முகாமையாளர்,
நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை,
No.342, பலாலி வீதி, திருநெல்வேலி.
Tel No. 021 721 7324,
Mobile No. 077 773 2892,
Email - nchjaffna@gmail.com

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் மகேச்சுரன்

*(ஓய்வு நிலை கூட்டுறவு முகாமையாளர்)*



மட்டுவில் வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மகேச்சுரன் (03.10.2017) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மாணிக்கம் தம்பதியரின் இளையமகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் அன்னபூரணம் (ஓய்வு நிலை மருத்துவமாது - சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை) அவர்களின் அன்புக்கணவரும் தனஞ்சயன் (முகாமைத்துவ உதவியாளர் - கிராம அபிவிருத்தித்திணைக்களம், வடமாகாணம்) கலைவாணி (ஆஸ்திரேலியா) பகீரதி (தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனாவைத்தியசாலை) அன்பழகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும் லவன் (ஆஸ்திரேலியா) சியாணி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆரதி அஞ்சனா (ஆஸ்திரேலியா) அபினேஸ் அனுஷ்கா அபிஸ்னன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப்பேரனும் மட்டுவில் ஆ.நடராசா (ஓய்வு நிலை அதிபர்) அம்பிகைப்பிள்ளை நடராசா (ஓய்வு நிலை ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2017) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.30 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணாத்திப் பாலம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மட்டுவில் வடக்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

### திருமதி கோணேஸ்வரி பாலசுப்ரமணியம்



தோற்றம் 03.04.1930 மறைவு 03.10.2017

யாழ். நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோணேஸ்வரி பாலசுப்ரமணியம் நேற்று (03.10.2017) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் பொன்னம்மா, குலவீரசிங்கம், கண்மணி, செல்லத்துரை, கணேஸ், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குமுதினி (சுவிஸ்), கேதீஸ்வரன், கமலேஸ்வரி, சாந்தினி (சுவிஸ்), யோகதீசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் கருணாநிதி, பத்மநாதன், சந்திரன், ஜெயா ஆகியோரின் பாசமிகு மாமியும் சரண்யா, சாரூயன், துவாரகா, பார்த்தீபன், நிதர்சன், நிஷாந், நிலானி, தாட்சாயினி, நிவேதா, நரேஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பிரகதீஸ், ஜெரீஸ் ஆகியோரின் அன்புமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2017) வியாழக் கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நந்தாவில் லேன்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**
**குஞ்சு (மகள்) - 076 650 6790**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# காயத்தால் விலகினார் பேல்

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்துக்கான தகுதிச் சுற்றுக்கள் நடைபெற்றுவரும் நிலையில், காயம் காரணமாக விலகியுள்ளார் வேல்ஸ் அணியின் தலைவர் பேல்.

அடுத்ததாக நடைபெறவுள்ள ஜோர்ஜியா, அயர்லாந்து அணிகளுக்கு எதிரான ஆட்டங்களில் அவர் களமிறங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

(ம)

## வாடகைக்கு விடப்படும்

CAT 312 Excavator (பைக்கோ), JCB என்பன வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு : 0772769715
துர்க்கா கிறசர் புத்தூர் கிழக்கு, புத்தூர்.

## அமெரிக்க லொட்டறி விசா - 2019

வருடந்தோறும் 55 000 பேர் தெரிவு செய்யப்படும் அமெரிக்க லொட்டறி விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
திருமுருகன் கொம் நெற் (பிறைவேட்) லிமிட்டெட்
216, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
(ஆல் சிலோன் புத்தகசாலைக்கு அருகில்)
46, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
18, பிரதான வீதி, நெல்லியடி.
-0777554528

## ENGLISH PERSONAL CLASSES

**ஆங்கில பிரத்தியேக வகுப்புக்கள்**
**அனுபவம் மிக்க ஆசிரியரினால் உங்கள் வீட்டிற்கு வருகைதந்து கற்பிக்கப்படும்.**
T.P: - 077 658 9443 **யாழ்ப்பாணம்**

## தவறவிடப்பட்டுள்ளது

கனகபுரம் ஊற்றுப்புல வீதி ஊடாக ஸ்கந்தபுரம் செல்லும் வழியில் எனது Purse தவறவிடப்பட்டுள்ளது. இதற்குள் அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், NSB ATM Card உள்ளது. அதனை கண்டெடுத்து ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P.- 077 385 3150

## சிறு நீரகம் தேவை

மாங்குளத்தைச் சேர்ந்த 53 வயது நபருக்கு (ஆண்) B+ குருதிவகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. 50 வயதுக்கு குறைந்தவர்கள் வழங்கி உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல.**
**- 077 374 5525, 076 423 1783, 077 212 1907**

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.

**www.ambafrance-lk.org**

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், வீட்டுப்பெண்கள், தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

3 மாத சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 07.10.2017

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.ப | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

வாரநாள் வகுப்புகள் (திங்கள், புதன்) 04.10.2017
1.காலை 08-10 2.காலை 10-12
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டுமே

SAAMSON
Experts in English Training
403,வெலிங்டன் சந்தி
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## வட இந்திய காசி யாத்திரை

**நாள்கள்: 10** **ஆரம்பம்: 19.10.2017**

**செல்லும் இடங்கள்:** டெல்லி, நாராயணசுவாமி கோயில், ஆக்ரா, தாஜ் மஹால், செங்கோட்டை, மதுரா, கிருஸ்ணஜென்மபூமி, பிரேம்மந்திர் பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், காசியில் 2நாள் (வாரணாசி), கயா காலமானவர்களுக்கு பிதிர்க்கடன் செய்யுமிடம், புத்தகயா (புத்தாலயங் கள்), அலகாபாத் (கங்கா, யமுனா, சரஸ்வதி), திருவேணி சாங்கமம், சீத்தாமடி (சீதை தாயாருடன் பூமிக்குள் புதையுண்ட இடம்) வேறு இடங்களும் காணலாம். அத்துடன் இராமேஸ்வரம், நவபாஷாணம், உத்திரகோஷமங்கை, திருப்புலானி, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரத் தரிசனம், அப்துல்கலாமின் மணிமண்டபமும் காணலாம். ஒரு நாள் சொப்பிங்.

**பெற்றுக் கொள்ளும் ரூபாய்க்கு எமது சேவைகள்**

4 விமான பயண டிக்கெட், மடப்பள்ளி ஆள்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு (மூன்று வேளை), கோப்பி, ரீ, குடிநீர் (மினரல் வோட்டர்) 2பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி மேலும் கொழும்பிலிருந்து எயார் போட் போக வர வாகன வசதி.

குறிப்பு : மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரவும் திரும்ப கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லவும் எமது செலவில் வாகன வசதி செய்து தரப்படும். மடப்பள்ளி ஆள்கள் சமைப்பதால் பிராமண சமூகத்தினரும் எவ்வித தயக்கமுமின்றி கலந்து கொள்ளலாம். விவரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
No: 59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
T.P : 077 768 0102, 077 736 2154

## வெளிவந்து விட்டது

2017 ஆம் ஆண்டு புத்தம் புதிய டிசைன்களில் தீபாவளி வாழ்த்து மடல்கள் சகல அளவுகளிலும்.

**அன்னை புத்தகசாலை**
**யாழ்ப்பாணம். 021 222 9881**

## தேவை

அலுவலக உதவியாளர் பெண்
தகைமை O/L.
தொடர்புகளுக்கு
076 697 3040/0212212410

ELAS Sir. Pon Ramanathan Rd. Thirunelveli, Jaffna.
(பல்கலை எதிரில்)

## பெயர் மாற்றம் தொடர்பாக

**ஜெயமோகன் கிருபானந்தராசா** என்னும் பெயரில் இதுவரை காலம் அழைக்கப்பட்ட நான் இன்றிலிருந்து எனது அனைத்து ஆவணங்களிலும் **ஜெயமோகன் கிருபா** என்னும் பெயரில் இலங்கை சோசலிச ஜனநாய குடியரசுக்கு அமைய மாற்றியுள்ளேன் என்பதை அறியத்தருகின்றேன்.

**ஜெ . கிருபா**
**"ஆ" பிரிவு, தேவிபுரம், புதுக்குடியிருப்பு**
**077 425 3947**

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியியல் கற்கை நெறிகள்**
**Banking Courses**
*IABF & DABF*
(Tamil & English Medium)
Qualification : G.C.E.O/L 6 Passes with 5 Credits including Maths.
**ஆரம்பம் - 23.09.2017**

**கணக்காளர் கற்கை நெறிகள்**
**Chartered Accounting Courses**
Executive Level & Business Level
(Tamil & English Medium)
Qualification : G.C.E. A/L 3 Passes
Note:- 2017 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்.
**ஆரம்பம் - 23.09.2017**

Students A waiting (A/L) Results Enrich your Proficiency in English
**Certificate Course in English**
15 Batches have successfully completed the course
Register your names before **07.10.2017**

*Further Details*
**Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna,
021 222 3382/ 021 222 9149

## ஆங்கிலத்திற்கு NO.1 பயிற்சி மையம்

உங்கள் ஆங்கிலப்புலமைக்கு ஓர் முழுமையான ஆங்கிலக்கற்கை நெறி




DIPLOMA IN ENGLISH
Spoken English

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 10:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 4.00 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Wed,Fri 9:30 a.m. | Tue, Thu 08.30 a.m.<br>Sat, Sun 10.30 a.m. | Mon,Wed,Fri 11:00 a.m<br>Sat, Sun 3.30 p.m.<br>Tue,Thu 9:00 a.m | Sat, Sun 10.00a.m |

# DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி சயன்ஸ் ஹோல் அருகாமை | M.M.V.வீதி | No.174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No.130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

## அமெரிக்க லொத்தர் விசா

0768226243

V2 TRAVELS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 |
| சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புராண வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி துன்னாலையம்பதி, வல்லிபுரம் ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தானம்



# தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் - 04.10.2017

## ஆலய வரலாறு

எங்கும் நிறைந்த இறைவனை சிறப்பாக ஓர் இடத்தில் இருத்தி சிந்தையைப் புனிதமாக்கி சீரோடு வாழ்வதற்கு எழுந்தவையே ஆலயங்கள்.

ஈழமணித் திருநாட்டின் சிரம் என விளங்கும் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலே வடபால் அமைந்த பதி வடமராட்சி. இப்பதியில் பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள புகழ்பூத்த பழமையும் பெற்ற ஆலயம் வல்லிபுர ஆழ்வார் ஆலயம். இவ் ஆலயமானது துன்னாலை, புலோலி வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்களுக்கு அணி சேர்க்கும் முகமாக இக்கிராமங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள வல்லிபுரத்தில் அமைந்துள்ளது.

ஆர்ப்பரிக்கும் கடல், வெள்ளை மணற்பரப்பு, பசுமை கொடுக்கும் விருட்சங்கள் என்று இயற்கை அன்னை அரவணைக்கும் இடத்தில் மிளிர்வது சிறப்புக்குரிய தாகும். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமையப் பெற்ற ஒன்றாக மிளிர்வது சிறப்புக்குரிய அம்சமாகும்.

வல்லிபுரம் என்ற பெயருக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் கி.பி.303 இல் நாகர்களுடைய ஆட்சியும் கி.பி.556 இல் லம்பகர்ணர் ஆட்சியும் நிறைவுக்கு வந்தாக வரலாற்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இப்பகுதிகளில் குடியேறிய படைவீரர்களின் ஆதிக்கம் வளர்ச்சியடையத் தொடங்கியபோது வடமறவர் ஆட்சி செய்த இடமாக வடமராட்சி விளங்கியது. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை கருத்துப்படி தொண்டை நாட்டில் வடக்கில் வசித்த மக்களில் ஒரு பகுதியினர் இங்கு குடியேறியதாகவும், அவர்கள் குடியேறிய பிரதேசத்துக்கு வடமராட்சி எனப் பெயரிட்டதாகவும், தெரிய வருகின்றது. இக்குழுவின் தலைவனாக வல்லிய தேவன் என்பவன் இருந்த தாகவும், எனவே அவன் பெயரைக் குறிக்கும் முகமாக இக் கிராமத்துக்கு வல்லி புரம் என்று பெயரிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இங்கு கடவுள் பக்தியும், செல்வப் பெருக்கும் நிரம்பப் பெற்ற குடும்பத்தில் இலவல்லி பிறந்தாள் அவள் திருமணமாகி குழந்தைப் பேறின்றித் திருமாலை வழிபட்டுவந்தாள். இக் காலத்தில் விஷ்ணு வங்கக்கடலில் மீனவர்க்கு பெரும் தொல்லை கொடுத்துவந்தார். இவ்வேளை இயற்கையை இரசிக்க விரும்பிய இலவல்லி கற்கோவளத்தை அடைந்து கடலில் விளையாடினாள். பின்னர் படகில் ஏறி சிறித தூரம் சென்றாள். அவ்வேளை மீன் ஒன்று அவள் மடியில் பாய்ந்தது. அம்மீன் மடியில் அழகிய குழந்தையாகி சங்கு, சக்கரம் முதலிய வற்றைக் கொண்டதாகவும் காட்சி அளித்தது. இல வல்லியையும் தன் பூர்வீக பலனை எய்தியமை எண்ணி மகிழ்வடைந்தாள். இறுதியில் அம்மீன் சக்கர வடிவத்தை அவளுக்கு அளித்துவிட்டு மறைந்தது.

இலவல்லி மச்சமாய், மாகவுமாய் காட்சியளித்த மாயவனால் அருளப் பட்ட சக்கரத்தை வல்லிபுரத்துக்குக்கொண்டு வந்து ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தாள். இலவல்லியின் ஆழ்ந்த பக்தியின் ஊடாக உருவாக்கப்பட்ட ஆலயம் அதலால் வல்லிபுர ஆழ்வார் எனப் பெயர் பெற்ற சிறப்புப் பெற்றது எனலாம்.

இந்த ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சக்கரமே வைத்துப் பூசை நடை பெறுகின்றது. சூரிய வழிபாட்டிலும் வழிபாட்டுச் சின்னமாக சக்கரம் இடம்பெறு கின்றது. அதே நேரம் வைஷ்ணவர்களால் திருமாலின் சக்கரம் ஆயுதமாகப் பூசிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

ஆஞ்சநேயர் வழிபாடும் இங்கு சிறப்புப் பெற்றதைக் காணமுடிகின்றது. சமுத்திர தீர்த்தத்தின் போது சக்கரத்துடன் ஆஞ்சநேயரும் எடுத்துச் செல்லப் படுவார். புராதன மக்களுடைய நாகதம்பிரான் வழிபாட்டினையும் இங்கு காண லாம். இவ் ஆலயத்தில் நாகதோஷம் நீங்க நாகதம்பிரானுக்கு பல நேர்த்திக் கடன்களை அடியவர்கள் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. நினைத்த காரி யங்கள் நிறைவேறவும், திருமணப் பாக்கியம், குழந்தைப் பாக்கியம் வேண்டியும் பல நேர்த்திக் கடன்களை ஆற்றி வேண்டியதை வேண்டியவர் களுக்கு அருளும் காத்தற் கடவுள் விஷ்ணு பகவானும் வீற்றிருக்கும் சிறப்புப் பெற்ற ஆலயமாக மிளிர்கின்றது.

## பிரதம குருமார்களின் நல்லாசிகள் நல்வாழ்த்துக்கள்



இன்றைய தினம் எல்லாம் வல்ல மாயவன் தாழ் பணிந்து பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வாரின் மிகப் புனிதம் வாய்ந்ததான இரதோற்சவ தினமாகும். கடந்த புரட்டாதி 04 ஆம் நாள் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இனிதே நடைபெற்று இன்று சங்காரத் தொழிலைக் குறிக்கின்றதான தேர்த்திருவிழவாகும். அடியவர்களின் பழுதுயர் களைந்து ஆன்ம ஈடேற்றத்துக்காக பாவங்களை ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அழித்து மக்களைக் காக்கும் இறைவனின் தொழிலாகும். எல்லாம் வல்ல ஸ்ரீவல்லிபுரச் சக்கரரூப மாயவன் திருத்தேரிலேறி வந்து அடியார்படும் துயர் களையும் இந்நாளில் நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக சமா தானமாக வாழ ஸ்ரீவல்லிபுர மாயவனைப் பிரார்த்தித்து தமிழ் மக்கள் விரும்பியதைப் பெற்று நல்வாழ்வு பெற அவனை வேண்டி மாயவனின் நல்லாசிகளையும் எமது நல்வாழ்த்துக்களையும் பெரும் உவகையுடன் கூறிக் கொள்கின்றோம்.

**பிரம்மஸ்ரீ சு.க. சுதர்சனகுரு.(J.P) , பிரம்மஸ்ரீ சு.க.புருஷோத்தமகுரு.(J.P),**
**பிரம்மஸ்ரீ சுதர்சன கணபதிஸ்வரக்குரு,**
**பிரதான குருமார்கள், ஸ்ரீ ஆழ்வார் பீடம், ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில்**
**துன்னாலை, புலோலி.**

## மகோற்சவம் சிறப்புற வாழ்த்துக்கள்



வருடா வருடம் மகோற்சவம் நடைபெறுகின்றது. அதனால் மக்களும் மாயவனின் அருள் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள். தேர்த்திரு விழா என்றதுமே பக்தர்கள் நாலா திசையிலும் இருந்து முந்தியடித்துக் கொண்டு ஸ்ரீவல்லிபுர ஆழ்வாரின் அருள் வேண்டி ஓடி வருகின்றனர். மாயவனும் தேரேறி வீதியுலா வந்து பக்தர்கள் கேட்டவரம் அருள்கின் றான்.

வல்லிபுரமாயவன் தேரிலே வீதியுலா வரும் கண்கொள்ளாக் காட்சியை கண்டுகளிக்க இயலாதவர்கள் எம்பெருமானை நினைவு கூர்ந்து அவன் அருளைப் பெற்றுக் கொள்வார்கள் என்பது எனது நம்பிக்கை. எனவே இச் சிறப்பு மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மாயவன் வேண்டிய நேரத்தில் வேண்டிய அவதாரங்களை எடுத்து அடியவர்களை அண்மித்துச் சென்று அவர்களைக் காப்பாற்றி அருள் பாலிப்பவர். மஹோற்சவம் இனிதே நிறைவுறவும் பக்தர்கள் பயன் பெறவும் எனது வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

**இ.அன்னலிங்கம்** .J.P
**மகாசபை தலைவர்**
**ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்**

## கருணை கடலே! ஸ்ரீவல்லிபுரத்தானே! தேரேறி வருக!



வடமராட்சி மண்ணில் கோவில் கொண்டு எழுந்தருளி , தம்மை நாடி வந்த அடியார்களுக்கு வேண்டுவனவெல்லாம் அள்ளி வழங்கும் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் மகோற்சவம் இம் முறையும் மிகச் சிறப்பாக நடைபெற்று, இன்று இராதோற்சவம் நிகழ்கின்றது.

யாழ்குடா நாட்டின் நாலா புறத்திலுமிருந்து பல்லாயிரக்கணக்கான மாயவன் அடியார்கள் இவ் ஆலயத்திற்கு வருகை தந்து மாயவனை வழிபட்டு தமது பிரார்த்தனைகளை நிறைவேற்றி அவன் அருள் பெற்று செல்வது வழக்கமாகும்.

தேரோடி வீதி உலா வரும் போது - வினை
வேரோடு ஓடிமறையும்.

என்பது அருள்வாக்காகும். இதற்கமைய இன்று நடைபெறும் எம் பெருமானின் தேர் உற்சவத்தின் போது பக்தர்கள் காவடி, தீச்சட்டி எடுத்தும், அங்கப்பிரதட்டை செய்தும் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றி சகல செல்வங்களும் பெற்று நீடூழிவாழ எல்லாம் வல்ல வல்லிபுரத்தான் அருள்பாலிக்கவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**க.சற்குணம்**
**தென்கருணையம்பதி**

மாயவனின் தேர்த்திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

பழமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்

ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விடாதீர்கள்

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (ரகசியம் பாதுகாக்கப்படும்)

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை வீதி, கண்டி.
077 327 2302,
076 466 4153,
075 509 5887.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ சுசிலா
ஆபரண மாளிகை



Sri Susila
*Gold House*

(916 KDM) தங்க நகைகள் மொத்தமாகக் கிடைக்கும்.

239, Main Street, Point Pedro. 239 பிரதான வீதி, பருத்தித்துறை.

T.P. No: 077 721 0206, 021 226 1003, 021 320 7437

வல்லிபுர ஆழ்வார் தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

Kajamugan Dental Care




Kajamugan Dental Care
M.M.V. Road, Nelliyady.
Tel: 021 226 0000 / 021 226 2888

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

Mr.Concrete



Kodikamam road,
Puloly.

Tel : 0217 222 333 , 021 226 2777
Hotline : 0776126089
web - www.mrconcrete.lk
e-mail: mrconcretelk@gmail.com


வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

HARI
ENGINEERING



TRUST IS JUST ONE
OF THE THINGS
WE BUILD WELL

OUR SERVICE
| BUILDING CONSTRUCTION
| RENOVATION WORKS
| GYPSUM MOULDING WORKS



Alvai Road, Nelliady, Jaffna
contact@hariengineering.com
+94 (0) 70 222 7222
+94 (0) 77 283 0694
+94 (0) 70 222 7222

www.hariengineering.com
/ hariengineersLK

moving money for better
WESTERN UNION

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

New AMBIGA STORES

MONEY TRANSFER
Money Master

நியூ அம்பிகா ஸ்ரோர்ஸ்



உலகெங்குமுள்ள உறவுகளுக்கு
உள்நாட்டு, வெளிநாட்டு
துரித தபால் பொதிகள் சேவை
உடனுக்குடன்
அனுப்ப நாடுங்கள்

இல.33, பிரதான வீதி,
நெல்லியடி.

Mob - 077 667 9340 Fax - 021 226 4197
Tel - 021 226 3571 newambiga@gmail.com

உறவுகளிடமிருந்து western union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள்பெற்றுக் கொள்ளலாம்

DHL aramex SKYNET

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

Premium house tiles

LANKATILES
DEALER



சகல விதமான
லங்கா மாபிள்கள்குளியலறை
சாதனங்கள், மாபிள்சீமெந்து வகைகளை
விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

நாட வேண்டிய ஒரே இடம்

No.181,Main Street.
Nelliyady
premiumhousetiles@live.com
021 226 4300, 077 857 7243

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

சந்நிதியான் புடைவையகம்

உங்கள் விருப்பம் போல் விதம் விதமான சாறிவகைகள் பஞ்சாபிகள், பஞ்சாபித்துணிகள் மற்றும் ஸ்கேட் & பிளவுஸ் அதி நவீன வகையான ஆடைகளை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.

உங்களுக்குத் தேவையான அன்பளிப்புப் பொருள்கள் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

உள்ளூர் மற்றும் விமான நிலையம். மங்களகரமான நிகழ்வுகளுக்கு A/C வான் சேவை ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

சந்நிதியான் புடைவையகம்
இல.2, நவீன சந்தை,
வல்வெட்டித்துறை.
077 136 9162

சந்நிதியான் அழகுச்சோலை
இல.3, கே.எஸ்.வீதி,
வல்வெட்டித்துறை
077 136 9162

சந்நிதியான் ரவல்ஸ்
இல.2, நவீன சந்தை
வல்வெட்டித்துறை
077 136 9162

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

மனோகரன் ஹாட்வெயார்

உங்களுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள், பெயின்ற் வகைகள், PVC பைப், மாபிள் வகைகள் என்பவற்றுடன் துவிச்சக்கர வண்டிகள், எலெக்ரிக் பொருள்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றிடலாம்.

சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி. தொ.பே : 021 226 4192

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

மந்திகை பார்மஸி
MANTHIKAI PHARMACY

சகலவிதமான ஆங்கில மருந்துகளையும்
சகலவிதமான பால்மா வகைகளையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய இடம்

மந்திகை பார்மஸி- புலோலி
021 226 3283

PRIYANKA
Digital Colour Lab

பிரியங்கா
டிஜிற்றல் கலர் லாப்

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.இல : 021 226 2737 075 535 1527
E-mail : priyankadigitalcolourlab@gmail.com

Digital Photo Printing (4x6 - 12x36)
Indoor & Outdoor Photography
New Album Making & Designing
New Chrystal Making

4x6 - 11/=
10x15 - 85/= 12x8 - 65/=

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தேரேறி வரும் ஆழ்வாரின் திருவருள்
யாவருக்கும் கிடைக்கட்டும்.

சகல விதமான அச்சுவேலைகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

தீபன் பதிப்பகம்

உரிமையார்:
சி.தீபானந்

பிரதான வீதி, பருத்தித்துறை &
நீதிமன்ற வீதி, பருத்தித்துறை.
T.P:077 6520315
E mail: theepanoffsetprinters@gmail.com

Real Italian
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேர்திருவிழா
சிறக்க வாழ்த்துகின்றோம்.

Vinmeen Pizza
Vinmeen Restaurant & Bakery

நான்காவது ஆண்டு வெற்றிப் படியில் காலடி எடுத்து வைக்கும் நாம் நவீன உயர்தர ஐசிங்கேக் ஓடர்களை உடனுக்குடன் செய்து வழங்கி வருகின்றோம். மற்றும் மங்கலகரமான நிகழ்வுகளுக்குத் தேவையான உணவுகளை ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் நவீன உயர்தர வெதுப்பக உற்பத்திகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

No.83, MAIN STREET, NELLIADI, KARAVEDDY.
T.P: 021 226 1051
கிளை: பஸ் நிலையம் முன்பாக (இலங்கை வங்கி அருகில்),
கொடிகாமம் வீதி - நெல்லியடி.
தொ.பே: 021 226 1354

தேரேறி வரும் ஆழ்வாரின் திருவருள் யாவருக்கும் கிடைக்கட்டும்.

SAIBEAUTY PARLOUR

சாயி பியூட்டி பார்லர்
➢ இயற்கையான
அமைதியான...
ரம்மியமான சூழலில்.....

பேஷியல்கள்,ஐபுறோ, முடி சுருள் பண்ணுதல், முடி அயன் செய்தல் மற்றும் திருமணம், பிறந்த நாள், ஐஸ்சிங் கேக் சேவைகளும் வழங்கப்படுகின்றன. மணப்பெண் ஒப்பனைகள் (காலத்திற்கு ஏற்ப) நவீன முறையில் மேற் கொள்ளலாம்.

மணப்பெண் ஒப்பனைக்கு கற்பனைத்திறன்
கொண்ட பெண் கலைஞர்களின் சேவை.

சுனிதா அசோக் 077 882 0006
பிரதான வீதி, பருத்தித்துறை பஸ்நிலையம் .
அன்னை மெடிக்கல் அருகில்

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

T.Suthan
காஞ்சனா
நகைமாளிகை
Kanchana
Jewel House
Merchants of gold & jewels

244,Main Street, Point Pedro.
Tel: 021 226 2574, 077 188 2119

S. Kanchana
Beauty
Make up Centre
Bridal Makeup, Hair Dressing, Facials and Structure cakes.

244,Main Street, Point Pedro
Tel: 021 226 4394, 077 6529249

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய இரதோற்சவம் சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

பூபாலசிங்கம்
புத்தகசாலை

சகலவிதமான பத்திரிகைகள்
மற்றும் பாடசாலைப் புத்தகங்கள்,
கொப்பிகள் மற்றும்
சகலவித பாடசாலை
உபகரணங்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
இடம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
021 222 6693 இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேர்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

## தீபா Theebaa Jewelery
## நகை மாளிகை

ஓடர் நகைகள் தரமான 22 கரட் தங்கத்தில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

பிரதான வீதி, நெல்லியடி. 077 664 8768

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

## அம்பிகை நகைமாடம்

தரமான 22 கரட் தங்கத்தில் ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். சிங்கப்பூர் நகைகளை உடன் பெற்றுக் கொள்ளலாம்.

அம்பிகை நகைமாடம்
கொடிகாமம் றோட், நெல்லியடி. 021 226 3285

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேர்திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்.

## சாயிராம்
## மதர் & பேபி நீட்ஸ்

கர்ப்பிணிப் பெண்களுக்கான ஆடை வகைகள் மற்றும் மழலைச் செல்வங்களின் மகிழ்ச்சித் தெரிவுக்கு தனித்துவமான ஒரே இடம்.

T.P: 021 226 1459
Hospital Road, Manthikai.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

causeway paints வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## ஸ்ரீ அம்பாள் பெயின்ற் கடை
## Sri Ampal Paint Shop

Hospital Road, Manthikai.
077 978 5703

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

## Kohils
Baby Needs & Fancy

Super Savings for Baby!

கற்பிணித் தாய்மார்களுக்கு தேவையான வைத்தியசாலைப் பொருள்கள், பால்மா வகைகள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் குழந்தைகளுக்கானஅனைத்துப் பொருள்களுடன், அழகுசாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், இலத்திரனியல் உபகரணங்கள், சில்வர் பாத்திரங்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

## KOHILS BABY NEEDS FANCY
## கோகில்ஸ் பேபி நீட்ஸ்

இல - 65, பிரதான வீதி, நெல்லியடி.
021 226 3545

தேரேறி வரும் ஆழ்வாரின் திருவருள் யாவருக்கும் கிடைக்கட்டும்.

## MAHY
beauty parlour

Ladies Beauty Items, Eye brow shap, Ping full face, Threading, Facials, Waxing, Face Bleaching, Manicure & Pedicure, Pimple Treatment

Ladies Hair cutting, Straighting, Rebounding, Perming, HairColouring Hot Oil Massage, Ironing

புதிய மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவர்

1st Mile post, Point Pedro. TP: 077 533 6214

தேர் ஏறிவரும் ஆழ்வாரின் அருள் கிடைக்க வாழ்த்துகின்றோம்

## தமிழ்ப்பூங்கா பதிப்பகம்
## TamilPoonga

சகலவிதமான அச்சு வேலைகளும், அழைப்பிதழ்களும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

OFFSET PRINTERS

பிரதான வீதி, நெல்லியடி
Main Street,Nelliady.
021 226 4014, 077 959 7145
email- tamilpoonka@gmail.com
www.nelliadytamilpoonga.blogspot.com

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேர்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

நெல்லியடியில் பிரமாண்டமான புடவை மாளிகை
விதம் விதமான சாறிவகைகள், சல்வார் துணிகள், சேட், ரீசேட், பஞ்சாபிகள்
இன்னும் ஏராளமான புடைவைகளுடன்
சிறுவர் முதல் அனைவருக்கும் ஏற்ற பல வகையான ஆடைகளைப் பெற்றிடலாம்

## செல்லமுத்தூஸ்
## புடைவை மாளிகை

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
021 226 3238

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

## தாஸ் அலுமினியம்
## பிற்றிங்

அலுமினியம் கதவுகள், யன்னல்கள், கிச்சின் அலுமாரிகள், பெட்றூம் அலுமாரிகள், ஹோல் சோக்கேஸ், ஜிப்சம் லெவல் சீற் வேலைகள், பாட்டிசன் வேலைகள் அனைத்தும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

## Thash Aluminiya Fitting & Framing

PPD Road, Nelliady, T.P- 077 292 4741

மாயவன் தேரேறி வந்து எல்லோருக்கும் நல்லருள் பாலிப்பாராக

## RAINBOW TILES STORES
## றெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்

பருத்தித்துறை வீதி, மந்திகை புலோலி

பெயின்ற் வகைகள், மாபிள் வகைகள், எஸ்லோன் பி.வி.சி பைப் வகைகள், கட்டடப் பொருள்கள், விவசாய மருந்து வகைகள், துவிச்சக்கர வண்டி உதிரிப் பாகங்கள் மற்றும் மின்சாரப் பொருள்கள் என்பன மலிவு விலையில் கொள்வனவு செய்யலாம்.

021 226 2696
077 869 5418

வல்லிபுர ஆழ்வாரின் கருணை அனைவருக்கும் கிடைக்கட்டும்

## வரத விநாயகர்
## பாம் சிற்றி

கால்நடை மருந்துகள், தீவனங்கள், பண்ணை உபகரணங்கள், கோழிக்குஞ்சுகள், உள்நாட்டு, வெளிநாட்டு செல்லப்பிராணிகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## ஸ்ரீ வரத விநாயகர்

கட்டடப்பொருள்கள் விற்பனை நிலையம்
&
போக்குவரத்துச்சேவை

கூரை ஓடுகள், மட்பாண்ட பொருள்கள் பூச்சாடிகள், கட்டடப் பொருள்களையும் மற்றும் போக்குவரத்துச் சேவைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

சிவப்பிரகாச ம.வி. அருகில், தும்பளை வீதி, பருத்தித்துறை.
077 414 7463, 021 205 6130
Face book : varatha vinayagar farm city


தேரேறி வரும் ஆழ்வாரின் திருவருள் யாவருக்கும் கிடைக்கட்டும்.

களங்கமற்ற உங்கள் புன்னகையை
நாம் பாதுகாப்போம்...



ROYAL MEDICAL CENTRE
ரோயல் மெடிக்கல் சென்ரர்
பற்சிகிச்சை நிலையம்

Orthodontic Treatment | Teeth Bleaching
Flexible Denture | Metal Denture
Dental Implant | Crown and Bridges
White Colour Filling | Root Canal Filling



அனைத்து விதமான சிகிச்சைகளையும் உயர்ந்த தரத்தில்
நவீன வசதிகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.
விசேட பல வைத்திய நிபுணர்களும் வருகை தருகின்றனர்.

தொலைபேசி எண்
021 561 7035

இல. 458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



## உன் சேயாக எமைக்காப்பாய்

சங்கொடு சக்கரமாம் ஏந்தும் தடக்கையன்
எங்களைக் காக்கின்ற எம்பெருமான் மங்களஞ்சேர்
எல்லா நலங்களையும் எங்களுக்குத் தந்தருளும்
வல்லிபுர ஆழ்வானை வாழ்த்து!

கண்ணன் திருவடியைக் காலமெல்லாம் வணங்கினால்
வண்ணமிகு வாழ்வுதனை வழங்கியே அருள்புரிவான்
எண்ணமெலாம் அவன் நினைவாய் எந்நாளும் இருந்திடில்
திண்ணமதாய் தந்திடுவான் திகழ்சீர் வாழ்வுதனை

மாயா! மணிவண்ணா! மாதவா! மதுசூதனா
தீயாய் நீராய் நிலனாய் காலாய் நெடுவானாய்
நீயாகவே எல்லாம் நிறைந்து நிற்பவனே - உம் தன்
சேயாகவே எமைக்காப்பாய் சீர் வல்லிபுர ஆழ்வோனே

வே. இராமர்
கைதடி நாவற்குழி

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

REGISTER NOW!

Hotline:
0717 140000
0710 770770

நிச்சயமான தொழிலை இலக்காகக்
கொண்ட பாடநெறி
O/L பின் SCHOOL OF NURSING
ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி

Registered with TVEC
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION SRI LANKA



உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வேலை வாய்ப்புக்கள்அதிகளவில் பெற்றுத்தர ஒரே தாதியர் பாடசாலைக்கு 2017 வருடத்திற்க்கான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்

நுளைவுக்கான அடிப்படை தகைமைகள்
- க.பொ.த. சா/த 5 பாடங்களில் சித்திபெற்றிருத்தல்
- உயரம் 4 அடி 10 அங்குலம் இருத்தல் வேண்டும்
- வயதெல்லை : 16 - 30 இடைப்பட்டிருத்தல்

JOB CONFIRM

பயிற்சி நெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு
TVEC நிறுவனத்தினால் NVQ சான்றிதழ் வழங்கப்படும்.

நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர்
வெற்றிடங்களை நிரப்பும் முகமாக

IVA NURSING SCHOOL
Kalmunai, Batticaloa, Vavuniya, Jaffna, Trincomalee.

IVA தாதியர் பாடசாலையானது O/L, A/L தகுதியுடைய மாணவர்களை
இனங்கண்டு அவர்களுக்கான

01. Nursing (O/L - 5 S) 02. MLT (A/L -Bio)
03. Pharmcacist (A/L-Bio 3S or O/L - 5 S)

- கல்விகளை ஒரு வருட காலத்திற்கு குறைந்த கட்டணத்தில் முறையாக வழங்கி அரச, தனியார் வைத்தியசாலைகளில் அதிக சம்பளத்துடன் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கின்றது.
- வட கிழக்கு மாகாணங்களில் கடந்த 7 வருட காலமாக மிகவும் பிரபல்யமான எமது IVA தாதியர் பாடசாலையானது அரச TVEC அங்கீகாரம் பெற்றுள்ளதுடன் NVQ Level தர சான்றிதழ்களையும் வழங்குகின்றது.
- எனவே 2017 ஆம் வருடத்திற்கான 3 ஆம் கட்ட விண்ணப்பங்கள் கோரப்படும் இச்சந்தர்ப்பத்தில்

உங்கள் பதிவுகளுக்கு இன்றே முந்திக்கொள்ளுங்கள்

IVA NURSING SCHOOL
071 872 2350, 076 605 3096

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

சஸ்வின் உணவகம்



காலை, இரவு சிற்றுண்டி, மதியம் புரியாணி, பிறைட்ரைஸ், கொத்துரொட்டி என்பன சிறந்த முறையில் தயாரித்து வழங்கப்படும். விஷேட நிகழ்வுகளுக்கும் ஓடர்களுக்குப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் யாழ் - கொழும்பு Van Car, Service, உள்ளூர் சேவை, திருமண சேவை, கார் வசதிகளும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

நியூ சஸ்வின் உணவகம்
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
077 260 0678

பிறிமியர் என்டெர்பிறைசெஸ்

வல்லிபுர ஆழ்வார் இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

* இலத்திரனியல் தராசு மற்றும் பில் மெசின் விற்பனைக்கு உண்டு.
* இலகுத்தவணை முறையில் பெற்றுக்கொள்ள முடியும்.
* திருத்தம் மற்றும் சேர்விஸ் செய்து தரப்படும்.

FREE DELIVERY



075 041 1677, 076 362 6615

பருத்தித்துறை வீதி, குஞ்சர்கடைச் சந்தி, கரணவாய், கரவெட்டி.



# இலங்கையின் ஈழத்து
# சீரடி சாய் நாதரின் முதலாவது சித்திரத்தேர் ஆரோகண
## சிறப்பிதழ் - 04.10.2017

**இன்று (04.10.2017) புதன்கிழமை காலை 7.30 மணிக்கு நிகழும் ஏவிளம்பி வருடம் பூரட்டாதி நட்சத்திரமும் சதுர்த்தசி திதியும் அமிர்த சித்தயோகமும் கூடிய காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் ஈழத்து சாயிநாதர் முதலாவது சித்திரத்தேர் மங்களவாத்தியம் முழங்க பக்தர் புடைசூழ இரதோற்சவம் இடம் பெற கைகூடியுள்ளது.**

## வாழ்த்துச் செய்தி



நாவலர் வீதி, நல்லூரில்அமைந்துள்ள சீரடி சாயி மந்திர் தேர்த்திருவிழா 04.10.2017 புதன்கிழமை நடைபெற இருக்கின்றது. சீரடி சாயி நாதர் சித்திரத் தேரேறி பக்தர்களுக்கு அருள் பாலிக்க வீதி உலா வரும் இச் சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துச் செய்தி ஒன்றை சீரடி சாயி மந்திர் பக்தர்களுக்கு வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். காலத்துக்குக் காலம் இறைவன் எம்மை வழிநடத்துவதற்கும் அருளாட்சி புரிவத ற்கும் பல்வேறு அவதாரங்களை எடுத்து பூமியில் எழுந்தருளுவார் என்பது எமது மத நம்பிக்கை. பாபா போன்ற பல அவதாரங்கள் எம்முள் தோன்றி மக்களை இறை நம்பிக்கையுடன் கூடிய சீரிய வாழ்க்கை முறைக்கு இட்டுச் சென்றிருக்கின்றனர். சீரடி சாயிநாதரின் சமயம் கடந்த வழிகாட்டலின் கீழ் வாழத் தலைப்படுகின்ற மக்களின் வழிபாட்டு நிலையமாக நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடி சாயி மந்திர் நிலையம் விளங்குகின்றது. இதன் செயற்பாடுகள் முற்றுமுழுதாக மக்களை வழிப்படுத்துகின்ற தன்மையுடையதாக இருக்கின்றன. இவ்வாறான வலாக்கஸ்தலங்கள் காலங் கடந்தும் வாழுவன. சீரடி சாயிநாதரின் வழிகா ட்டலில் அனைவரும் இன்புற்றிருக்க எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து எனது வாழ்த்த ரையை நிறைவு செய்கின்றேன்.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர் , வடமாகாணம்.**

## அருளாசிச் செய்தி



சீரடி சாயி மந்திர் பாபா கோயிலில் இன்று தேர்த்திருவிழா. யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள இந்த அருள்மிகு ஆலயத்தில் நடைபெறுகின்ற 2017 வருடாந்த திவ்ய உற்சவத்திலே இன்று ரதோற்சவம்.

அற்புதங்காட்டி ஆனந்த கோலாகல வாழ்வு தருகின்ற இக் கோயிலின் மூல மூர்த்தியான ஸ்ரீ சீரடி சாயி பாபா எழுந்தருளி வீற்றிருந்து ஆரோகணித்து அருள்புரிய ஒரு புதிய தேர் செய்யப்பட்டிருப்பது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் வந்து வழிபாடியற்றி மகிழ்வுறும் இந்த ஸ்ரீ சீரடி பாபாவான வர் இன்றைய புரட்டாதி 14 ஆம் நாள் புதன்கிழமை நன்னாளிலே புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத் தேரிலே ஏறி நேரிலே கவின்மிகு காட்சி தருகின்ற அற்புத அழகு சொல்லில் அடங்காதது. அப்பேறபட்ட சீரடி பாபாவின் மகிமை பொருந்திய மங்கள ரதோற்சவம் சீரோடுஞ் சிறப்போடும் நிறைவாகி நலமே நடைபெற அருளாசிகள் நல்கி உளமாரப் பிரார்த்தித்து நல்லைக் குருமணியின் பத்மமலர்ப் பாதம் பணிந்து ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குருமுதல்வர்**
**இரண்டாவது குரு மஹா சந்நிதானம்**
**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்,**
**யாழ்ப்பாணம்.**

## ஆசியுரை

எல்லாப் புகழும் இறைவனுக்கே



அகில இலங்கை யாழ்.நல்லூர் நாவலர் வீதியில் மடத்தார் பதி சீரடி சாயி மந்திரின் இரதோற்சவ நிகழ்வில் வெளி யீடு செய்யப்படும் சிறப்பு மலருக்கு இதயம் கனிந்த வாழ்த்துக்கள். தாயின் கருவறை முதல் இறுதி வரை எம்மை வழி நடத்தி செல்வது மத வழிபாடுகளினால் வரும் நல்லொழுக்கம் வாழ்வியலும் என அண்ணல் முகம்மது ஸல் சொன்னார்கள். இந்த நிகழ்வில் கலந்துகொள்ளும் பக்த அடியார்கள் அனைவருக்கும் இறைவனின் நல்லாசி பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றேன். போற்றுகின்றேன். இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லை என்று சொல்வதில்லை.

**மௌலவி ஆ.யூஊ ஜாபிர் (நத்லி)**
**டுபஷ் இமாம் சின்ன மூகைதின்,**
**ஜிம்மாப்பள்ளி, யாழ்ப்பாணம்.**

## ஆசியுரை

யாழ். சீரடி மந்திர் ஆன்மீகப்பணி சிறக்கட்டும்.

சிவபூமி எமது ஈழமணித்திருநாட்டின் யாழ்ப்பாண நன்னகரிலே நல்லூர் பகுதியிலே சீரடி சாயி பாபாவுக்கு ஆலயம் அமைத்து சிறப்பாக இயங்கிவரும் சீரடி சாயி மந்திர் இலங்கையில் வேறு எங்கும் இல்லாதவாறு சீரடி சாயி பாபாவுக்கு சித்தி ரத்தேர் அமைத்து தேர்த் திருவிழா கொண்டாடுவது பாராட்டுதற்குரியது. சிவாகம அனுஷ்டானங்களை அதிகமாக பின் பற்றி இவ்வாலயத்தில் நடைபெறும் கிரியைகள் மூலம் பக்தப் பெருமக்கள் அமைதி அன்பு, சகிப்புத்தன்மை, பொறுமை போன்ற நற்பண்புகளை வளர்க்க யாழ். சீரடி சாயி மந்திர் எடுத்துவரும் முயற்சிகள் நல்லவண்ணம் நடந்தேற திருக் கேதீச்சரப் பெருமானின் இறை அருள் வேண்டி ஆசிகூறுகின்றேன்.

**புலவர் அ.திருநாவுக்கரசு, இணைச்செயலாளர்,**
**திருக்கேதீஸ்வரம்,மன்னார்.**

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



நல்லூர் நாவலர் வீதியில், மடத்தார் பதி சீரடி சாயி மந்திரின் மஹோற்சவ விஞ்ஞாபனத்தில் வெளியீடு செய்யப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். சீரடி சாயி அடியவர்களுக்கு அருள் மழை பொழியும் ஆலயமாகும். இவ் ஆலயம் சிறிய ஆலயமாக இருப்பினும் பெரும் அருள் வெளிப்பாட்டினை வெளிப்படுத்தியிருப்பதனை அறியக் கூடியதாக உள்ளது. ஆலயத்தின் அடியவர்கள் வியாழக்கிழமை யில் சீரடி சாயியை தரிசிக்கும் காட்சிகள் இவ் ஆலயத்தின சிறப்பினை மேலும் வெளிப்படுத்தியிருப்பதனை அறியக் கூடியதாக உள்ளது. ஆலயத்தின் அடியவர்கள் வியாழக் கிழமையில் சீரடி சாயியை தரிசிக்கும் காட்சிகள் இவ் ஆயைத்தின் சிறப்பினை மேலும் வெளிப்படுத்தும் அதேவேளை ஏனைய அடியவர்களுக் கும் காட்சி கொடுக்கும் வகையில் சீரடி சாயி தேர் ஏறி வலம் வருவதும் சிறப்புகுரியது. இந்த வகையில் இவ் ஆலயம் மேலும் வளரவும், தேர்த்திருவிழா மஹோற்சவ விஞ்ஞாபனம் சிறப்புற அமையவும் உழைக்கும் ஆலயத்தினர் அடியவர்கள், தொண்டர்கள் அனைவரும் பாராட்டுதல்களுக்கு உரியவர்கள். சீரடி சாயியின் மஹோற்சவ விஞ்ஞாபனத்தில் வெளியீடு செய்யும் சிறப்பு மலர் சீரடியின் சிறப்புக்களை வெளிக்கொண்டுவரும் எனக் கூறிக் கொண்டு இப்பணியில் ஈடுபட்ட அனைவரையும் பாராட்டி சிறப்பு மலர் மலர்ந்து நறுமணம் பரப்ப என் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா.வேதநாயகன், அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## ஆலய ஸ்தாபகர்



என் தாயாகவும் தந்தையாகவும் எல்லாமாகவும் என்னுடன் இருந்து வழி நடத்தும் என் சாய் நாதனே உன்னை எனது இல்லத்தில் நீ பிரதிஸ்டை செய்ய கட்டளை இட்டது முதல் இன்று வரை உனது விந்தையான லீலைகளினால் ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் சம்சார மற்றும் ஆன்மீக ஆசைகளையும் வேண்டுதல்களையும் நிறைவேற்றும் சாய் நாதர் அடுத்தடுத்து பல லீலைகளை அரங்கேற்றி தமக்கான தேரை பல பக்தர்களின் பங்களிப்பினால் நிர்மானித்தும் தந்துள்ளார். இவ் எளிய அடியவனாகிய நான் தமது முதலாவது சிற்ப ரதம் திருவிழா காண இருக்கும் நன் நாளில் இந்த ரதம் நிர்மானிக்க பங்களிப்பு செய்த அனைவருக்கும் சாய் நாதரின் திருவருள் கிட்ட தத்தாகிரேயர் சௌரூபமான ஷிர்டி சாய் நாதரின் பாதங்களில் வேண்டி பணிகின்றேன்.

**ராகவன்**
**பாலச்சந்திரன்**

## அருளாசி பொழியட்டும்



எல்லோருக்கும் பொதுவான பரம்பொருளுக்கு வந்தனம் என்னை ஷிர்டி சாய் நாதரின் முதலாவது சிற்ப தேரை நிர்மாணிக்க பணித்த கடவுளுக்கு நன்றி கலியுகத்தில் மகான்களுக்கு செய்யும் ஆராதனைகள் பரம்பொருளுக்கு செய்வதற்கு நிகரானது என கீதையில் கூறப்பட்டு உள்ளது. இந்த பாரத துணைக்கண்டத்தில் அவதரித்த ஷர்டி சாய்நாதரின் நல்லூர் இல் அமைந்துள்ள ஆலயத்திற்கு ரதம் செய்வித்ததில் நான் ஆத்ம நிறைவு கொள்கின்றேன். என்ன தன் ஆலயத்திற்கு வரவளைத்து முதல் என்னை தேர் நிர்மானிக்கும் காலம் வரை அவரே என்னுடன் இருந்து இப்பணியை செய்வித்ததாக நான் உணருகின்றேன். இத் தேர் திருவிழா காணும் மகத்தான தினத்தில் அனைத்து பக்தர்களுக்கும் சர்வவியாபியான சாய்நாதர் அருளாசி பொளிய வேண்டும் என அந்த ஷிர்டி சாய் இறைவனையே வேண்டி நிற்கின்றேன்.

**விஸ்வப்பிரம்மஸ்ரீ செல்லையா பாலச்சந்திரன்**

## ஆசியுரை

கலியுகக் காலத்தில் இறைவன் பல அவதார புருஷர்களாகத் தோன்றி மக்களை ஆன்மீக உணர்வு கொண்ட வர்களாக மாற்றுகின்றார்கள். சீரடி சாயி பாபாவைப் போற்றி மக்கள் வழிபாடுகள் உற்சவங்கள் செய்து மனம் மகிழ்கிறார்கள். சீரடி சாயி பாபா வலம் வருவதற்காக இன்றைய நன்நாளில் புதிய சித்திரத்தேர் அமையப்பெற்று தேர்த்திருவிழா நடைபெறுவது சாலப்பொருத்தமாக அமைகின்றது. அனைவருக்கும் நல் ஆசிகளையும் வாழ்த் துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

**சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்.**

## ஆசியுரை



யாழ்ப்பாணத்தில் நல்லூர்ப் பதியில் [illegible] எழுந்தருளி தம்மை நாடி வரும் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றார். இவ்வாலயம் ஈழத்து சீரடி என அழைக்கப் பெறுகின்றது. ஐயப்ப பக்தராகிய இராகவன் சாமி அவர்கள் தமது சொந்த இடத்தில் இவ்வாலயத்தை நிறுவி அடியார்களின் பேருதவியுடன் பரிபாலித்து வருகின்றார். வியா ழக்கிழமை தோறும் அடியார்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றி வழிபட்டு வருகின்றனர். சாயி நாதருக்கு புதிய சித்திரத் தேர் அமையாதது பெருங்குறையாக இருந்தது அக்குறை இம்முறை தீர்வதாக அருள்பாலித்துள்ளார்.

18 அடி உயரம் கொண்ட புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நிகழ்கின்றது. சித்திரத்தேர் விழா சிறப்புற வாழ்த்துவதுடன் இதனை நிர்மாணித்த சிற்பாசாரியார் செல்லையா பாலச்சந்திரன் குழுவினருக்கும் இராகவன் சாயி குடும்பத்தினருக்கும் சாயி பக்தர்களுக்கும் எனது நல்லாசிகளை கூறுகின்றேன்.

"வேத சிவாகம ஞானபானு"
பிரம்மஸ்ரீ கு.சோமசுந்தர குருக்கள்,
பிரதமகுரு - பர்வதவர்தனி அம்மன் கோவில்,
உரும்பிராய்.

## ஆசியுரை

மங்களம் பொங்கும் ஏவிளம்பி வருஷம் புரட்டாதி திங்கள் 14 அம் நாள் 30.09.2017 சனிக் கிழமை விஜயதசமி அன்று ஈழத்து சீரடி சாயியின் புதிய சித்திரத் தேரோட்ட விழா. சீரடி சாயி நாதரின் பக்த அடியார்களே ஈழத்து யாழ்ப்பாண பூமியில் இன்று எம்பெருமான் சாயிநாதருக்கு முதல்முறையாகப் புதிய சித்திர தேர் விழா. ஈழத்து காளிகா சிற்பா லய அதிபர் விஸ்வ பிரம்மஸ்ரீ செ.பாலச்சந்திர ஆச்சாரியார் ஸ்தபதியின் கைவண்ணத்தில் பாபாவின் வரலாற்றோடு கூடிய சிற்பத்தேர் உருவாக்கப்பட்டுள்ளது. தேர் வெள்ளோட்ட விழா சிறப்பாக அமைய வேண்டுமென்று சுவாமி ஐயப்பனை பிரார்த்திப்பதோடு புதிய வர்ண ரதத்தில் கருணை மிகு சாயு நாதர் எழுந்தருளுவதையும் தேர் வடம் இழுத்துப் பாபாவின் திருவருளைப் பெற்று வாழ்க வாழ்க வளர்க வளர்க என ஆசி கூறும்.

**இந்துமத குரு, பிரம்மஸ்ரீ தானு வாசுதேவ சிவாச்சாரியார்,**
**சபரிசதாசன் ,**
**சபரிமலை குருசுவாமி**
**சிவஞான பாஸ்கரன்.கிரியாகால மலை,**
**சபரிசகான விநோதன்.**

## "தெய்வத் தமிழ்ச்சுடர்" தரும் வாழ்த்துச் செய்தி



இன்று பொன்னான ஒரு நன்னாள். நாவலர் வீதியில் அமைந்துள்ள கலியுக கண்கண்ட தெய்வம் சீரடி சாயி பாபா கோவி லில் இரதோற்சவம் அழகாகச் செய்யப்பட்ட புதிய சித்திரத்தேரில் சீரடி பாபா ஆரோகணித்து வருகின்ற அற்புதத் திருவிழா இன்று நடைபெறுகின்றது. இந்த ஆலயம் ஓர் அருள்மிகுந்த ஆலயமாகும். அற்புத ஆனந்த நிம்மதி நிறைந்த வாழ்வு தரு கின்ற ஸ்ரீ சீரடி சாயி பாபா எழுந்தருளி வீற்றிருந்து தம்மை வழிபடும் அடியார்களுக்கு அருள்மழை பொழியும் அற்புதத் திருத்தலம் இந்த அருள் மிகு ஆலயத்தில் இன்று நடைபெறுகின்ற புதிய தேர் சிறப்புத் திருவிழா சிறப்புடன் நிகழ ஆசி கூறி வாழ்த்துகின்றேன். 'சீரடி சாயி மந்திர்" என அழைக்கப் பெறுகின்ற இந்த ஆலயத்தைச் சிறந்த முறையில் நிர்வகித்துப் பரி பாலனஞ் செய்கின்ற சீரடி சாயி பக்தர்கள் நலமுடன் வாழ்ந்து முன்னேற்றமடைந்து எல்லா நலன்களும் பெற்று சீரோடும் சிறப்போடும் திகழவேண்டுமென்று சாயி பதம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!"

**ஆதீன சமயப் பிரசாரகர்,**
**தெய்வத்தமிழ்ச்சுடர். இராசையா ஸ்ரீதரன்**

## ஆசிச்செய்தி

சீர்திகழும் மங்களகரமான ஹேவிளம்பி வருஷத்தின் மஹா உற்ஸவம் நிகழும் வண்ணம் சீர்டி பாபா சுவாமியின் திருவ ருளினால் இனிதே நிறைவேற வாழ்த்துகின்றோம். சர்வலக்ஷ்ண சாந்த சொரூப ஸாநித்தியம் அருளும் பாபா சாமியின் சித்தப்படி இவ்வாண்டு புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் ரதோற்ஸவம் நிகழ இருப்பதால் மேலும் அவனருளாலே அவன் தாள் வணங்கி இனிதே நிறைவேற எமது நல்லாசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக. சீர்டி பக்தரின் திருவிழா உபயத்தவர்களுக்கும் தொண்டர்களுக்கும் அடியவர்களுக்கும் மற்றும் சீர்டி ஆலய அறங்காவலர் களுக்கும் நிர்வாக ஸ்தாபனத்தார்க்கும் பரிபாலனர்களுக்கும் எல்லா நலமும் உண்டாக வாழ்த்துகின்றோம். சாந்தசொரூப லக்ஷ்ணம் பொருந்திய சீர்டி பாபாவின் திருவருளினால் ரதோற்சவம் திருவீ தியுலாக் காட்சி தந்தருளி அடியவர்க்கும் நல்குவார் என வாழ்த்துகின்றோம். பல்லாண்டு காலந்தோறும் நல்லாசிகள் உரித்தாக வாழ்த்தி வணங்குகின்றோம். மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம். தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி. இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

திருச்சிற்றம்பலம்

**ஷர்மாஜி**


## திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்







No-01, 2nd Floor,
Ruban Complex,
Stanley Road, Jaffna.
021 222 4452

Tharraneiy
Printers & Arts
Plastic Badges, Brass, Silver Badges - Awards(Computer Letter Cutting), Flags Banner Tiles(Cloth, Digital Banner), Rubber Stamps (Polymer, Free ink), Vehicle Number Plates, Advertisement, Name Boards, Marble Cubs, Granite Stone Works Tamil, Singhala, English Languages and other Works.
NO:-541,(426,306),K.K.S Road, Manohara Theater View, Jaffna.
021 567 3012/ 078 914 1288
Mail: rajeethara9@gmail.com

KAMALESWARY TEX
214 Main Street, Colombo 11
Tel: 011 245 2878/077004 7922
25 -27 Grand Bazaar,Jaffna
Tel: 021 2226303/ 0770047988
180-1-A-16, Keyer Street, Colombo -11.
Tel: 011 4734820/011 2345936
Email:
kamaleswarytex@gmail.com

MEGA Printers
Professional Printing & Designing Centre
41D, Racca Road, Jaffna.
(Near the Bosco School)
021 221 7939
Mega Printers

Siva Kaneshan Textiles
Wholesale & Retail Dealers in Textiles
Specialist in Wedding Sarees
Grand Bazaar, Jaffna.
021 222 2063

திருமுருகன் கொம் நெற்
வெளிநாடுகளுக்கான
பொதிகள்
சேவை
DHL
216, K.K.S Road,
Jaffna.
077 755 4528

Te lesoon
NO:- 32 K.K.S.Road,
Chunnakam – 021 224 1552
NO:- 259C Power House Road,
Jaffna – 021 221 7995
1st Floor Cargils Squire,
Jaffna
021 221 5793
SMART Phone's
and CCT Camera
Hot Line :- 071 190 7466
Page :- Telesoon Jaffna

தரமும் விலையும் எங்கள் பாரம்பரியம்
சி.எஸ். லிங்கநாதன் அன் கோ
புடவை மாளிகை
இல.13,14,15,
பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8107
021 222 3139